# நமது செட்டிநாடு

மலர் 10 ✿ மணம் 10 ✿ ஸ்ரீ குரோதி ஆண்டு ✿ மாசி ✿ பிப்ரவரி 2025 ✿ ரூ.25
Namadhu Chettinad ✿ Volume 10 ✿ Issue 10 ✿ February 2025 ✿ Rs.25




பழனிக்கு பாதயாத்திரையாகச் செல்லும் பாரம்பரியமிக்க
நகரத்தார் காவடிகளின் காட்சி


Institute of Technology
Chettinad Academy
of Research and Education
(Deemed to be University)
MANAMAI CAMPUS
From bridges to AI, Engineering makes it possible!
B.Tech (AI&DS)*
B.Tech (Cyber Security)*
B.Tech (CS & Medical Engg)*
B.Tech (IT)*
B.Tech (ECE)*
B.Tech(CSE)*
B.Tech*
4 years
ADMISSION OPEN 2025-26
MANAMAI CAMPUS
SCAN TO REGISTER
844 789 2022
manamaiadmissions.care.edu.in
Nallur - Manamai, ECR, Behind Great Lakes Institute of Management, Thirukalukundram taluk, Chennai - 603102.
*Subject to Approval

நமது செட்டிநாடு

மலர் 10 மணம் 10 பிப்ரவரி 2025
ஸ்ரீ குரோதி ஆண்டு மாசி மாதம்

ஆசிரியர்: ந.ஆவுடையப்பன்

ஆசிரியர் குழு:
புதுவயல் செல்லப்பன்
குழ.கதிரேசன்
ஆறாவயல் ஆர்எம்.சண்முகம்
முனைவர் எம்.எஸ்.ஸ்ரீலக்ஷ்மி
விசாலாட்சி சுப்பிரமணியம்

புதிய சந்தா, சந்தா புதுப்பித்தல்,
தட்டச்சு: முரு.மலர்விழி
வடிவமைப்பு: பி.தாமோதரன்
விளம்பரம் தொடர்புக்கு:
99622 43750

இணைய இதழ் முகவரி: www.namadhuchettinad.com

செய்திகள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

நமது செட்டிநாடு மாத இதழ்
ராணி சீதை அரங்கம், 3–வது தளம்,
603, அண்ணா சாலை, சென்னை - 600 006
தொலைபேசி: 044–42951888

**கரு.மணிகண்டன்**
மக்கள் தொடர்பு அலுவலர்
காரைக்குடி 86818 28284

இதழ் சந்தா விவரம்

| | |
|---|---|
| ஓராண்டு | ரூ.300 |
| இரண்டாண்டு | ரூ.500 |
| ஐந்தாண்டு | ரூ.1250 |

கட்டுரைகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

மின்னஞ்சல்
namadhuchettinad@gmail.com

வாட்ஸ்ஆப்
9962243750



# எல்லோரும் படிக்க ஏழிளந்தமிழ்

மூதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கனார் அவர்கள் சிறார்கள் இயல்பான தமிழ் இலக்கணத்தினைப் பெற்று மொழித் திறன் ஊற்று போல பத்து வயதிற்குள் படிந்துவிடும் விதமாகவும் உயர்ந்த வாழ்வியல் கருத்துக்களையும், ஆன்மிகத்தையும் அறிந்து கொண்டு சிறப்புற வாழ வழிகாட்டும் வகையில் “ஏழிளந்தமிழ்” என்ற தலைப்பில் ஏழு நீதி நூல்களைத் தேர்வு செய்து அந்நூல்களுக்கு எளிய உரை எழுதி சிறிய நூலாக வெளியிட்டுள்ளார்கள். இந்நூலில் ஔவையார் அருளிய ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய நூல்களும், அதிவீரராமபாண்டியர் எழுதிய வெற்றிவேற்கை எனும் நறுந்தொகை, சிவப்பிரகாசர் படைத்தளித்த நன்னெறி மற்றும் உலகநாதர் உலகுக்களித்த உலகநீதி என ஏழு நீதி நூல்கள் கொண்டது. இந்நூல்கள் மிக எளிய தமிழில் உயர்ந்த கருத்துக்களை இளைஞர்களுக்கு வழங்கக் கூடிய விதமாக அமைந்தாலும், எல்லா வயதினரும் திரும்பத் திரும்பப் படித்து அதன்படி நடக்க வேண்டும். அவ்வாறு நடந்தால் அவர்களின் எண்ணமும், மனமும் முதிர்ச்சி அடைவதுடன் நல்லறம் பெருகும். தமிழ் மொழி சிறக்கும் என்பதில் ஐயமில்லை. நகரத்தார் நலன் அமைப்பு சார்பில் இந்நூலினை அச்சிட்டு நம் பாரம்பரிய பெருமையை மீட்டெடுக்கும் வண்ணம் பல்வேறு ஊர்களில் தக்கவர்களைக் கொண்டு சிறுவர் சிறுமியருக்கு இந்நீதிநூலின் அவசியத்தை அவர்கள் மனதில் பதியும்படி கற்பித்து வருகிறார்கள். இந்த வகுப்புகளில் கலந்து கொள்ள இயலாத பலர் உள்ளனர். அவர்களும் இந்நூலினை படித்துப் பயன் பெற வேண்டும் என்பது நமது விருப்பமாகும். சமீபத்தில் இந்நூலினை திருமண விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப் பரிந்துரை செய்தோம். திருமண வீட்டாருக்கு உடன்பாடு இருந்தாலும், அவர்களின் உறவினர்கள் யார் இந்தக் காலத்தில் நூல்கள் படிக்கிறார்கள். ஏன் இந்த வீண் செலவு எனத் தெரிவித்து, மண வீட்டாரைத் தன்னம்பிக்கை இழக்கும் வண்ணம் தெரிவித்துள்ளனர். இருந்தாலும் மண வீட்டார் 2000 படிகள் அச்சிட்டு திருமண விழாவில் விருந்தினர்களுக்கு வழங்கியுள்ளனர். சில பக்கங்களைப் படித்த விருந்தினர்கள் இந்நூலுக்கு அடிமையாகி மணவீட்டாரிடம் கூடுதல் பிரதிகள் வேண்டி தொந்தரவு செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் மணவீட்டார் திருமணம் முடிந்த பின்னரும் கூடுதலாக 1000 படிகள் அச்சிட்டு வேண்டியவர்களுக்கு வழங்கியுள்ளார்கள். சிறப்பு வாய்ந்த இந்நூலை நம்மவர்கள் விசேஷ காலங்களில் விருந்தினர்களுக்கு அன்பளிப்பாக வழங்கலாம். இந்நூல் அரசுடைமை ஆக்கப்பெற்றுள்ளதால் யார் வேண்டுமானாலும் அச்சிட்டு வெளியிடலாம். செலவு குறைவு. பலன் அதிகம். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு அந்நூலினை நமது செட்டிநாடு இதழில் தொடர்ந்து வெளியிட முடிவு செய்து, இந்த இதழிலிருந்து தொடங்குகிறோம். அனைவரும் படித்துப் பயன் பெறுங்கள். அடுத்தவரையும் படிக்கத் தூண்டுங்கள். ♦

திருச்சி ஸ்ரீ வளத்தி உ
சிட் பண்ட்ஸ் (பி) லிட்.
துவக்கம் 2005
VALATHI 2005
வளத்தி ஸ்ரீ சிட் பண்ட்ஸ் (பி) லிட். ஸ்ரீ முத்துமீனா சிட் பண்ட்ஸ் (பி) லிட்.
பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை
எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு
ரூ. 1,00,000/- முதல் ரூ. 30,00,000/- வரை
அதிகபட்ச உச்சவரம்பு 30% முதல் 40%வரை
பல்லாண்டு கால நம்பிக்கை ! நாணயம் ! நேர்மையான அணுகுமுறை!
இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.
0431-2760064
0431-7968005
TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.
VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,
SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,
94439 86143
"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6-வது கிராஸ் - கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143
"ஸ்ரீ வளத்தி"
9/1, (4/1), அருணோதயா அபார்ட்மெண்ட்
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093
Cell : 91235 71029
எண். 1, முதல் தளம்,
பழைய சொக்கநாதர்-
-கோவில் தெரு,
குமார் மெடிக்கல்ஸ் மாடியில்
மதுரை - 625 001.
Cell : 89034 90064
★ வாய்மையே வெல்லும் ★ tvcfpl@gmail.com www.valathichitfunds.com

## உள்ளே...


செட்டிநாட்டிற்கு யுனெஸ்கோ அங்கீகாரம் மிஸெல் அட்மென்ட் - பெர்னார்ட் டிராகன் சிறப்புப் பேட்டி .................................... 06

வாங்க... வாங்க... வியட்நாமுக்கு வாங்க.. 10

நகரத்தார் திருப்பணிகள்.................... 12

திருமாலின் திவ்ய தேசங்கள் ...,........... 14

கண்டவராயன்பட்டி ஸ்ரீ தண்டாயுதபாணி திருக்கோவில் குடமுழுக்கு விழா........... 16

பழனி பாதயாத்திரை .......................... 18

ஜமீன்தார் சுவாமிகள் குருபூஜை விழா .. 20

தொழில் தொடங்கலாம் வாங்க ....... 21

இஸ்ரோவின் சாதனைகளில் நகரத்தாரின் பங்களிப்பு ...................... 26

நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு .... 28

மனிதனையும் பழக்கலாம் ............ 32

உங்களுடன் உரையாடுங்கள் ...... 33

திருமந்திரச் சுவை ...................... 34

இராம காவியம் .............................. 35

ஔவை ஆத்திசூடி - உரை செம்மல் வ.சுப.மாணிக்கனார் ..... 36

பார்த்தேன்... படித்தேன்... பகிர்கிறேன் .... 38

நகரத்தார் சிகரத்தார் ...................... 40

கைப்பிடியில் கம்ப்யூட்டர் ............. 42

சந்தா படிவம் !................................ 44

பாரபட்சம் வேண்டாம் ................. 45

Vees Star™
Diamonds & Jewelry

ஸ்ரீ அடைக்காத்தாள் பெரியகருப்பண்ண சாமி துணை

GIA CERTIFIED SOLITAIRE



CHENNAI: W-182, NORTH MAIN ROAD ANNA NAGAR WEST EXTN., TN-600 101.
SURAT: SURAT DIAMOND BOURSE DREAM CITY KHAJOD, GUJARAT - 395007.
www.vstardiamonds.com

CHENNAI I SURAT I MADURAI I KARAIKUDI




S. விஜயகுமார்  V. விசாலாட்சி
பள்ளத்தூர்

CHENNAI - 044 4553 6003 1, 9383007477

MADURAI - 9884473330

KARAIKUDI - 9884803349



# செட்டிநாட்டிற்கு யுனெஸ்கோ அங்கீகாரம்

## மிஸெல் அட்மென்ட் - பெர்னார்ட் டிராகன் சிறப்புப் பேட்டி



பழ.கைலாஷ்

செட்டிநாட்டிற்கு சுற்றுலா பயணிகள் பலர் வெளி மாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் வருகிறார்கள், செட்டிநாட்டு வீடுகளையும் கோயில்களையும் சுற்றி பார்க்கிறார்கள். புகைப்படம் எடுக்கிறார்கள். பின்னர் அடுத்த சுற்றுலா தலத்திற்கு சென்று விடுகிறார்கள். ஆனால், பிரான்ஸ் நாட்டிலிருந்து செட்டிநாட்டுக்கு சுற்றுலா வந்த இருவர் செட்டிநாட்டு வீடுகள் மேல் காதல் கொண்டு கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக செட்டிநாட்டிலேயே வசித்து வருகின்றனர். மேலும், இவர்கள் 'செட்டிநாடு' யுனெஸ்கோ (UNESCO)வின் 'உலக பாரம்பரிய இடங்கள்-தற்காலிக பட்டியலில்' (Tentative list) இணைய பெரும் பங்காற்றியுள்ளனர்.

நான் கடந்த மாதம் இவர்கள் இருவரையும் கொத்தமங்கலம் 'சாரதா விலாஸ்'-ல் ஒரு மதிய வேளையில் சந்தித்தேன். ஒருவர் பெயர் மீஸெல் அட்மென்ட் (Michel Adment) மற்றொருவர் பெயர் பெர்னார்ட் டிராகன் (Bernard Dragon). இந்த 'சாரதா விலாஸ்' கி.பி.1905-ஆம் ஆண்டு சி.அ.சு.செல்லப்ப செட்டியாரால் கட்டப்பெற்ற அழகிய மாளிகை. இந்த வீட்டை தற்போது இவர்கள் இருவரும் ஹெரிடேஜ் ஹோட்டலாக (Heritage Hotel) நடத்தி வருகின்றனர்.

இவர்களுடன் உணவருந்திக் கொண்டு உரையாடலைத் தொடங்கினேன்...

**தமிழில் பேசுவீர்களா? நீங்கள் இருவரும் உறவினரா? நண்பர்களா? உங்களைப் பற்றி கூறுங்கள்?**

**அட்மென்ட் :** நாங்கள் இருவரும் நண்பர்கள், இருவரும் கட்டிடக் கலைஞர்கள் (Architects), இருவரும் பிரான்ஸ் குடிமகன்கள். எங்களுக்கு சுத்தமாக தமிழ் தெரியாது. ஆனால் கொஞ்சம் புரியும்; பேச வராது.

**டிராகன் :** எனது சொந்த ஊர் மசாய்ஸ், இது பிரான்ஸின் தெற்கு பகுதியில் உள்ளது. அட்மென்ட் பிறந்தது அல்ஜீரியா அது அப்போது பிரான்ஸின் காலனி நாடு, இரண்டு வயது இருக்கும் போது அவர் குடும்பத்தார் பாரிஸ் வந்துவிட்டனர், அவர் வளர்ந்தது பிரான்ஸில் தான்.

**செட்டிநாடு பற்றி எப்படி தெரியும்? எப்போது இங்கு வந்தீர்கள்?**

**அட்மென்ட் :** அது பெரிய கதை நான் கொஞ்சம் சொல்கிறேன், டிராகன் மீதியை சொல்வார். நாங்கள் இருவரும் பிரான்ஸில் ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் ஆர்கிடெக்ட்-ஆக பணியாற்றி வந்தோம், உலகம் முழுவதும் பல கட்டிடங்களை வடிவமைத்துள்ளோம். இப்படி 1998 வாக்கில் சீனாவில் தங்கியிருந்து ஒரு பெரிய திட்டத்தில் பணியாற்றி வந்தோம். தினசரி வேலைகள் இருக்கும். ஓய்வு நேரம் மிகக் குறைவு. வேலைப் பளு அதிகமாக இருப்பதால் எல்லாவற்றையும் ஒரு ஆறு மாத காலத்திற்கு ஒதுக்கி வைத்துவிட்டு, கொஞ்ச காலம் எங்காவது சுற்றுலா செல்லலாம் என யோசித்து, இந்தியா செல்ல முடிவெடுத்தோம்.

**டிராகன் :** முதலில் மும்பை வந்திறங்கினோம். மும்பை விமான நிலையத்தில் சென்னைக்கான விமானத்தை தவற விட்டுவிட்டோம். இப்போது இருப்பது போல் 1998-ல் நிறைய விமானங்கள் இல்லை. மும்பை விமான நிலையத்தில் அடுத்த



சாரதா விலாஸ் முகப்பு





புனரமைப்பின் போது

விமானத்திற்காக காத்திருந்த போது கைடு புக்கில் (Guide Book) மதுரை கோயில் கோபுரங்களை பார்த்தோம். நேரடியாக மதுரை வந்திறங்கினோம் மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்றோம். இரவு நேரத்தில் விளக்கொளியில் கோயில் மிக அழகாக இருந்தது. சொல்ல வார்த்தையே இல்லை! பின்னர் கேரளா கொச்சின் சென்றோம். அங்கு பழைய மரத்தூண்கள், நாற்காலிகள் வாங்கிக் கொண்டு பிரான்ஸ் சென்றோம், மூன்றே வாரத்தில் அத்தனை பொருட்களையும் விற்று விட்டோம். பெரும் லாபம் கிடைத்தது. தொடர்ந்து சில முறை கேரளா வந்து பழைய பொருட்களை வாங்கிச் சென்றோம். அப்படி ஒருமுறை கேரளா வந்த போது ஒரு மரத்தூணை வாங்கினோம் இது செட்டிநாட்டு தூண் என்றார்கள், செட்டிநாடு என்கிற வார்த்தையை அப்போது தான் கேள்விப்பட்டோம். 2000-ஆவது ஆண்டில் முதன்முதலாக செட்டிநாடு வந்தோம். இந்தப் பிரம்மாண்டத்தில் மூழ்கினோம்! நாங்கள் ஏதோ பத்து, இருபது பெரிய வீடுகள் இருக்கும் என நினைத்து வந்தோம், ஆனால், இங்கு ஆயிரக்கணக்கான மாளிகைகள் இருப்பதைக் கண்டு வியந்து போனோம்.


**செட்டிநாட்டை யுனெஸ்கோ (UNESCO) வரை எடுத்து சென்றது எப்படி? செட்டிநாட்டில் தங்களை எது ஈர்த்தது?**


அட்மென்ட்: எங்களை ஈர்த்தது செட்டிநாட்டு கட்டிடக்கலை என்று சொல்வதைவிட, இவ்வளவு எண்ணிக்கையிலான பெரிய வீடுகள் தான் ஈர்ப்புக்குக் காரணம். உலகில் எங்குமே இது போன்ற வீடுகள் ஒரே இடத்தில் இல்லை. நாங்கள் முதன்முதலாக செட்டிநாடு வந்த போது முதன்முதலில் பார்த்த ஊர் பள்ளத்தூர், தெருக்களின் அழகில் மயங்கினோம். அப்போதெல்லாம் யாரும் தங்கள் வீட்டைப் பார்க்க அனுமதிக்க மாட்டார்கள், இருப்பினும் பள்ளத்தூரில் சில வீடுகளுக்கு உள்ளே நுழைந்து பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது, மகிழ்ச்சி தந்தது. பிரான்ஸ் சென்றவுடன் நண்பர்களிடம் செட்டிநாட்டு வீடுகள் பற்றிக் கூறினோம். சில நாட்களில் மீண்டும் செட்டிநாடு வந்த போது, திருமதி மீனாட்சி மெய்யப்பன், திருமதி விசாலாட்சி இராமசாமி, திரு.எம்.வி.சுப்பையா செட்டியார் ஆகியோர் உள்ளிட்ட பலரை சந்தித்து செட்டிநாடு கட்டிடக்கலை மற்றும் செட்டியார் வாழ்க்கை முறை பற்றிக் கேட்டறிந்தோம். எங்களுக்கு முன் 1990-கள் இறுதியில் செட்டிநாட்டு வீடுகளையும், செட்டியார்களையும் ராபர்ட் துலாவ் (Robert Dulau) எனும் பிரெஞ்ச்காரர் ஆய்வு செய்து பிரெஞ்ச் மொழியில் ஆய்வு நூலாக எழுதியிருந்தார். அதை படித்தும் தெரிந்து கொண்டோம்.



சாரதா விலாஸ் ஹால் வீடு

டிராகன் : பிரான்ஸில் யுனெஸ்கோ அமைப்பினரை சந்தித்து செட்டிநாடு பற்றி கூறினோம். அவர்கள் டெல்லியில் உள்ள யுனெஸ்கோவின் இந்திய தலைமையகத்திற்கு எங்களை அறிமுகப்படுத்தினார்கள். டெல்லியில் ஒரு பெண்மணி தான் யுனெஸ்கோ தலைமைப் பொறுப்பில் இருந்தார், அவர் உள்ளிட்ட அங்குள்ள யாருக்கும் செட்டிநாடு பற்றி தெரியவில்லை. நான் செட்டிநாடு பற்றி புகைப்படங்களுடன் செய்திகளை எடுத்துக் கூறிய பின் 2006-ல் Revive Chettinad Campaign என்னும் திட்டத்தை கொண்டு வந்தார்கள். அதில் எங்களுடன் மாவட்ட கலெக்டர், எம்.எல்.ஏ., அமைச்சர், அண்ணா பல்கலைக்கழக ஆர்கிடெக்ட் மாணவர்கள், செட்டியார்கள் மற்றும் உள்ளூர் பொதுமக்கள் கலந்து கொண்டனர். இது காரைக்குடியில் நடைபெற்றது. இத்திட்டத்தின் நோக்கம் செட்டிநாட்டு வீடுகளை அழிவிலிருந்து மீட்டெடுப்பது. பின்னர் 2008-ல் பிரான்ஸ் நாட்டு ஆர்கிடெக்ட் மாணவர்கள் மற்றும் இந்திய ஆர்கிடெக்ட் மாணவர்களுடன் சேர்ந்து நாங்கள்





புனரமைப்பிற்குப் பின்

கொத்தமங்கலம், லெட்சுமிபுரம், கானாடுகாத்தான், பள்ளத்தூர் ஆகிய ஊர்களில் உள்ள செட்டியார் வீடுகளை ஒவ்வொன்றாக ஆய்வு செய்யத் தொடங்கினோம். வீடுவீடாகச் சென்று செய்திகளை சேகரித்தோம். வீடுகள் கட்டிய காலங்களை கணக்கிட முகப்பு தோற்றம் மற்றும் வீட்டின் வடிவமைப்பைக் கொண்டு வகைப்படுத்தினோம்.

ஊரின் வரைபடம், அதில் தெருக்கள், பழைய வீடுகள், வடிகால் அமைப்புகள், ஊருணிகள், கோயில்கள் ஆகியவற்றை அளந்து வரைந்தோம். செட்டிநாட்டின் புவியியல், பொருளாதாரம், செட்டியார்களின் வரலாறு மற்றும் மக்களின் இன்றைய வாழ்க்கை முறையை பதிவு செய்தோம். பின்னர் 2010-ல் யுனெஸ்கோ சார்பில் நாங்கள் "Chettinad Village Clusters of Tamil Merchants" என்னும் தலைப்பில் இவற்றை புத்தகமாக எழுதி ஆங்கிலத்தில் வெளியிட்டோம். அந்த புத்தகத்தை 2012-ல் பிரெஞ்ச் மொழியிலும் யுனெஸ்கோ சார்பில் வெளியிட்டோம். இப்படியாக தொடங்கிய எங்கள் பயணம் பல கட்டப் பணிக்கு பின், 2014 ஏப்ரல் மாதம் செட்டிநாட்டை 'உலக பாரம்பரிய இடங்கள்-தற்காலிகப் பட்டியலில்' இணைத்தது யுனெஸ்கோ.

### இந்த ஹெரிடேஜ் ஹோட்டல் தொடங்கியது எப்படி?

**அட்மெண்ட் :** கிட்டத்தட்ட யுனெஸ்கோ பணி கதையும், சாரதா விலாஸ் கதையும் ஒரே இடத்தில் தொடங்கியது தான். 2007-ல் நான் சென்னையில் ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் ஆர்கிடெக்ட்-ஆக பணியில் சேர்ந்தேன், அதேநேரம் டிராகன் செட்டிநாட்டில் யுனெஸ்கோ பணியை தொடர்ந்து வந்தார். அப்போது பிரான்ஸ் நாட்டை சேர்ந்தவரும், நீம்ரானா ஹோட்டல்ஸ் (Neemrana Hotels) உரிமையாளருமான பிரான்சிஸ் வக்சியார்க் (Francis Wacziarg) மூலம் சாரதா விலாஸ் எங்களுக்கு அறிமுகமானது. அவர் 'நாம் மூவரும் இணைந்து சாரதா விலாஸை ஹெரிடேஜ் ஹோட்டலாக நடத்துவோம்' என்றார். ஆனால், அவர் சில காரணங்களால் விலகிக்கொண்டார். பின்னர் நாங்கள் இருவரும் கூட்டாகச் சேர்ந்து "Adment & Dragon Tourism & Cultural Development P.Ltd." எனும் நிறுவனத்தை இந்தியாவில் பதிவு செய்தோம். அதன்பின்னர் 2009-ல் சாரதா விலாஸ் உரிமையாளரான திரு.செல்லப்பன் அவர்களிடம் ஒப்பந்தம் செய்து இந்த வீட்டை குத்தகைக்கு எடுத்தோம். கொஞ்சம் கொஞ்சமாக வீட்டை புனரமைக்கத் தொடங்கினோம். இனிமேல் தான் பெரிய கதையே இருக்கு!

**டிராகன் :** ஆமாம்! இந்த வீட்டை புனரமைப்பது மிகுந்த சவாலான பணியாக இருந்தது. முதலில் வீட்டின் பல இடங்களில் ஒழுகியது, ஆகையால், வீட்டில் உள்ள நாட்டு ஓடுகளைப் பிரித்து பின் மீண்டும் அதே நாட்டு ஓடுகளை பரப்பினோம். அதில் சில ஓடுகள் உடைந்திருந்தது அவற்றுக்குப் பதிலாக வீட்டின் மாட்டுக் கொட்டகையில் இருந்த நாட்டு ஓடுகளைப் பயன்படுத்தினோம். இப்போது யாரும் நாட்டு ஓடுகளை பழுதுபார்ப்பதில்லை. சீமை ஓடுகள் மற்றும் சீட் மூலம் நாட்டு ஓடுகளை மாற்றி அமைக்கின்றனர். ஆனால், நாங்கள் பழமை குன்றாதவாறு வீட்டை சீரமைக்க எண்ணினோம். அப்படியே செய்தோம். வீட்டின் சுவர்களில் பெயிண்ட் அடிப்பதை முடிந்த வரை தவிர்த்தோம், பிரான்ஸில் இருந்து வாங்கி வந்த பிளீச்சிங் பவுடரைப் பயன்படுத்தி சுவற்றில் உள்ள அழுக்குகளை நீக்கினோம். மேலும் பிற்காலத்தில் அடிக்கப்பட்டிருந்த கெமிக்கல் பெயிண்ட்டை நீக்கி அதன் உள்ளே இருந்த ஒரிஜினல் ஓவியங்களை மீட்டெடுத்தோம். எங்குமே புதிய கிரானைட் கற்களை பயன்படுத்தவில்லை, பழைய தரைதளத்தில் தேவைப்படும் இடத்தில் மட்டும் ஆத்தங்குடி பூக்கல் பயன்படுத்தினோம். வீட்டின் வெளிப்புறம் இருந்த சுதை சிற்பங்கள் எல்லாம் முற்றிலுமாக சிதைந்திருந்தது. அவற்றை அதற்கான கலைஞர்களைக் கொண்டு புதிதாக செய்தோம். 2010 முதல் சிறப்பாக ஹோட்டலை நடத்தி வருகிறோம். இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் வந்து எங்கள் ஹோட்டலில் தங்குகின்றனர்.

### நீங்கள் செட்டிநாட்டவர்களுக்கு சொல்ல விரும்புவது?

நாங்கள் இருவரும் ஒரே வரியில் சொல்ல விரும்புவது "Revive Chettinad". செட்டிநாட்டை மீட்டெடுங்கள். யாரும் பழையவீட்டை இடிக்காதீர்கள். புனரமைக்கும் போதும் பழமை குன்றாதவாறு புனரமையுங்கள். தற்போது யுனெஸ்கோவின் தற்காலிக பட்டியலில் உள்ள செட்டிநாட்டை நிரந்தர பட்டியலுக்கு கொண்டுவர சேர்ந்து முயற்சிப்போம். ♦

27 கிளைகள், 36 வருட அனுபவம்

சுற்றுலாவா யோசிக்கவே வேண்டாம்



# ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜென்ஸி

Incredible India

RECOGNIZED GOVT. OF INDIA TOURISM

98421 62416
97918 48265
98424 47305
98421 62265



H.O. 10, வடக்கு ஆவணி மூல வீதி. மதுரை–1

## SPECIAL TOURS

www.srimurugantravel.com

- 10 நாள் ஆக்ரா–காசி அயோத்தியா – மாதந்தோறும் 9,21 – Rs. 13500/-
- 13 நாள் டெல்லி–ஆக்ரா அயோத்தியா – மாதந்தோறும் 6,18,27 – Rs. 17500/-
- 6 நாள் ஸ்ரீரடி பண்டரிபுரம் – மாதந்தோறும் 1,8,15,22 – Rs. 8000/-
- 10 நாள் குஜராத்–துவாரகா பட்டேல்சிலை – மாதந்தோறும் 17 – Rs. 17000/-
- 17 நாள் பத்ரி–கேதார் கங்கோத்ரி–யமுனோத்ரி – மாதந்தோறும் 10,20 மே முதல் – Rs. 30000/-
- 13 நாள் பத்ரிநாத் கேதார்நாத் – மாதந்தோறும் 10,20 மே முதல் – Rs. 25000/-
- 14 நாள் முக்திநாத்–நேபாள் கொல்கத்தா – மாதந்தோறும் 18 – Rs. 27000/-
- 15 நாள் நவஜோதிர்லிங்கம் – மாதந்தோறும் 18 – Rs. 20000/-
- 10 நாள் சிம்லா–மணாலி ஆக்ரா – ஏப் 1,8,15,22,29 மே. 1,8,20,27 – Rs. 18000/-
- 13 நாள் அமர்நாத் – ஜுலை முதல் – Rs. 16000/-

| | | | | |
|---|---|---|---|---|
| 2 நாள் மும்பை–ஸ்ரீரடி தினந்தோறும் Rs. 14990/- | 6 நாள் காசி அயோத்தியா Rs. 34990/- | 6 நாள் சிங்கப்பூர் மலேசியா Rs. 84,990/- | 5 நாள் ஸ்ரீலங்கா Special Rs. 44,990/- | 5 நாள் துபாய் அபுதாபி Rs. 74,990/- |
| 4 நாள் கோவா SPL Rs. 24990/- | 8 நாள் பத்ரி–கேதார் வாரந்தோறும் ஞாயிறு Rs. 44990/- | 5 நாள் சிங்கப்பூர் மலேசியா Rs. 74,990/- | 8 நாள் Exclusive ஸ்ரீலங்கா Rs. 64,990/- | 7 நாள் சௌத்கொரியா Rs. 1,69,990/- |
| 4 நாள் டெல்லி–ஆக்ரா ஜெய்ப்பூர் வாரந்தோறும் வியாழன் Rs. 26990/- | 12 நாள் பத்ரி–கேதார் கங்கோத்ரி–யமுனோத்ரி வாரந்தோறும் திங்கள் Rs. 54990/- | 10 நாள் சிங்கப்பூர் மலேசியா தாய்லாந்து Rs. 1,34,990/- | 5 நாள் இந்தோனேசியா பாலி Rs. 64,990/- | 7 நாள் கென்யா Rs. 1,59,990/- |
| 5 நாள் அந்தமான் ஹேவலோக் தினந்தோறும் Rs. 29990/- | 6 நாள் முக்திநாத் நேபாள் ஏப்ரல் 1,18 மே 1,10,18 Rs. 29990/- | 8 நாள் சிங்கப்பூர் மலேசியா தாய்லாந்து Rs. 94,990/- | 6 நாள் வியட்நாம் கம்போடியா கலாங் விரிகுடா Rs. 94,990/- | 9 நாள் ஆஸ்திரேலியா Rs. 2,94,990/- |
| 5 நாள் காஷ்மீர் குல்மார்க் வாரந்தோறும் புதன் Rs. 44990/- | 6 நாள் பூடான் SPL வாரந்தோறும் செவ்வாய் Rs. 44990/- | 5 நாள் பாங்காக் பட்டாயா Standard Rs. 52,000/- | 7 நாள் Exclusive சீனா Rs. 1,54,000/- | 11 நாள் ஆஸ்திரேலியா நியூசிலாந்து Rs. 5,29,990/- |
| 5 நாள் டார்ஜலிங் கேங்டாக் வாரந்தோறும் புதன் Rs. 39990/- | 8 நாள் காஷ்மீர் லே–லடாக் வாரந்தோறும் ஞாயிறு Rs. 64990/- | 4 நாள் பாங்காக் பட்டாயா Basic Rs. 37,990/- | 10 நாள் ஹாங்காங் மக்காவ் Rs. 1,34,990/- | 9 நாள் ஜப்பான் Rs. 2,94,990/- |
| 7 நாள் NORTH EAST வாரந்தோறும் திங்கள் Rs. 44990/- | 5 நாள் சிம்லா–குளு மணாலி வாரந்தோறும் புதன் Rs. 27990/- | 5 நாள் புக்கட் கராபி Rs. 64,990/- | 6 நாள் ரஷ்யா Special Rs. 1,34,990/- | 12 நாள் ஈரோப் Special Rs. 2,74,990/- |
| 3 நாள் பூரி புவனேஸ்வர் வாரந்தோறும் வெள்ளி Rs. 24990/- | 5 நாள் லே–லடாக் வாரந்தோறும் Rs. 54990/- | 8 நாள் Exclusive தாய்லாந்து Rs. 94,990/- | 4 நாள் எகிப்து Special Rs. 1,29,990/- | 4 நாள் உஸ்பெகிஸ்தான் Rs. 54,990/- |
| 7 நாள் குஜராத் துவாரகா வாரந்தோறும் செவ்வாய் Rs. 35990/- | 6 நாள் நைனிட்டால் முசௌரி–கார்பெட் வாரந்தோறும் புதன் Rs. 34990/- | 4 நாள் மாலத்தீவு Special Rs. 59,990/- | 8 நாள் எகிப்து Cruise Rs. 1,65,990/- | 4 நாள் கஜகஸ்தான் அல்மைட்டி Rs. 74,990/- |

## கும்பமேளா ஸ்பெஷல் 2025



காசி அலகாபாத்
11 நாள் ரூ. 19,990/- முதல்





காசி அலகாபாத்
6 நாள் ரூ. 49,990/- முதல்

இது தவிர மேலும் பல சுற்றுலாக்கள் மற்றும் குரூப் சுற்றுலா, தனி நபர் சுற்றுலா, கல்வி, கம்பெனி குரூப் சுற்றுலாக்களுக்கு 97918 48265 / 98421 62416



PALANI

# HOTEL PL GRAND
PLEASANT STAY



KARAIKUDI

98421 62416 / 97918 48265
www.hotelplgrand.com

# வாங்க... வாங்க... வியட்நாமுக்கு வாங்க...

## 11 அண்டை நாடு – கம்போடியா



சோமலெ
சோமசுந்தரம்

### நினைவில் நிற்குமிடம்!



மிகப் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகளைப் போன்று நாங்கள் கம்போடியாவிற்கு சென்றதற்கு மூல காரணம் ‘அங்கோர் வாட்’ கோவில். ‘அங்கோர் வாட்’ பிரம்மாண்டமாக இருந்தாலும், பாழடைந்த இடிபாடுகள் நிறைந்த இடமாக இருந்ததால் எங்களின் எதிர்பார்ப்பு சற்று ஏமாற்றமாகவே மாறியது.

அங்கோர் வாட் கோவிலுக்கு அருகில் உள்ள “காட்டுக் கோவில்” (Jungle Temple) கம்போடியாவில் நாங்கள் பார்த்த அனைத்திலும் நினைவில் நிற்குமிடமாக எங்களைப் பெரிதும் வியப்பில் ஆழ்த்தியது.

இந்தக் காட்டுக் கோவிலின் சிறப்பே அவற்றைத் தாங்கியுள்ள அத்தி மரங்கள் தான். நம் கிராமப் பகுதிகளில் காடுகளுக்குள் உள்ள கோவில்களை ‘காட்டுக் கோவில்’ என்போம். இங்கோ, கோவிலே காடாகிய காட்சியைக் காண முடிகிறது! ஒவ்வொரு சன்னதியின் நடுவேயும், ஓரங்களிலும் பிரம்மாண்டமான, பல நூறு வருடங்களான அத்தி மரங்களின் வேர்களும், தண்டுகளும், கிளைகளும் உள்ளன. அவற்றைப் பார்த்தவுடன், இவற்றை இப்போதாவது வெட்டி, கோவிலைக் காப்பாற்றலாமே என்ற உணர்வு வருகிறது. சன்னதிகளையும், கோபுரங்களையும் தாங்கிப் பிடித்து வளர்கின்ற மரங்களை வெட்டினால் கோவில்கள் சரிந்து விடும் என்றார் எங்களுடன் வந்த சுற்றுலா வழிகாட்டி.



1186 –ஆம் ஆண்டில் ஏழாம் ஜெயவர்மனால் கட்டப்பட்ட இந்தக் கோவிலின் பெயர் ‘டா ப்ரோஹ்ம்’ (Ta Prohm). இன்றோ "Jungle Temple" என்ற பெயரே நிலைத்து விட்டது. இக் கோவிலைப் பராமரிக்க அப்போது 80,000 பேர்கள் நியமிக்கப்பட்டதாகக் கல்வெட்டுக் குறிப்புகள் உள்ளன.

பதினைந்தாம் நூற்றாண்டில் ‘கமெர்’ பேரரசின் சரிவிற்குப் பின் இப்பகுதியில் வாழ்ந்தவர்கள் பல்லாயிரக்கணக்கானோர் காணாமல் போனதாலும், புலம் பெயர்ந்ததாலும், வெறிச்சோடிப்போன இக்கோவிலை அத்தி மரங்கள் முற்றுகையிட்டன. அவற்றின் மிகவும் தடித்த வேர்கள் கோவில் நடைபாதைகளையும், சுவர்களையும் தகர்த்து, இயற்கையின் ஆட்சியில் அவை விரும்பிய திசைகளிலெல்லாம் வளர்ந்தன.

ஒரு சன்னதியின் அருகே பெரிய அத்தி மரம், சன்னதியின் நுழைவாயிலில் தோரணமாக மாலை கட்டிப்போட்டது போல் வேர்களும், கிளைகளும் சன்னதிக்குள்ளே அம்மரத்தின் கிளைகள், சன்னதியைச் சுற்றி "கழுத்தை நெறிப்பது போல்" ராட்சச வேர்கள். அண்ணாந்து வானத்தை நோக்கிப் பார்த்தால் அம்மரத்தின் பச்சைப்பசேல் என்ற இலைகள்... இப்படி வேறெங்கும் பார்க்க முடியாத, மிகவும் தத்ரூபமான, தனித்துவமான இயற்கைக் காட்சிகள்! நம்மைஅறியாமலேநாம்அடுத்தடுத்து புகைப்படம் எடுக்கும் நிலைக்குத் தள்ளப்படுவோம். கம்போடியாவில் அதிகமாக புகைப்படம் எடுக்கப்படும் இடம் இந்தக் காட்டுக் கோவிலே எனக் கேள்விப்பட்ட போது நான் சற்றும் வியப்படையவில்லை.

புகழ்பெற்ற அமெரிக்க நடிகை ஏஞ்சலினா ஜோலி நடித்த டோம் ரெய்டர் படம் இக்காட்டுக் கோவிலில் 2001–இல் எடுக்கப்பட்டதால் மேற்கத்திய நாடுகளில் காட்டுக்கோவிலின் ரசிகர்கள் எண்ணிக்கை பெருகியது.

யுனெஸ்கோவின் “பாரம்பரிய தளமாக” இக்கோவில் அறிவிக்கப்பட்டு, இந்திய தொல்லியல் அமைப்பு உட்பட

பல அமைப்புக்களின் உதவியுடன் மறுசீரமைப்புப் பணிகள் தொடர்கின்றன.

### திருவள்ளுவர் சிலை

விஜிபி உலக தமிழ்ச் சங்கத்தின் முயற்சியில் உலக நாடுகள் பலவற்றில் திருவள்ளுவர் சிலைகள் நிறுவப்பட்டு வருவது பாராட்டுக்குரியது. அதன் தொடர்ச்சியாக 141-வது சிலை கம்போடிய நாட்டின் சியாம் ரீப் நகரில் உள்ள மாகாண அரசின் கலை பண்பாட்டுத் துறை அலுவலக வளாகத்தில் செப்டம்பர் 2022-இல் நிறுவப்பட்டுள்ளது.




### விநாயகருக்கு அபிஷேகம் வேண்டாம்

திருவள்ளுவர் சிலை இருக்கும் வளாகத்தில் அரசு அனுமதியுடன் புதிய விநாயகர் சிலையும் வைக்கப்பட்டுள்ளது. சிலை வையுங்கள். ஆனால், அபிஷேகம், தீபம் போன்ற இறைவழிபாடுகளுக்கு அனுமதி கிடையாது என அரசு தெரிவித்து விட்டதாம். கம்போடியர்களில் 95 சதவிகிதத்தினர் புத்த மதத்தை கடைபிடிப்பதாலும், மீண்டும் இந்து மதம் கம்போடியாவில் வந்து விடுமோ என்ற பயத்தாலும் அவர்கள் வழிபாட்டிற்கு அனுமதி தரவில்லை என்று அமைப்பாளர்களில் ஒருவராகிய திருமதி தாமரை என்னிடம் கூறினார்.

### கம்போடிய அவியல்

கம்போடிய தேசிய உணவின் பெயர் 'அமக்'. மீன் அல்லது காய்கறிகளுடன், தேங்காய்ப் பால், எலுமிச்சைப் புல் (lemon grass) மற்றும் இஞ்சி, மஞ்சள், பூண்டு கலந்த "க்ரொயங்" (kroeung) மசாலையுடன் வாழை இலையில் வேக வைத்து தயாரிக்கப்படும் இந்த உணவு நம் ஊர் அவியல் போன்று மிகவும் சுவையாக உள்ளது.






பச்சை வாழை இலையில் செய்யப்பட்ட சதுரமான தொன்னையிலோ அல்லது இளநீரை எடுத்துவிட்டு தேங்காயுடன் உள்ள இளநீர் மட்டையிலோ, அவியலை அவர்கள் பரிமாறும் பாங்கிலேயே, 'அமக்'கை சுவைக்கும் முன்பே, அதைக் கண்டு மயங்கி விடுவோம்! 'ஆள் பாதி, ஆடை பாதி' என்ற பழமொழியே நம் நினைவில் வரும்.

### அப்சரா நடனம்

புதிய ஊர்களுக்குப் பயணம் செய்யும் போது அப்பகுதியின் வரலாறு, கலை, கலாச்சாரங்களைப் பிரதிபலிக்கும் கலை நிகழ்ச்சிகளைப் பார்த்து மகிழ்வது முக்கியம். அவை நம் பயண நினைவில் நீண்ட காலம் இருப்பதோடு மட்டுமல்லாமல் நம் பொது அறிவையும், கலை உணர்ச்சியையும் வளப்படுத்தும். தமிழ் நாட்டில் பரத நாட்டியம், கேரளாவில் 'களரிப் பயட்டு' தற்காப்புக் கலை நிகழ்ச்சிகள் போன்று, கம்போடியாவில் பார்த்து மகிழ வேண்டியது 'அப்சரா' நடன நிகழ்ச்சி.




கம்போடிய ராமாயண நடனத்தில் கடைசிக் காட்சியாக வரும் 'அப்சரா' வில் மெதுவாக நடனமாடும் நங்கையரின் கருணை, நேர்த்தி, அவர்கள் அணிந்துள்ள கவின்மிகு தலைக் கிரீடம் ஆகியவை இக்கலையின் தனிச் சிறப்புக்களாகும். (தொடரும்)



சென்ற இதழ் தொடர்ச்சி

# நகரத்தார் திருப்பணிகள்



சொ.சொ.மீ.சுந்தரம்

115) திருவண்ணாமலை – (Pincode - 606 601):

13) காரைக்குடி, சா.நா.அ.நா. பசுமடம் கட்டினார்கள்.

14) இராமச்சந்திரபுரம், முரு.மு.அ. முத்தையா செட்டியார் பதினைந்தாயிரம் ரூபாய் செலவில் பசுமடம் அமைத்தார்கள்.

15) நகரத்தார்கள் ஒரு லட்சம் ரூபாய் செலவில் ஓயாமாரி அன்னதான மடம் கட்டினார்கள். கல்மண்டபம் கட்டச் செலவு பதினைந்து லட்சம் ஆயிற்று.

16) கோட்டையூர், மெ.க. குடும்பத்தார் ஒரு லட்ச ரூபாய் செலவு செய்து அன்னதான மடம் கட்டி, ஒரு லட்சம் ரூபாய் மூலதனமும் வைத்தனர்.

17) காரைக்குடி சா.நா. சாத்தப்ப செட்டியார் ஒரு லட்சம் மூலதனம் வைத்துச் சாதுக்கள் மடம் கட்டினார். 1891–ல் திறப்பு விழா நடந்தது.

18) காரைக்குடி, ஆவி.ப.முரு. முருகப்பச் செட்டியார் முப்பதாயிரம் ரூபாய் செலவில் தண்ணீர்ப்பந்தல் வைத்தார். சாதுக்கள் உணவு விடுதியும் கட்டினார்.

19) கோட்டையூர், அ.க.அ.மெ. வகையினர் தொண்ணூறாயிரம் ரூபாய் செலவில் மின் இயக்கப் பொறி அமைத்தனர்.

20) கோட்டையூர், அ.க.அ.மெ. வெங்கடாசலம் செட்டியார் வகையினர் சிவகங்கை தீர்த்தத்திற்கும், ஆயிரங்கால் மண்டபத்திற்கும் இடையில் கருங்கல் பலகையினால் பெரிய கோபுரம் முதல் வல்லாள மகாராஜா கோபுரம் வரை ரூபாய் இருபதாயிரம் செலவு செய்து தளவரிசை போட்டனர்.

21) கோட்டையூர், அ.க.அ.சித.வெ. நடேசன் செட்டியார், சக்தி விலாசத்திற்கும், பிரம்ம தீர்த்தத்துக்கும் மத்தியில் கருங்கல் தளவரிசை போட்டனர். ஆயிரங்கால் மண்டபத்திற்குத் தெற்கில் படி கட்டினர். பெரிய கோபுரத்தின் உள்பகுதியில் தளவரிசை போட்டனர்.

22) கோட்டையூர், ராம.பெ. நாராயணன் செட்டியார், பெரிய கோபுரத்திற்கு வெளியில் 16 கால் மண்டபத்தைச் சேர்ந்தார் போல் கிழக்குப் பக்கம், கருங்கல் தூண் நிறுத்தி, மரவேலைப்பாடுகள் செய்து, தாமிரத் தகட்டினால் கூரையமைத்து மண்டபம் கட்டினார்கள். இங்கே உற்சவ காலங்களில் அருணாசலேசர் எழுந்தருளுகிறார். இத்திருப்பணிச் செலவு ரூ.35,000/– ஆயிற்று.

23) கி.பி.1012 முதல் 1054–ஆம் ஆண்டு வரை முதலாம் ராஜேந்திரச்சோழன் காலத்தில் திருவண்ணாமலையில் வசித்து வந்த சில நகரத்தார்கள் செய்த சில திருப்பணிகள் ஆலயத்தில் உள்ள கல்வெட்டு எண். 67–ல் குறிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆலயத்தில் நடக்கும் 6 கால பூஜைகளில் 5 கால பூஜைக்குரிய நைவேத்தியங்கள் நகரத்தார்களால் கொடுக்கப் பெற்று வருகின்றன. உற்சவ மண்டகப்படிகள், சங்கபிஷேகம் ஆகியவை இன்று வரை நகரத்தார்களால் நடத்தப்படுகின்றன. திருவண்ணாமலையில் நகரத்தார் திருப்பணிகளை அளந்து பேச ஆயிரம் நாவு கொண்ட ஆதிசேடனாலும் முடியாது.

திருவண்ணாமலைக்கு வடக்கே இருபத்தைந்து கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது பலக்கிராகீசுவரர் கோயில். இது செய்யாற்றங் கரையிலுள்ள பழங்கோயிலாகும். இறைவன் பெயர் பலக்கிராகீசுவரர். இறைவி பெயர் பாலாம்பிகை. கோட்டையூர் க.வீ.சொ.வீ. அழகப்ப செட்டியார் இருபதாயிரம் ரூபாய் செலவில் இக்கோயிலுக்குத் திருப்பணி செய்து, புதுப்பித்து ஆங்கிரச (1932) ஆண்டு, ஆனி மாதம், 26–ஆம் நாள் திருக்குட நன்னீராட்டுச் செய்தார்கள். சிறு கோயில்களானாலும் தேடிச் சென்று திருப்பணியும், சிவப்பணியும் செய்தவர்கள் நகரத்தார்கள் என்பதற்கு இது மிகச் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

## உண்ணாமுலைத் தாயார் சந்நிதி:

திருஞானசம்பந்தர் திருவண்ணாமலைக் கோயிலையும், மலையையும் பார்த்ததும்,

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம் முழவதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.
(முதல் திருமுறை)

என்று பாடுகிறார். உண்ணாமுலைத் தாயாருக்கு முதலிடம் கொடுக்கிறார். நகரத்தார்கள் தங்கள் வீட்டுப் பெண் குழந்தைகளுக்கு உண்ணாமுலை என்றும், உமையாள் என்றும் பெயர் வைத்துப் பேணி வளர்க்கிறார்கள். திருவண்ணாமலையில் கி.பி.1179-ல் மூன்றாம் குலோத்துங்கச் சோழன் உண்ணாமுலைத் தாயாருக்குத் தனிச் சந்நிதி கட்டினான். நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் இச்சந்நிதியைத் தனிக் கோயிலாகக் கட்டி அண்ணாமலையாருக்கு இடப்பக்கத்தில் இந்தக் கோயிலை அமைத்தனர். இந்தக் கற்கோயிலுக்கு 12.6.1903-ல் திருக்குட நன்னீராட்டுச் செய்தனர். மீண்டும் 04.06.1944-ஆம் நாளிலும் 04.04.1976-ஆம் நாளிலும் திருக்குட நன்னீராட்டுச் செய்தனர்.

**பகவான் ரமணர் பாடம் நடத்தினார்:**

1920-ல் கிரிவலம் வந்த பகவான் ரமணர் ஈசான்ய மடத்துக்கு வந்தார். அங்கிருந்த சாத்தப்ப சுவாமிகள் ரமணரைக் கட்டியணைத்து வரவேற்று விருந்தளித்தார். அப்பொழுது மடத்தில் வேதாந்த வகுப்பு நடந்தது. கீதாசாரத் தாலாட்டு அன்றைக்குப் பாடம் சொல்லப்பட்டது. பகவான் ரமணர் ஒரு பாடலுக்கு விளக்கம் சொன்னார். கந்தாஸ்ரமக் கட்டுமானப் பணிகளுக்கு ஈசான்ய மடம் பொருளுதவி செய்தது. தீபாவளியன்று ரமணாசிரமத்துக்கு எண்ணெய், சீயக்காய், லங்கோடு ஆகியவை அனுப்பப்பட்டன.

**திருக்குட நன்னீராட்டுகள் (நகரத்தார் பணி):**

1) அண்ணாமலையார் ஆலயத்தில் விசுவாவசு ஆண்டு, வைகாசி மாதம், 30-ஆம் தேதி, 12.06.1903-ல் பெரும் பொருட் செலவில் ஆலயத்தைப் புதுப்பித்தும், அம்மன் கோயில் கட்டியும் திருவாபரணங்கள், வாகனங்கள் செய்து வைத்தும் திருக்குட நன்னீராட்டுச் செய்தனர்.

2) தாரண ஆண்டு, வைகாசி மாதம், 22-ஆம் நாள் (4.6.1944) பெரும் பொருட் செலவில் கோயிலைப் புதுப்பித்துத் திருக்குட நன்னீராட்டுச் செய்தனர். இவை இரண்டு திருக்குட நன்னீராட்டுகளும் நகரத்தார்களாலேயே செய்யப்பட்டன.

3) ராட்சச ஆண்டு, பங்குனி மாதம், 22-ஆம் நாள் (04.04.1976) நடந்த திருக்குட நன்னீராட்டில் யாகசாலை, மருந்து சாத்துதல், திருக்கல்யாணம், பஞ் சமூர்த்தி உலா, மண்டலாபிஷேகம் ஆகிய பணிகளை நகரத்தார்கள் ஏற்றுச் சிறப்பாகச் செய்தனர்.

4) சித்திரபானு ஆண்டு, ஆனி மாதம், 13-ஆம் நாள் (27.06.2002) நடந்த திருக்குட நன்னீராட்டில் யாகசாலை, மருந்து சாத்துதல், திருக்கல்யாணம், பஞ் சமூர்த்தி உலா, மண்டலாபிஷேகம் ஆகிய பணிகளை நகரத்தார்கள் ஏற்றுச் சிறப்பாகச் செய்தனர்.

5) இதே பணிகளை துன்முகி ஆண்டு, தை மாதம், 24-ஆம் நாள் (06.02.2017) நடந்த திருக்குட நன்னீராட்டிலும் நகரத்தார்கள் ஏற்றுச் சிறப்பாகச் செய்தனர். (திருப்பணிகள் தொடரும்)

டிசம்பர், 2024 இதழில் வெளி வந்த நகரத்தார் திருப்பணிகள் கட்டுரையில் (111) திருமுதுகுன்றம் தலைப்பின் கீழ் உள்ள பத்தியுடன் கீழ்க்கண்ட பத்தியையும் சேர்த்து படிக்கவும்...

இந்தச் சிவாலயம் அமராவதி புதூர் வயிநாகரம் வேங்கடாசலம் செட்டியார் அவர்களின் குமாரர் இராமநாதன் செட்டியார், அ. இராமநாதன் செட்டியார், அவர் தம்பி வேங்கடாசலம் செட்டியார் ஆகிய பெருமக்களால் தம் பொருள் கொண்டும், நகரத்தார் பொருளுதவி கொண்டும் ஆறு லட்ச ரூபாய் செலவில் திருப்பணி செய்யப் பெற்று விரோதிகிருது ஆண்டு, சித்திரை மாதம், 22-ஆம் நாள் (04.05.1911) திருக்குட நன்னீராட்டுச் செய்யப் பெற்றது. தேவகோட்டை பழ.சுப. ரூ.6,500/- செலவில் பசுமடமும், புதுவயல் வடு.ப.வ., ரூ.95,000/- செலவில் அன்னசத்திரமும் கட்டினர். அப்பு செட்டியார் ரூ.2,000/- செலவில் திருவாச்சி செய்தார். வயி நாகரம் குடும்பம், கண்டரமாணிக்கம் மெ.சி.பெரி.சோம. குடும்பம் இருவரும் இணைந்து ரூ.6,000/- ரூபாய் செலவில் நந்தவனம் அமைத்தனர். சாயரட்சைக் கட்டளைக்காக ரூ.25,000/- மதிப்புள்ள கிராமம் வாங்கி விட்டனர்.

தொடர்ந்து வரும் பத்திக்கு (112) திருவெண்ணெய்நல்லூர் என தலைப்பை சேர்த்து வாசிக்கவும்.

# மலைக்கோவில் தைப்பூசத் திருவிழா

நற்சாந்துபட்டிக்கு அருகில் உள்ள மலைக்கோவிலின் 23ஆம் ஆண்டு தைப்பூச விழா விரையாச்சிலை நகரத்தார் சங்கம் சார்பாக சிறப்பாக கொண்டாடப்பட்டது. 10-02-2025 அன்று நகர சுப்பிரமணிய கோவிலுக்கு வந்து காவடி கட்டி, இரவு காவடி பூஜையும் இரவு விருந்தும் நடைபெற்றது. 11-02-2025 அன்று காலை கோவிலில் இருந்து காவடி புறப்பட்டு மலைக்கோவில் வந்து வழிபாடும், மதியம் பொது அன்னதானமும் நடைபெற்றது. நகரத்தார்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

தகவல்: விரையாச்சிலை AN. சிதம்பரம் செட்டியார்




# திருக்கண்ணபுரம் – [18]

நா. சௌரிராஜன், கோட்டையூர்





நிலம் சூழ் கண்ணபுரமே போற்றி!
நீல மேகப் பெருமாளே போற்றி!
நடையழகு காட்டிய நாயகனே போற்றி!
சௌரி ராஜப் பெருமாளே போற்றி!
கண்ணபுரத் தாயாரே போற்றி! போற்றி!

*****

“திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீசௌரிராஜப் பெருமாளின் பெயரைச் சொன்ன மாத்திரத்திலேயே எனது துயர்கள் எல்லாம் பாழடைந்து போய்விட்டன. இனி எனக்கு என்ன குறை உள்ளது?” என்று நம்மாழ்வார் பாடுகிறார்.

“விரைந்து மோட்சம் அளிக்க வல்லவர் ஸ்ரீசௌரிராஜப் பெருமாளே” – என்று நைமிசாரண்யத்தில் உள்ள முனிவர்கள் எல்லாம் இங்கு வந்து தவம் செய்து மோட்சம் பெற்றதாகப் புராணங்கள் கூறுகின்றன. “ஸ்ரீரங்கம், ஸ்ரீமுஷ்ணம், திருவேங்கடம், சாளக் கிராமம், வானமாமலை, பத்ரி, நைமிசாரண்யம் இவைகள் எல்லாமே என் தலங்கள். அவைகள் அனைத்தும் முக்தி அளிக்க வல்லமை பெற்றவை. இவை எல்லாமாக இணைந்து முழுவதுமாக, நான் திருக்கண்ணபுர புண்ணிய சேத்திரத்தில் ஒரே இடத்தில் விளங்குகிறேன்” என்று கருட பகவானிடம் ஸ்ரீசௌரிராஜப் பெருமாள் கூறுகிறார்.

அளவிட இயலாத இத்தலத்தின் சிறப்புகளை ஒரு சில பக்கங்களில் எழுதி விளக்க இயலாது. பச்சைப்பட்டு விரித்தாற்போல எங்கும் வயல்களால் சூழப்பட்டு, இயற்கை எழில் கொஞ்சும், கண்டவர் வியந்து களிப்புறும் திருக்கண்ணபுரம் என்ற இந்த ஊர், குடந்தை, நாகை, மயிலாடுதுறை, திருவாரூர் ஆகிய ஊர்களுக்கு அருகாமையில் உள்ளது. யானை கட்டிப் போரடித்த சோழ வளநாட்டின் நெற்களஞ்சியத்துக்கும் இதயமாக விளங்கிய நன்னிலத்தில் இருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் உள்ளது.

கோயிலின் ராஜ கோபுரத்து அழகுடன், அதன் பின் ஓங்கி வளர்ந்த மரங்களும், பசுமை வளமும், கோயிலின் முன் உள்ள நித்திய புஷ்கரணியின் பேரழகும், ஆக, இவை அனைத்தும் ஒருங்கே காணும் போது, நம் மனதிற்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை! கோயிலில் நீலமேகப் பெருமாள் என்ற பெயரில் மூலவர், பண்டைக்காலத்தில் பெயரிடப்பட்டு வழங்கப்பட்டாலும், ஸ்ரீசௌரிராஜப் பெருமாள் என்ற உற்சவரின் நாமமே இத்திருத்தலத்திற்குப் பெருமை சேர்த்ததாகும். கண்ணபுரத்தமுதன் கண்டவர் வியக்கும் வடிவழகு கொண்டவர். தனிக்கோயில் கொண்ட நாச்சியாராகக் கண்ணபுரத் தாயார், பெருமாளின் வலதுபுறம் அமைதியாக அமர்ந்து காட்சி தருகிறார். மிகப்பெரிய பிரகாரத்தின் ஒரு மூலையில் வடநாட்டுப் பாணியில் பளிங்குச் சிலைகளாய் அமைந்த அழகு ததும்பும் ராதையுடன் இணைந்து நிற்கும் கிருஷ்ணர், இது ஒரு கிருஷ்ண சேத்திரம் என்ற பெருமையை உணர்த்துகிறது. கண்ணாடிகளால் நாற்புறமும் பதிக்கப்பட்ட பேரழகு வாய்ந்த பள்ளியறை இத்தலத்தில் உள்ள சிறப்பு அம்சமாகும்.

இத்தலத்துப் பெருமாள் மும்மூர்த்திகளின் வடிவமாகத் திகழ்கிறார். வைகாசி உற்சவத்தின் 7–ஆம் நாள் காலை, விஷ்ணுவாகவும், இரவு பிரம்மாவாகவும், அன்றே சிவனாகவும் காட்சி தருகிறார். இத்தலத்தின் விமானம் கண்களுக்குப் புலப்படுவதில்லை என்ற சிறப்பும் உண்டு. எல்லாவற்றிற்கும் மேலாக, அனைத்து வைணவத் திருத்தலங்களிலும் உள்ள சொர்க்கவாசல் இத்திருத்தலத்தில் மட்டும் கிடையாது. ஏனென்றால், இத்திருக்கண்ணபுரமே பூலோக வைகுண்டம் எனப் போற்றப்படுவதால், தனியாக சொர்க்கவாசல் இல்லை.

அரக்கர் குலத்தில் பிறந்தாலும், தர்மத்தையே உயிர்மூச்சாகக் கொண்ட விபீஷணாழ்வாருக்கு இங்கு தனிச்சந்நிதி உள்ளது. அத்துடன் அவருக்கு அருகே அவர் மகளும், அசோகவனத்தில் சீதாப்பிராட்டிக்கு எல்லா வகையிலும் உதவி செய்த உத்தமப் பெண் திரிசடையின் சிலையும் உள்ளது. வேறு எந்த ஒரு திருத்தலத்திலும் காண முடியாத ஒன்றை இங்கே காண முடிகிறது. “நீ கிடந்த அழகைத் திருவரங்கத்தில் கண்டேன். நின் நடையழகையும் நான் காண வேண்டும்” என்று விபீஷணர் கேட்க, “நீ திருக்கண்ணபுரத்திற்கு வா. அங்கு நடையழகு காட்டுவோம்” என்று பெருமாள் கூறி இங்கு நடையழகு காட்டியதாக ஐதீகம். இன்றும் அமாவாசை தோறும் நடக்கும் இந்த நடையழகு நிகழ்ச்சியைக் காணக் கண் கோடி வேண்டும்.

இக் கோயிலின் அர்ச்சகரான ஸ்ரீதரன் என்பவர் பெருமாள் மீது பெரும் பக்தி கொண்டு இறைப்பணி ஆற்றிக் கொண்டு இருந்த சமயம், மஞ்சரி என்ற பெண் மேல் காதல் கொண்டு இருந்தான்.

ஒரு நாள் பெருமாளுக்கு சூட்டி இருந்த மல்லிகை மலர் மாலையை அவள் தலையில் சூட்டி அழகு பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில், திடீரென்று தன் வருகையை முன் கூட்டியே தெரிவிக்காமல் சோழ மன்னன் கோயிலுக்கு வந்துவிட, மன்னனுக்கு கொடுக்க மலர் இல்லையே எனத் தன் காதலி மஞ்சரி கூந்தலில் இருந்த மலரை அவசரமாக எடுத்துக் கொண்டு கோயிலுக்கு ஓடி, அங்கே ஒரு தட்டில் அப்பூவை வைத்துப் பெருமாளின் பிரசாதம் எனக் கூறி, அதை மன்னனிடம் தந்தான். அந்த மலரைக் கண்களில் ஒற்றிக் கொண்ட சமயம், அதில் நீண்ட தலைமுடி இருப்பதைக் கண்ட மன்னன் அதிர்ச்சியடைந்து, “உங்கள் ஊர் பெருமாளுக்குத் தலையில் முடி உள்ளதா?” என அதட்டிக் கேட்க, அச்சமுற்ற ஸ்ரீதரன் நடுநடுங்கிப் போய் “ஆம்” எனக் கூறிவிட்டான். இதனால் கோபமுற்ற மன்னன், அவனைக் கைது செய்ய உத்தரவு இட்டதோடு, பெருமாள் தலையில் இருந்த கிரீடத்தை நீக்கச் சொல்லிப் பார்த்த போது, பெரும் வியப்படைந்தான். பெருமாளின் தலையில் முடி வளர்ந்து இருந்தது! அப்போதும் நம்பாத மன்னன் அந்த முடியைப் பற்றி இழுக்கச் சொன்னான். அந்த இடத்தில் இருந்து ரத்தம் பீறிட்டது. மன்னனின் மீதும் ரத்தத் துளிகள் தெறித்து விழுந்தன.

சோழ மன்னன் அரண்டு மிரண்டு போய் பெருமாளிடம் பணிந்து வணங்கித் தன் தவறை மன்னித்து அருள வேண்டினான். தன் பக்தனைக் காக்க வேண்டி, அவன் செய்த தவறை மன்னித்து அவனுக்காக முடி ஏந்திய பெருமாள், மன்னனையும் மன்னித்து ஆசி வழங்கினார். அது முதல் பெருமாள் சௌரி முடியுடன் காட்சி அளிக்கறார். சௌரி என்றால் வடமொழியில் யுகங்கள் தோறும் அவதாரம் எடுப்பவர் என்று அர்த்தம். 64 சதுர் யுகங்களைக் கண்டது இத்திருக் கோயில் என்று புராணங்கள் கூறுகின்றன. அத்துணை பழமை வாய்ந்த பெருமைக்கு உரியது இத்தலம்.

இவ்வூரில் வாழ்ந்து, பெருமாளுக்குத் திருப்பணி செய்து வந்த தீவிர பக்தனான “முனைய தரையர்” என்பவர், பெருமாளுக்குத் திருவாராதனம் செய்யாமல் ஒருநாளும் உணவு உண்ண மாட்டார். ஒருசமயம், வெளியூர் சென்று அவர் திரும்பிய போது அர்த்தசாமம் ஆகிவிட்டது. அவர் மனைவி ஆக்கி வைத்திருந்த இன்சுவைப் பொங்கலை, அந்த இரவில் அப்படிச் செய்ய இயலாமல் மானசீகமாகப் பெருமாளுக்குப் படைத்து வணங்கினார். மறுநாள் காலை கோயிலைத் திறந்த போது, எங்கும் அந்தப் பொங்கலின் நறுமணம் வீசியது,

பெருமாளின் மேனியிலும் அந்தப் பொங்கலும், நெய்யும் வழிந்தது கண்டு அனைவரும் மிக வியந்தனர். தன் அடியார் பக்தியுடன் படைத்ததைப் பெருமாள் மகிழ்வுடன் ஏற்றுக் கொண்ட அந்நிகழ்வை நினைவு கூறும் வகையில் இன்றும் அர்த்தசாமத்தில் “முனியோதரன் பொங்கல்” என்ற பெயரில் பொங்கல் வழங்கிடும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. நெய் ஒழுகப் படைத்து, வழங்கப்படும் இப்பொங்கலின் தனிச்சுவை வேறு எங்கும் காணவும், சுவைக்கவும் முடியாத ஒன்றாகும்.

இந்தத் தலத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் தீர்த்தவாரி என்ற உற்சவம் மிகப் பிரசித்திப் பெற்றது. இதற்காக ஸ்ரீசௌரிராஜப் பெருமாள் திருக்கண்ணபுரத்தில் இருந்து 10 மைல் தொலைவில் உள்ள கடற்கரைக்கு எழுந்தருளும் போது, வழி நெடுகிலும் மீனவர்கள் மட்டுமின்றி, இஸ்லாமிய சமூகத்தவர் என்று பலதரப்பட்ட மக்களும் அவரை மேள தாளத்துடன் வரவேற்று, அவர் மீனவப் பெண் பத்மினியை மணந்து கொண்டு சிறப்பித்ததால், “மாப்பிள்ளை….. மாப்பிள்ளை…” என்று கோஷமிட்டு மலர் தூவி மகிழ்ச்சி ஆராவாரம் செய்யும் காட்சிகள் கண்கொள்ளாக் காட்சியாகும். தீர்த்தவாரி என்ற இந்தக் கடற்கரை நிகழ்ச்சி நடக்கும் இடம் புதுச்சேரி மாநிலத்தில் உள்ளது. இப்படி ஒரு மாநிலம் விட்டு மற்றொரு மாநிலம் வந்து கடற்கரையில் நடக்கும் இந் நிகழ்ச்சிதனை இந்தத் திருத்தலத்தில் தான் கண்டுகளிக்க முடியும்.

கோயிலுக்கு எதிரே அமைந்துள்ள பெரிய அழகான குளம் நித்ய புஷ்கரணி எனப் பெயர் பெற்றது. கங்கை, யமுனை, தாமிரபரணி மற்றும் கடல் போன்ற சகல தீர்த்தங்களும், தங்கள் பாவம் நீங்கித் தூய்மை பெற்றிட இதனுள் புகுந்தன என்பது ஐதீகம். இதில் நீராடினால் அனைத்துத் தீர்த்தங்களிலும் நீராடிய புண்ணியம் கைகூடும். அத்துடன் கயா, காசிக் கங்கைக் கரை என்ற இடங்களில் நம் முன்னோர்களை நினைத்து வழிபடுவதை விட அதிகமான புண்ணியம் இங்கே கிடைக்கும் என்று புராணங்கள் கூறுகின்றன.

இந்தத் தீர்த்தத்தின் கரையில் தனிக் கோயில் கொண்டிருக்கும் அனுமன் அளவிட முடியாத சக்தி பெற்றவர்.

திருமங்கையாழ்வார் மட்டும் 104 பாசுரங்களைப் பாடித் தனக்கு எல்லாமே திருக்கண்ணபுரம் தான் என மகிழ்ந்துள்ளார். 5 ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட இத்திருத்தலம் 100-க்கும் மேற்பட்ட பாசுரங்களைப் பெற்றுள்ள ஐந்து திவ்ய தேசங்களில் ஒன்றாகும்! மொத்தம் 128 பாசுரங்கள்!

108 திவ்ய தேசங்களில் மிகவும் முக்கியமாகக் கருதப்படும் திவ்ய தேசங்கள் நான்கு ஆகும். அவை, முதலாவது திருவரங்கம். மேலை வீடு என்று இது அழைக்கப்படுகிறது. இரண்டாவது, வடக்கு வீடு என்று அழைக்கப்படும் திருவேங்கடம். மூன்றாவது, தெற்கு வீடு என்று அழைக்கப்படும் திருமாலிருஞ்சோலை. நான்காவது, கீழை வீடு என்று போற்றப்படும் இத்திருக்கண்ணபுரம்.

மற்ற மூன்று இடங்களிலும், மக்கள் கூட்டமும், பெரும் இரைச்சலும், ஆட்டம், ஆர்ப்பாட்டங்களும் அதிகம் இருக்கும் போது, இத் திருத்தலத்தில்தான் இயற்கைச் சூழலின் நடுவில் முழு அமைதி நிலவுகிறது. ஆரவார ஆர்ப்பாட்டங்களில் இருந்து விலகி, அமைதி வேண்டித்தான் பெருமாளே இங்கு குடிகொண்டு இருக்கிறார் என்றால் அது மிகையாகாது.

(பயணம் தொடரும்)

## கண்டவராயன்பட்டி

# ஸ்ரீ தண்டாயுதபாணி திருக்கோவில்

# குடமுழுக்கு விழா

மார்ச் 10-ஆம் தேதி, குடமுழுக்கு காண இருக்கும் ஸ்ரீ தண்டாயுதபாணி திருக்கோவில் கண்டவராயன்பட்டி, செட்டிநாட்டு ஊர்களில் ஒன்றான கண்டவராயன்பட்டி திருப்பத்தூர் அருகே உள்ளது. இவ்வூரில் பல தர்மங்கள், அறப்பணிகள், தேசியப் பணிகள் செய்த குடும்பம் தெ.சி.நா குடும்பம் ஆகும்.

தெ.சி.நா குடும்பத்திற்கு பிள்ளை வளர வந்த தேனப்ப செட்டியாருக்கு ஒரே மகன் சின்னக் கருப்பன் செட்டியார். சின்னக்கருப்பன் செட்டியாருக்கு நாச்சியப்பன் என்ற மகனும் சிகப்பி ஆச்சி, பெரியகருப்பி ஆச்சி என்ற இரு புதல்விகளும் இருந்தனர். நாச்சியப்ப செட்டியார் – நாச்சம்மை ஆச்சி தம்பதியருக்கு, தேனப்பன், சின்னக்கருப்பன், சுப்பிரமணியன், சொக்கலிங்கம் என்ற நான்கு புதல்வர்களும் கண்ணம்மை என்ற புதல்வியும் பிறந்தனர். பிள்ளை வளர வந்த இக்குடும்பத்தில் இன்று 52 புள்ளிகள் உள்ளனர்.

### ஸ்ரீ தண்டாயுதபாணி கோவில் தோற்றம்

ஸ்ரீ தண்டாயுதபாணி படத்தை தேனப்ப செட்டியாரும் வஞ்சினிப்பட்டி சாமியாரும் வைத்து வழிபட்டு வந்தனர். நாச்சியப்பரும் அதை வழிபட்டார். அந்த இடத்தில் ஸ்ரீ தண்டாயுதபாணிக்கு கோவில் கட்ட வேண்டும் என்ற தனது ஆவலை வெளியிட்டார். தந்தையின் ஆவலை அறிந்த புதல்வர்கள் நால்வரும் கோவில் கட்டும் பணியை தொடங்கினர்.

அக்காலகட்டத்தில் பெரும் செல்வந்தராக விளங்கிய இளைய மகன் சொக்கலிங்கம் கண்டவராயன்பட்டிக்கு புதுப்பட்டி விலக்கில் இருந்து ஆறு கிலோமீட்டர் தூரம் சாலை அமைத்து 600 புளிய மரங்கள் நட்டு அவர்களது தகப்பனார் நாச்சியப்ப செட்டியாரின் மணிவிழா அன்று 1922-ஆம் ஆண்டு திறந்து வைத்தார். சொக்கலிங்கம் செட்டியார் முன்கை எடுத்து தன் வீட்டருகே உள்ள இடத்தை கோவில் அமைப்பதற்கும், குளம் வெட்டுவதற்கும் வழங்கி பணியைத் தொடங்கினார். புதல்வர்கள் நால்வரும் இணைந்து திருப்பணியை நிறைவு செய்தனர். ஆங்கிரஸ ஆண்டு, ஆவணி மாதம், 27-ஆம் தேதி, (11.09.1932) ஞாயிற்றுக்கிழமை அன்று நாச்சியப்பர் முன்னிலையில் முதல் குடமுழுக்கு நடைபெற்றது. குடகு மலையிலிருந்து ஒரு பாறைக்கல் கொண்டு வந்து மலை மேல் ஸ்ரீ தண்டாயுதபாணி இருப்பது போல் செதுக்கி இக்கோவிலில் ஸ்ரீ தண்டாயுதபாணி சிலையை வைத்துள்ளனர். இதனைச் சுற்றி கல் மண்டபம் எழுப்பப்பட்டுள்ளது.

கல்மண்டபத்தில் நாச்சியப்பசெட்டியார் மற்றும் நாச்சம்மை ஆச்சியின் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. நாச்சியப்பரின் சகோதரிகள் இருவரும் ஸ்ரீ தண்டாயுதபாணி சன்னதி முன் பாவை விளக்காக வைக்கப்பட்டுள்ளனர்.



நாச்சியப்பரும் தான் மறையப் போவதை முன்கூட்டியே அறிந்து உறவினர்கள், பிள்ளைகள், பேரன் பேத்தி, அனைவரையும் வரவழைத்து தேவாரம், திருவாசகம், பாடி மறைகள் ஓதி அபிஷேக ஆராதனைகள் நடைபெறச் செய்தார். அவர் முன் சொல்லியபடி சுபானு வருடம், வைகாசி மாதம், 18-ஆம் தேதி, (01.07.1943) அனைத்து அபிஷேக ஆராதனைகள் முடிந்தபின் அனைத்து குடும்பத்தினர் முன்னிலையில் மதியம் 3 மணி அளவில் முக்தி அடைந்தார். அவருக்கு கோவில் வளாகத்தில் ஜீவசமாதி உள்ளது. அவர் அடங்கிய வைகாசி மாத கார்த்திகை நட்சத்திர நாளை குடும்பத்தினர் குருபூஜையாக கொண்டாடி வருகின்றனர்.

இக்கோவிலில் ஆண்டு முழுவதும் வரும் 13 கார்த்திகைகளுக்கும் அன்னதானம் நடைபெறுகிறது. இடும்பன் பூஜை, திருவாதிரை தரிசனம், சங்காபிஷேகம், கந்தர் சஷ்டி லட்சார்ச்சனை

நாச்சியப்பசாமிகள் குருபூஜை, திருக்கார்த்திகை சுவாமி எழுந்தருளுதல் ஆகியன நடைபெற்று வருகின்றன.

இக்குடும்பத்தினர் அறப்பணிகள் செய்ததோடு, நாட்டு விடுதலைப் போரிலும், சமூக சேவையிலும் பங்கு பெற்றுள்ளனர். இக்கோவிலுக்கு அன்றைய தமிழக முதலமைச்சர் குமாரசாமி ராஜா 1948-இல் வருகை தந்து ஹரிஜன ஆலயப் பிரவேசம் செய்துள்ளார். பூமிதான இயக்கத் தலைவர் வினோபா பாவே 1965-ஆம் ஆண்டு வருகை புரிந்துள்ளார். 29.11.1946-இல் கோவில் முன்புறம் வடக்கு பக்கத்தில் கம்பனடிப்பொடி சா.கணேசன் தலைமையில் தேசிய கொடி ஏற்றப்பட்டுள்ளது. கோவில் ஊரணி வடகரையில் பூங்குன்றநாட்டு விவசாயிகள் மாநாடு நடைபெற்றுள்ளது. நகரத்தார் பெருமக்கள் மணமக்களை கோவிலில் வைத்து பெண் அழைத்துச் செல்கின்றனர். பழனிக் காவடிகள் இக்கோவிலில் பூஜை செய்து அன்னதானம் வழங்கி புறப்பட்டு செல்கின்றனர். பல்வேறு திருமணங்கள் ஸ்ரீ தண்டாயுதபாணி சன்னதியில் நடைபெற்று வருகின்றன. இக்கோவிலின் இரண்டாவது குடமுழுக்கு தாது வருசம், காரத்திகை மாதம், 28-ஆம் தேதி, 13.12.1996-இல் நடைபெற்றது. மூன்றாவது குடமுழுக்கு சர்வதாரி வருசம், மாசி மாதம், 3-ஆம் தேதி, 15.02.2009-இல் நடைபெற்றது.

தற்பொழுது கோவில் புதுப்பிக்கப்பட்டு நான்காவது குடமுழுக்கு குரோதி வருசம் மாசி மாதம் 26-ஆம் தேதி 10.03.2025 திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 10 மணிக்குள் குடமுழுக்கு பிள்ளையார்பட்டி டாக்டர் சிவஸ்ரீ பிச்சை குருக்கள் குழுவினர் நடத்தி வைக்க உள்ளனர். குடமுழுக்கிற்கான பணிகளை குடமுழுக்கு விழாக் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

முருக பக்தர்கள் ஆன்மீக அன்பர்கள் திரளாக இக்குடமுழுக்கு விழாவில் பங்கேற்று ஸ்ரீ தண்டாயுதபாணியின் அருள்பெற வேண்டுகிறோம். ♦

# திருவள்ளுவர் இலக்கிய மன்றத்தின் 50-ஆவது ஆண்டு பொன்விழா




சென்னை, வாணுவம்பேட்டை திருவள்ளுவர் இலக்கிய மன்றத்தின் 50-ஆவது ஆண்டு பொன்விழா 02.02.2025 அன்று சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் நக்கீரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் முனைவர் இராம குருநாதன் வரவேற்புரை வழங்கினார். சிறப்பு விருந்தினரான நமது செட்டிநாடு ஆசிரியர் குழு உறுப்பினர் திருமதி C.S. விசாலாட்சி சுப்பிரமணியன் 'இலக்கியங்களில் வள்ளுவம்' என்ற தலைப்பில் உரையாற்றினார். சென்னை, ஆதம்பாக்கம் "நல்லழகம்மை செல்லப்பன் அறக்கட்டளை" சார்பில் நடத்தப்பெறும் மரபுக் கவிதை நூல்களுக்கான போட்டியில் தேர்ந்தெடுக்கப் பெற்ற ஒன்பது நூல்களுக்கான பரிசுகளை விழாத் தலைவர் நீதியரசர் நக்கீரன் அவர்கள் வழங்கினார். திரு. கோடி பரிதி நிரலுரை வழங்கினார். இரவு விருந்துடன் விழா நிறைவுற்றது.




**Dr.மணிஸ் பல் மருத்துவமனை**

No: 315/24 MAM பில்டிங் பூரணி மருத்துவமனை எதிரில்
(மீனாட்சி பேன் ஹவுஸ் காம்ப்ளக்ஸ் மாடி)
செக்காலை ரோடு - காரைக்குடி
வார நாட்கள் காலை 9.30 முதல் 1.30 வரை
மாலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு முன் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்

**இலவச பல் பரிசோதனை செய்யப்படும்**

பல் பாதுகாப்பிற்கு காலை மற்றும்
இரவு இருவேளையும் பல் துலக்குங்கள்

பல் சம்பந்தப்பட்ட அனைத்து
பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற
**Dr.மணிஸ் பல் மருத்தவமனைக்கு**
வருகை தாருங்கள்.

**Dr.S.மணிகண்டன்**,BDS., MBA(HM)
9551624126 / 7904079923

# வள்ளலார் வழிபாட்டு மன்ற தைப்பூச அன்னதானம்

புதுக்கோட்டை மாவட்டம், குழிபிறை, மு.மு. தெருவில் அமைந்துள்ள வள்ளலார் வழிபாட்டு மன்றத்தின் எட்டாம் ஆண்டு "தைப்பூச அன்னதானம்" குரோதி ஆண்டு, தை மாதம், 29-ஆம் நாள், (11.02.2025) செவ்வாய்க்கிழமை அன்று அன்னதானக் கூடத்தில் நடைபெற்றது. அன்று பகல் 12.00 மணிக்கு வள்ளலாருக்கு தீபாராதனையும், அதனைத் தொடர்ந்து 12.30 மணி அளவில் அன்னதானமும் நடைபெற்றது. மெய்யன்பர்கள் அனைவரும் குடும்பத்தோடு கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஒரே நேரத்தில் 100 நபர்கள் சாப்பிடும் வசதி உள்ள அன்னதானக் கூடத்தை காசிஸ்ரீ ஏ. வள்ளியப்பன் (காசி ஸ்ரீ முருகன் அடிமை) அவர்களின் அண்ணன் திரு. சுப்பையா செட்டியார் அவர்களின் பேரனும், முத்துமணியின் புதல்வருமாகிய ஆனந்தகுமார் அவர்கள் கட்டி இருக்கிறார். அன்னதானக் கூடம் கட்டிய ஆனந்தகுமார் மற்றும் வள்ளலார் வழிபாட்டு மன்றத்தின் புரவலர்களாக இருந்து மன்றத்தின் வளர்ச்சிக்கும், செயல்பாடுகளுக்கும் உறுதுணையாக இருந்து வரும் குழிபிறை - பேராசிரியர் முனைவர் நா. அழகப்பன், அரியக்குடி - திரு.முரு.நா.முரு.கி. முருகப்பன், குழிபிறை - திரு.வ.ஏ.வ. ஏகப்பன் ஆகியோர்க்கு வள்ளலார் வழிபாட்டு மன்றத்தின் சார்பாக பாராட்டும் நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

தகவல்: காசிஸ்ரீ முருகன் அடிமை

# பழனி பாதயாத்திரை





தேவகோட்டையில் 42 காவடிகள் கட்டி நகரப் பள்ளிக்கூடத்தில் 02.02.2025 அன்று வைக்கப்பட்டு அரோகரா செய்யப்பெற்றது. 03.02.2025 காலை நகரப் பள்ளிக்கூடத்தில் இருந்து காவடிகளும் பாதயாத்திரை செல்பவர்களும் புறப்பட்டு நகர்வலமாக தி.பிள்ளையார் கோவில், சிவன் கோவில், கருதாவூரணி பிள்ளையார் கோவில், வெள்ளையன் ஊருணி பிள்ளையார் கோவில், பெருமாள் கோவில் சென்று ஊரை வலம் வந்து சிலம்பணி பிள்ளையார் கோவிலில் காவடிகள் வைக்கப்பெற்று அன்று இரவு பூஜைகள் நடைபெற்றது. 04.02.25 காலை காவடிகளும் பாதயாத்திரை செல்பவர்களும் சிலம்பணி பிள்ளையார் கோவிலில் இருந்து புறப்பட்டு பழனிக்கு சென்றனர். அப்போது ஊரில் மக்கள் வருகை தந்து ஊரின் எல்லையான செயின்ட் மேரிஸ் பள்ளி வரை மேள தாளம் முழங்க வழி அனுப்பி வைத்தனர். செயின்ட் மேரிஸ் பள்ளி வாசலில் காவடிகள் சுற்றி வந்து எச்சரிக்கை சொல்லி கட்டியம் கூறி பாரம்பரிய முறைப்படி வழி அனுப்பி வைத்தனர்.

செட்டிநாட்டில் இருந்து பழனிக்கு பாதயாத்திரையாக 325-க்கும் மேற்பட்ட நகரத்தார் காவடிகள் குன்றக்குடியிலிருந்து புறப்பட்டுச் சென்றன.

தகவல்: லெட்சுமி நாராயணன், தேவகோட்டை.

# மிதிலைப்பட்டி நகரச் சிவன் கோயில்: குடமுழுக்கு விழாக் கமிட்டியினர் தேர்வு



தலைவர்



செயலாளர்



பொருளாளர்

சிவகங்கை மாவட்டம், மிதிலைப்பட்டி நகரச்சிவன் கோவில் ஆவுடையநாதர் – சிவயோகவல்லி அம்மாள் கோயிலில் குடமுழுக்கு விழா 12 ஆண்டுகளுக்குப் பிறகு மிகச் சிறப்பாக நடத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதற்கான நகரக் கூட்டம் 15-1-2025 அன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் நகரச் சிவன் கோவில் கும்பாபிஷேகம் நடத்த குழு அமைக்கப்பெற்றது. குழுவிற்கு திரு. எஸ்பி.ஆர்.எஸ். பழனியப்ப செட்டியார் (ஸ்ரீ முருகன் டிராவல்ஸ்) தலைவராகவும், திரு. ஆர்எம்.எம்.வி. பழனியப்ப செட்டியார் செயலாளராகவும், திரு. வி. வயிரவன் செட்டியார் பொருளாளராகவும், திரு. பி.சிங்காரம் செட்டியார் துணைத் தலைவராகவும், திரு. கே.ராமநாதன் செட்டியார் துணைச் செயலாளராகவும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் பணி சிறக்கவும், குடமுழுக்கு நன்னீராட்டு விழா சிறப்பாக நடைபெறவும் நமது செட்டிநாடு சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



துணைத் தலைவர்



துணைச் செயலாளர்

# சேலம் நகரத்தார் சங்க உறுப்பினர்களுக்கு பொங்கல் சீர்

சேலம் நகரத்தார் சங்கம் சார்பில் 450 சேலம் வாழ் நகரத்தார் குடும்பங்களுக்கு பொங்கல் சீராக காய்கறிகளுடன் சேர்த்து 32 பொருட்கள் அவர்கள் வீடு தேடிச் சென்று வழங்கப்பட்டது. சேலம் நகரத்தார் சங்கத் தலைவர் திரு. PL. மோகன் – (சொக்கலிங்கம் புதூர்), செயலாளர் திரு. AN. விஸ்வநாதன் – (பள்ளத்தூர்), பொருளாளர் திரு.V.AR. அருணாசலம் – (கண்டனூர்), துணைத் தலைவர்கள் திரு. SP. நாச்சியப்பன் – (கானாடுகாத்தான்), திரு. KP. லெட்சுமணன் – (நாட்டரசன்கோட்டை), இணைச் செயலாளர் திரு. KN. சுப்பிரமணியன் – (அரண்மனை சிறுவயல்) ஆகியோர் நிகழ்ச்சியை சிறப்பாக ஒருங்கிணைத்து செயல்பட்டனர்.





# ஜமீன்தார் சுவாமிகள் குருபூஜை விழா



காளையார்கோயில் AL. AR. கட்டளையின் ஜமீன்தார் சுவாமிகள் குருபூஜை விழா மார்கழி மாதம், 27ஆம் தேதி, (11.01.2025) சனிக்கிழமை அன்று தேவகோட்டை சன்மார்க்க சங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது. வலையபட்டி காசிஸ்ரீ பச்சைக்காவடி ஐயா அவர்களின் தலைமையில் 12.06.2024 அன்று இராமேஸ்வரத்தில் இருந்து புனித பாதயாத்திரை புறப்பட்டு, காசி வழியாக அயோத்திக்குச் சென்று 13.10.2024 அன்று வழிபாடு செய்து வந்துள்ள 22 அடியார்களுக்கு 'அயோத்திஸ்ரீ' பட்டம் மற்றும் பாராட்டுச் சான்றிதழை துலாவூர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ நிரம்பழகிய ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற விழாவில் AL. AR. ஜமீன்தார் குடும்பத்தினர் சார்பாக, தேவகோட்டை ஜமீன்தார் திரு. AL. AR. SM. நாராயணன் செட்டியார் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார். தேவகோட்டை சன்மார்க்க சங்கத் தலைவர் திரு. SV. AN. லெட்சுமணன் செட்டியார் அவர்களும், காளையார்கோயில் செல்லப்பசுவாமிகள் மடத்தின் அதிபர் அயோத்திஸ்ரீ, காசிஸ்ரீ, நர்மதாஸ்ரீ, ஸ்ரீலஸ்ரீ ராமசாமி சுவாமிகளும் முன்னிலை வகித்தனர். திரு. AL. AR. RM. V. C. RM. அருணாசலம் செட்டியார் அவர்களும், AL. AR. RM. C. SP. சித்தரஞ்சன் செட்டியார் அவர்களும், திரு. VR. சுயம்பிரகாசம் செட்டியார் அவர்களும் முன்னின்று விழா ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர். இலக்கியமேகம் திரு. ந. ஸ்ரீநிவாசன் சிறப்புரை நிகழ்த்தினார். நகரத்தார் பெருமக்களும், பொதுமக்களும் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர். காலையும் மதியமும் அனைவருக்கும் குருபூஜை திருவமுது வழங்கி உபசரிக்கப்பட்டது.

# இரணிக்கோயில் மற்றும் பிள்ளையார்பட்டி இடையேயான முதல் திருமண விழா

நகரத்தார்களின் வரலாற்றுச் சிறப்பு மிக்க இரணிக்கோயில் மற்றும் பிள்ளையார்பட்டி இடையேயான முதல் திருமண விழா மணமக்கள் கண்டனூர் A. நாச்சியப்பன் ராங்கியம், R. சீதா தேவி திருமணம் ராங்கியத்தில் 31.01.2025, வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. திருமண விழாவில் இரணிக்கோயில் மற்றும் பிள்ளையார்பட்டி நிர்வாகிகள் திரு.வீரசேகரன் செட்டியார் மற்றும் திரு. நாச்சியப்பன் செட்டியார் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



# தொழில் தொடங்கலாம் வாங்க 74



சேதுராமன் சாத்தப்பன்

## ஸ்டார்ட் அப் உலகம்

## உலகளாவிய வேலை வாய்ப்புக்கு ஒரு ஸ்டார்ட் அப்

வெளிநாட்டில் வேலை வாங்கித் தருகிறோம் என்று பலரும் ஏமாற்றப்படும் வேளையில், வெளிநாட்டில் நர்ஸ் வேலைக்கு தகுந்த ஆட்களை எடுத்து ஜெர்மனிக்கு அனுப்பும் முயற்சியில் ஒரு ஸ்டார்ட் அப் வந்துள்ளது.

எஜுகேஷன் செக்டாரில் இன்றைய தினம் Upgrade என்ற கம்பெனி மிகவும் புகழ் பெற்றது. அந்த கம்பெனியின் இணை நிறுவனர் மயங்க் குமார் மற்றும் OYO வின் ஆயுஷ் மாத்தூர் ஆகியோர், ப்ளூ-காலர் தொழிலாளர்களை உலகளாவிய வேலை வாய்ப்புகளுடன் இணைக்கும் பாலமாக பார்டர்பிளஸ் (Borderplus) என்ற ஸ்டார்ட் அப் கம்பெனியை தொடங்கியுள்ளார்கள்.

இந்தியாவில் ஏராளமான இயற்கை வளங்கள் இல்லை... மக்கள் தான் நமது மிகப்பெரிய வளம். அதுவும் இளைய தலைமுறை. அது தான் இந்தியாவின் பெரிய சொத்து. இதற்கு ஐ.டி. சர்வீஸ்களில் நமது இளைஞர்கள் உலகளவில் இருந்து வருவது ஒரு பிரதான எடுத்துக்காட்டாகும்.

இந்த ஸ்டார்ட அப் BorderPlus தற்போது ஜெர்மனி நாட்டின் சுகாதாரத் துறைக்கு தேவையான ஆட்களை தேர்ந்தெடுத்து அனுப்புவதில் கவனம் செலுத்துகிறது. பின்னர் ஹாஸ்பிட்டாலிட்டி, ரீடெய்ல், எஜுகேஷன், கன்ஸ்ரக்ஷன், லாஜிஸ்டிக்ஸ் ஆகிய துறைகளில் வெளிநாடுகளில் ஆட்கள் தேவைக்கு உதவும்.

ஐரோப்பிய வணிகத்தின் குறிப்பிடத்தக்க பகுதிகளான டென்மார்க் மற்றும் ஜெர்மனியில் இருக்கிறது, அங்கு ஹவுஸ் கீப்பிங் வேலைகளுக்கு ஆட்கள் பற்றாக்குறை இருக்கிறது என்று OYO வில் ஐரோப்பாவின் தலைவராகப் பணியாற்றிய மாத்தூர் கூறுகிறார்.

இந்தத் துறைகளில் வெளிநாடுகளில் வேலை வாய்ப்புகள் அதிகம். மிகப்பெரிய சாத்தியக் கூறுகள் உள்ளன. இதை நாம் சரியான வழியில் அணுகினால் உலகளவில் இந்தத் திறன்களை வழங்குவதற்கான வளங்கள் நம்மிடம் உள்ளன. அதாவது, இளைஞர்களை முறையாகத் திறமைப்படுத்த முடிந்தால், அல்லது அவர்களின் பயிற்சியை "finishing school perfection"-ல் முடிக்க முடிந்தால், அவர்களுக்கு சரியான வேலை வாய்ப்புகளை வழங்க இயலும்.

ஒரு செவிலியரையோ அல்லது ஒரு ஓட்டுநரையோ வெளிநாட்டிற்கு அனுப்பினால், 50-60% நிகழ்வுகளில், அவர்களின் வாழ்க்கை – மற்றும் எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கை – அவர்கள் பெறும் அனுபவங்கள் மற்றும் வருவாய் என்று அவர்களின் குடும்பங்களின் வாழ்க்கை முறையை கணிசமாக மேம்படுத்துகிறது.

### இவர்கள் என்ன செய்கிறார்கள்?

திறமையானவர்களை கண்டுபிடித்து அவர்களுக்கு பயிற்சிகள் வழங்குகிறார்கள். 6 முதல் 9 மாதங்கள் ஆஃப்லைன், ஆன்லைனில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதில் இறுதி மாதம் அல்லது இரண்டு மாதங்கள் வெளிநாட்டு மொழி கற்றலுக்கான பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. தற்போது பயிற்சி மையங்கள் புனேவிலும், மும்பையிலும் உள்ளன. மேலும், பல இடங்களில் அமைக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள்.

OpenAI கட்டமைப்பில் கட்டமைக்கப்பட்ட AI-தலைமையிலான கான்வர்சேஷன் பாட் ஒன்றை இந்த ஸ்டார்ட்அப் உருவாக்கி இருக்கிறது. 70% மொழிப் பயிற்சி, 20% கலாச்சார தயாரிப்பு மற்றும் 10% திறன் மேம்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு திட்டத்துடன் கேண்டிடேட்களை தயார்ப்படுத்துகிறார்கள்.

இந்தியாவின் கல்வி முறை, குறிப்பாக சுகாதாரம் மற்றும் நர்சிங் போன்ற துறைகளில், ஏற்கனவே B.Sc., நர்சிங் திட்டம் போன்ற வலுவான திறன் பயிற்சியை வழங்குகிறது இந்த ஸ்டார்ட் அப். இந்த ஸ்டார்ட் அப்-பின் கூற்றுப்படி, மொழி கற்றல் கடினமாக இருக்கும் இந்த வயதில், 20-23 வயதுடையவர்களுக்கு வெளிநாட்டு மொழியில், குறிப்பாக ஜெர்மன் மொழியில் பயிற்சி அளிப்பது முக்கிய சவால்களில் ஒன்றாக இருக்கிறது.

### புதிய நாடுகள்

நிறுவனம் ஜெர்மனிக்கு அப்பால் புதிய நாடுகளை தேர்ந்தெடுத்து விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது. அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஐரோப்பா, ஜப்பான், தென் கொரியா, தூர கிழக்கு மற்றும் மத்திய கிழக்கு என பல நாடுகளுக்கு விரிவுபடுத்தப்படும். ஒவ்வொரு சந்தையிலும் சுமார் 3,000 முதல் 4,000 கேண்டிடேட்ஸ் அனுப்ப வாய்ப்புகள் இருப்பதாக எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் நிறுவனம் அனைத்து சந்தைகளிலும் இதே அளவீடுகளால், ஆண்டுதோறும் சுமார் 150,000 பேர் இடம் பெயரும் வாய்ப்புகள் இருக்கிறது, ஒவ்வொரு நபரும் 4,000 முதல் 5,000 டாலர் வரை வருவாய் ஈட்டும் வாய்ப்புகள் இருக்கிறது.

எல்லாத் துறைகளிலும் வெளிநாடுகளில் வசிப்பவர்கள் இந்தியாவிற்கு வருடத்திற்கு 127 பில்லியன் டாலர் மதிப்பு வெளிநாட்டு பணங்களை இந்தியாவிற்கு அனுப்புகின்றனர். இது இந்தியாவிற்கு அத்தியாவசியமான அந்நியச் செலாவணியை பெற்றுத் தருகிறது.

இவர்களை தொடர்பு கொள்ள இவர்களின் இணையதளம் www.borderplus.co. மொபைல் 9811338991, ஈமெயில் info@borderplus.co.

# இந்த மாத வழிகாட்டி
# காரைக்குடி செல்லம்மை நாச்சியப்பன், (சென்னை)



நமது நகரத்தார்களில் பலர் Tour Operator-களாக பிரபலமாக இருக்கிறார்கள். கம்பெனிகள் வைத்து நடத்துகிறார்கள். ஆனால் ஒரு நகரத்தார் ஆச்சி இதை ஒரு passion ஆக செய்து வருகிறார் என்று அறிந்த போது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அந்த ஆச்சரியத்தின் விளைவு தான் இந்த பேட்டிக் கட்டுரை.

நமது செட்டிநாடு இதழுக்காக காரைக்குடியை சேர்ந்த செல்லம்மை நாச்சியப்பன் அவர்களை பேட்டி கண்டோம்...

**உங்களுக்கு Tour Operator ஆக வேண்டும் என்ற ஆர்வம் எப்படி ஏற்பட்டது?**

என்னை Tour Operator என்று அழைப்பதை விட Tour Coordinator என்று அழைத்தால் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

சிறிய வயதில் பல நாட்டின் ரூபாய்கள், காயின்கள் ஆகியவைகளை சேகரிக்கும் பழக்கம் எனக்கு இருந்தது. அது பல நாடுகளைப் பற்றி அறிந்து கொள்ளும் ஒரு வாய்ப்பாக இருந்தது. இது ஒரு வேளை எனக்கு tour co-ordinator ஆக ஒரு உந்துதலாக இருந்திருக்கலாம் என நினைக்கிறேன்.

2007 அல்லது 2008-ம் வருடம் என்று நினைக்கிறேன். நாங்கள் பெண்களாக சேர்ந்து கைலாஷ் டூர் செல்ல முடிவு செய்து அன்னபூர்ணா யாத்ரா சர்வீஸ் மூலமாக சென்று வந்தோம். அதில் எனக்கு நல்ல அனுபவம் கிடைத்தது.

மேலும், என் கணவருக்கும், எனக்கும் வெளியூர் செல்வதில் ஆர்வம் அதிகம். பெரும்பாலும் அது ஆன்மீக டூர் ஆக இருக்கும்.

இவற்றில் கிடைத்த அனுபவங்களை வைத்து ஏன் நாம் தனிப்பட்ட முறையில் விருப்பமுள்ளவர்களை வெளிநாடுகளுக்கு அழைத்து செல்லக் கூடாது என்று நினைத்து முதல் டூர் ஸ்ரீலங்காவிற்கு 2009-ம் வருடம் ஏற்பாடு செய்தேன். அதில் 30 பேர் என்னுடன் வந்தார்கள். பெரும்பாலும் சத்திரங்களில் தான் தங்கினோம். கையில் எலக்ட்ரிக் குக்கர் எடுத்து சென்று சமைத்துச் சாப்பிட்டோம். ஸ்ரீலங்காவில் இருக்கும் நமது நகரத்தார் ராஜேந்திரன் செட்டியார் அவர்கள் தகுந்த உதவிகள் செய்தார்.

முதல் டூர் சிறப்பாக இருந்ததால் கூட வந்தவர்களின் வாய் வார்த்தைகளால், அடுத்த ஸ்ரீலங்கா டூர் சாத்தியமானது. இப்படி போய் வந்தவர்கள் சொல்லியதை வைத்து என்னுடன் டூர் வர விருப்பப்பட்டதால் 38 முறை ஸ்ரீலங்கா மட்டும் இதுவரை சென்று வந்திருக்கிறோம். தற்போது வெளிநாடு டூர் செல்லும் போது 3 star அல்லது 4 star ஹோட்டல்களில் தங்க வைக்கிறோம். பெரும்பாலும் இந்திய உணவு வகைகள் கிடைக்க ஏற்பாடு செய்கிறோம்.

ஒரு முறை அண்ணாமலைப் பல்கலைக்கழக alumini association யை சார்ந்த 65 பேரை ஸ்ரீலங்கா கூட்டிச் சென்றிருக்கிறேன். சமீபத்தில் சென்னை வாழ் நெற்குப்பை நகரத்தார் சங்கத்தைச் சேர்ந்தவர்களை ஸ்ரீலங்கா கூட்டிச் சென்று வந்தேன்.

**38 முறை ஸ்ரீலங்காவா என்ற ஆச்சரியத்தில் இருந்த நாம், வேறு எந்தெந்த நாடுகளுக்கு சென்றிருக்கிறீர்கள் என்று கேட்ட போது....**

பாலி, கம்போடியா, வியட்நாம் போன்ற நாடுகளுக்கு கூட்டி சென்றிருக்கிறேன். தற்போது ஐரோப்பா சுற்றுலாவும் முடித்திருக்கிறோம். இந்தியாவில் குஜராத் சுற்றுலா 6 நாட்கள், 8 நாட்கள் என்ற வகையில் சென்றிருக்கிறோம். ஒரு குஜராத் டூரில் 150 பேரை கூட்டிச் சென்றது மறக்க முடியாத அனுபவம். காசிக்கு ரெகுலராக கூட்டிச் சென்று வருகிறோம். காசிக்குச் செல்லும் போது மட்டும் இதுவரை காசிக்கு சென்றதில்லை என்ற வகையில் இருக்கும் ஒருவரை இலவசமாக கூட்டிச் செல்கிறோம். அடுத்த முறை மார்ச் மாதம் செல்லவிருக்கும் ஸ்ரீலங்கா டூரில் பாகனேரி பூசாரி அவர்களை கட்டணமில்லாமல் அழைத்து செல்லவிருக்கிறேன்.

இந்தியா அளவில் என்று பார்த்தால் குஜராத், வாரணாசி, ராஜஸ்தான், கர்நாடகா, கேரளா, ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டின் பல இடங்களுக்கு அழைத்துச் சென்றிருக்கிறேன்.

இது தவிர அருகிலுள்ள இடங்களுக்கு ஒரு நாள் டிரிப்பாக பல ஊர்களுக்கு கூட்டிச் சென்று வருகிறேன்.

**Tour Co-ordinator-ஆக மொழிப் பிரச்சனைகளை எப்படி சமாளிக்கிறீர்கள்?**

எனக்கு கல்யாணம் ஆகும் போது PUC வரை தான் படித்திருந்தேன். பின்னர் கணவரின் துண்டுகோலால் M.A., Public Administration முடித்தேன். தமிழ், ஆங்கிலம், இந்தி நான் manage செய்து கொள்வேன். ஆனால் கட்டாயம் அந்தெந்த இடங்களில் tour guide வைத்துக்

# நல்லி குப்புசாமி செட்டியாருக்கு பத்மபூஷன் விருது



பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு குடியரசு தினத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் பத்ம விபூஷன், பத்ம பூஷன், பத்மஸ்ரீ ஆகிய 3 பிரிவுகளின் கீழ் பத்ம விருதுகள் வழங்கப்படுகின்றன. கல்வி, இலக்கியம். அறிவியல், விளையாட்டு, சுகாதாரம், தொழில், வர்த்தகம், பொறியியல், பொது விவகாரங்கள், குடிமைப் பணி மற்றும் சமூக சேவை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களை கவுரவிக்கும் வகையில் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

பிரபல ஜவுளி தொழில் அதிபர் டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார் அவர்கள் இந்திய அரசு வழங்கும் உயரிய விருதுகளில் ஒன்றான பத்மபூஷன் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்த விருதினை கடினமாக உழைக்கும் தொழிலாளர்களுக்கும், நெசவாளர்களுக்கும் அர்ப்பணிப்பதாகத் தெரிவித்துள்ளார். டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார் நமது செட்டிநாடு இதழ் வாசகரும், சந்தாதாரரும் ஆவார். அவருக்கு நமது செட்டிநாடு வாசகர்கள் சார்பாக பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். வரும் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெறும் விழாவில், குடியரசுத் தலைவர் பத்ம விருதுகளை வழங்குவார் என்பது குறிப்பிடத்தக்கது.

கொள்வோம். அந்த நாட்டின், அந்த ஊரின் இடங்களை பற்றி நன்றாக தெரிந்து கொள்ள local guide மிகவும் முக்கியம்.

**உங்கள் டூர்களின் கட்டணங்கள் எப்படி இருக்கும்?**

நான் கூட்டிச் செல்லும் டூர்கள் அனைத்திலும் வாங்கும் கட்டணத்தில் சுமார் 90 சதவீதம் டூர் வருபவர்களுக்கு செலவு செய்து விடுகிறேன். அதிகம் லாபம் வைப்பதில்லை. இதனால், overall tour cost சிறிது குறைவாக வரும். முன்பு நான் சொன்னது போல இதை பெரிய லாப நோக்கத்திற்காக செய்யவில்லை. டூர் செல்வது எனக்கு ஒரு passion.

**நீங்கள் பிசினஸ் செய்ய வேண்டும் என்று உந்துதலுக்கு யார் காரணம்?**

கணவர், பிள்ளைகளின் ஆதரவு கட்டாயம் தேவை. அது எனக்கு நிறைய இருக்கிறது. இதைத் தவிர என் அம்மா நான் பிசினஸ் செய்ய ஒரு ரோல் மாடல் என்றால் மிகையாகாது. நாங்கள் சின்ன வயதாக இருக்கும் போது நகரத்தார் சமூகம் பிசினஸ் சமூகம், ஆதலால் நாம் எல்லோரும் பிசினஸ் பண்ணனும் என்று சொல்லிக் கொண்டே இருப்பார்கள். அம்மா திருமதி மீனாட்சி ஆச்சி அவர்கள் அதை வாய் வழியாக சொன்னது மட்டுமில்லாமல், செயல் வழியாகவும் செய்தார்கள். அதாவது, சென்னை பத்மா சேஷாத்திரி பள்ளியில் சுமார் 15 வருடம் கேண்டீன் வைத்திருந்தார்கள். அப்போதே எங்களையும் முடிந்தால் வந்து உதவி செய்யுங்கள் என்று கூறுவார்கள். அம்மாவிற்கு தற்போது 89 வயதாகிறது. அப்பா (மறைந்த) திரு. பழநியப்ப செட்டியார் அவர்கள். இந்தியன் வங்கியில் வேலை செய்தார்கள்.



திருமதி மீனாட்சி ஆச்சி

**குடும்பம் பற்றி...**

கணவர் திரு. நாச்சியப்பன் அவர்கள் ICICI வங்கியில் பணி செய்து, விருப்ப ஓய்வு பெற்றவர்.

இரண்டு பெண் குழந்தைகள். அபிராமி தற்போது அமெரிக்காவில் வசித்து வருகிறார். கணவர் சுப்பையா. இரண்டாவது மகள் மீனாள் தற்போது சென்னையில் வசித்து வருகிறார். கணவர் நாச்சியப்பன். மகன் பஞ்சநாதன். சென்னையில் வசித்து வருகிறார். மனைவி மீனு.

மாமனார் தெய்வத்திரு பஞ்சநாதன் செட்டியார், மாமியார் தெய்வத்திரு சிகப்பி ஆச்சி. மாமனார் மலேஷியாவில் காவல் துறையில் பணியாற்றினார்கள்.

**தொடர்புக்கு...**

இவருடைய தொடர்பு எண்: 94440 67324, ஈமெயில் cimha007@gmail.com.

ஈமெயில் Sethuraman.sathappan@gmail.com,
மொபைல் 9820451259,
இணையதளம்
www.startupandbusinessnews.com


மகன்லால்
வைரம் & தங்கம்
We Offer Diamonds
Grade by
GEMOLOGICAL INSTITUTE OF AMERICA
GIA
Authorised
Forevermark Jeweller
FOREVERMARK




MAGANLAL MEHTA & CO
Diamond & Gold Jewellery Private Limited

87 YEARS

#51, AVM Building, Kallukatti North, Karaikudi - 630 001

# 27/43, North Usman Road, T.Nagar, Chennai - 600 017

we@maganlalmehta.com www.maganlaldiamonds.com

CUSTOMER CARE

+91 888 111 5555
+91 888 111 4555

# இஸ்ரோவின் சாதனைகளில் நகரத்தாரின் பங்களிப்பு - 16



லெ. முத்து
இணை இயக்குனர்
(ஓய்வு) இஸ்ரோ.

## குமாரி ஸ்வேதா சகுந்தலா சுப்பையா



இஸ்ரோ நகரத்தார்களைப் பற்றி நான் நமது செட்டிநாடு இதழில் எழுதி வரும் தொடர் கட்டுரைகளில் இந்த இதழில் வித்தியாசமாக இஸ்ரோவில் பணி புரிந்து மென்மேலும் உயர்வு பெற்ற ஒரு இளம் பெண் விஞ்ஞானியைக் குறித்து உங்களுக்கு அறிமுகப்படுத்துவதில் பெருமை கொள்கிறேன்.

குமாரி ஸ்வேதா சகுந்தலா சுப்பையா புதுப்பட்டியில் பிறந்த சிந்தனையாளர். இவர் வலையபட்டியைச் சார்ந்த என் இஸ்ரோ சக நண்பரும், திருவனந்தபுரம் நகரத்தார் சங்கத்தின் தலைவருமான திரு. கணபதியின் மகள் வழி பேத்தி என்ற பெருமைக்குரியவர். ஐயாவின் இஸ்ரோ உயர் அனுபவத்தால் சிறு வயதிலிருந்தே ஈர்க்கப்பட்டு இஸ்ரோவில் பணி புரிய வேண்டுமென்ற சீரிய சிந்தனையோடு வளர்ந்து அதை தன் கடும் முயற்சியால் அடையக்கூடிய பாக்கியமும் பெற்றவர். இவர் 1997-ல் பிறந்தவர்.

❖ பாண்டிச்சேரி, தும்கூர், பெங்களூரு மற்றும் சென்னையில் பள்ளி, கல்லூரி படிப்பை முடித்து பின்னர் பொறியியல் படிப்பை Indian Institute of Space Science and Technology, Thiruvananthapuram (IIST)-ல் முடித்து Bachelor in Electronics and Communication with Minor in Avionics என்ற பட்டத்தை பெற்றிருக்கிறார்.

❖ படிக்கும் போதே பல மொழிகளைக் கற்று அவைகளில் தேர்ச்சி பெற்றதோடு, சக மாணவர்களை சந்தித்து அவர்களோடு பாடங்கள் குறித்து அளவளாவுதலில் மிகுந்த ஆர்வம் கொண்டவராக திகழ்ந்திருக்கிறார்.

❖ IIST-ல் Techfest, Quiz Club போன்ற குழுக்களில் சேர்ந்து தன் திறமையை வெளிப்படுத்தியவர்.

❖ இங்கு படிப்பின் ஒரு அங்கமாக Mass Balancing of Spherical Air Bearings used in simulating gravityless platforms for Spacecrafts என்ற Project-ஐ செய்து முடித்திருக்கிறார்.

❖ குமாரி ஸ்வேதா IIST-லிருந்து Direct Recruitment-ல் திருவனந்தபுரத்திலுள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தில் 2018 வருடம் Flight Systems and Operations Division-ல் Operations and Checkout Systems and Integration team-ல் சேர்ந்து பணிபுரியும் வாய்ப்பைப் பெற்று இருக்கிறார்.

❖ இந்தக் குழுவின் முக்கிய பணி இஸ்ரோ ராக்கெட்களின் பல பாகங்களின் வேலை முன் நிர்மாணித்தபடி சரியாக நடைபெறுகிறதா என்பதை உறுதி செய்யும் மிக இன்றியமையாத பணியாகும்.இதற்காக இவர்கள் பல சோதிக்கும் அமைப்புகளை (Checkout Systems)-ஐ உருவாக்கி அவைகளைக்கொண்டு ராக்கெட் பாகங்களை பரிசோதித்து பின்னர் இவை ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் பாகங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு முழு ராக்கெட்டாக உருவாகும் போது Assembly Hall-லிலும், பின்னர் ஏவுதளத்திலும் (Launch Pad) முழு பரிசோதனை செய்து ராக்கெட்டின் பரிசோதனை Result-களை நிபுணர் குழுவுக்கு அளிக்கிறார்கள்.

❖ பின்னர் ராக்கெட் ஏவப்படுவதற்கு முன்னர் வரை அதன் ஆரோக்கியத்தை கண்காணிப்பதும், ஏவுதலுக்குமுன் கடைசி நிமிடங்களில் கம்ப்யூட்டரின் துணை கொண்டு ராக்கெட்டின் சமிக்ஞைகளை கண்காணிப்பதும், தவறு எதுவும் நிகழ்ந்தால் ராக்கெட் மேலெழும்பும் முன் அதை நிறுத்துவதும் (Launch Abort) இவர்களின் தலையாய பணியாகும்.

இவர்கள் பணி இதோடு நின்று விடுவதில்லை. ராக்கெட் மேலெழும்பி அதன் இலக்கை அடையும் வரை அது அனுப்பும் சமிக்ஞைகளை (Signals) பதிவு செய்து அவைகளை ராக்கெட் பாகங்களுக்கேற்ப (Rocket Systems) பிரித்து பின்னர் அந்தந்த பாகங்களின் வல்லுனர்களுக்கு (Systems Experts) அவைகளை ஆய்வு செய்ய ஏதுவாகக் கொடுத்து ராக்கெட்டின் விண்வெளி பயணத்தின் நடைமுறைகளை (Flight Performance) பற்றி விரிவாக ஆராய உதவுவதும் இவர்கள் வேலை.



சுப்பையா சொக்கலிங்கம் - கீதா சுப்பையா

## குடும்பம்

| | |
|---|---|
| பெயர்: | ஸ்வேதா சகுந்தலா சுப்பையா |
| பிறந்த தேதி: | 05 மார்ச் 1997 |
| ஊர்: | புதுப்பட்டி |
| குடும்பப்பெயர்: | குப்பான் செட்டியார் வீடு |
| வகை: | வளத்தப்ப செட்டியார் வகை |
| கோயில்: | வைரவன் கோயில் |
| பிரிவு: | பெரிய வகுப்பு |
| பெற்றோர்: | சுப்பையா சொக்கலிங்கம், Served in Ford India , Nokia India, Kohler India, Rotork and Alstom. Now working as Chief Operating Officer for Jackson Solar in Delhi.<br>கீதா சுப்பையா – Did her Masters in Maths at Trivandrum. |
| அப்பத்தா ஐயா: | சொக்கலிங்கம் செட்டியார் – சகுந்தலா ஆச்சி (ஒத்தக்கடை), |
| ஆயா ஐயா: | கணபதி, Ex. ISRO Officer (வலையபட்டி) Now in Trivandrum, வள்ளியம்மை ஆச்சி |
| தங்கை: | ஸ்நேகா வள்ளியம்மை, Third Year Engineering in Sivasubramania Nadar College of Engineering, Chennai. |



சகுந்தலா ஆச்சி, சொக்கலிங்கம் செட்டியார், ஸ்வேதா சகுந்தலா சுப்பையா, சுப்பையா சொக்கலிங்கம், கீதா சுப்பையா.

இதிலிருந்தே ராக்கெட்டின் வெற்றியில் இவர்கள் பணியின் முக்கியத்துவத்தை பற்றி வாசகர்கள் புரிந்து கொள்ளலாம்.

❖ இந்த கடினமான பணியில் குமாரி ஸ்வேதா சிறப்பாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டு குழுவின் மற்ற வல்லுநர்கள் மற்றும் மேலாளர்களின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்று வந்திருக்கிறார்.


❖ இவர் இந்தப் பணியில் பத்து PSLV Launches, மூன்று GSLV Mk2 Launches, Small Satellite Launch Vehicle (SSLV), Reusable Launch Vehicle (RLV) போன்ற கடினமான ராக்கெட்களின் பணிகளை 2018- 2021 காலகட்டத்தில் சிறப்பாக நிறைவு செய்திருக்கிறார்.



ஸ்னேகா வள்ளியம்மை

❖ இந்த பணிகளின் நிமித்தம் பலமுறை ஸ்ரீஹரிகோட்டாவுக்கும் சித்ரதுர்காவிற்கும் சென்று தங்கி ராக்கெட்டின் ஒருமித்த ஆய்வு (Integrated Testing of Launch Vehicles) செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

❖ இதல்லாமல் மனிதர்களை விண்ணில் கொண்டு செல்லும் இஸ்ரோவின் முக்கியமான முயற்சியான ககன்யான் (Gaganyan Mission) திட்டத்தில் சிறிய ராக்கெட்களை இணைக்கும் ஏற்பாடு (Thruster Control for Crew Module Re-entry) முயற்சியிலும் வேலை செய்த அநுபவம் கிடைக்கப்பெற்று இருக்கிறார்.



வள்ளியம்மை ஆச்சி – கணபதி

❖ மேலும் பல உயரிய திட்டங்களில் வேலை செய்து சாதிக்க வேண்டும் என்ற உந்துதலினாலும், மேற்படிப்பின் ஆர்வத்தினாலும் இஸ்ரோவிலிருந்து விலகி 2022-ஆம் வருடம் அமெரிக்காவுக்கு சென்றிருக்கிறார்.

❖ அங்கு Ann Arbor என்ற இடத்திலுள்ள மிச்சிகன் பல்கலைகழகத்தில் Electrical and Computer Engineering பிரிவில் Masters பட்டம் பெற்றிருக்கிறார்.

❖ அங்கு Heptic based sensors for motion sickness mitigation in autonomous vehicles என்ற Project-ஐ முடித்திருக்கிறார்.

❖ அதோடு உயர் பள்ளி மாணவர்களுக்கு Python Coding Coach-ஆக இருந்து "Joy of Coding" என்ற Program-ல் அவர்கள் மேன்மைக்கு உதவியிருக்கிறார்.

❖ தற்பொழுது கலிபோர்னியாவில் Skyryse என்ற Startup company-ல் System Engineer Lead ஆக ஹெலிகாப்டர்களில்Replacing entire cockpit to just a stick and screen to make flying easy & safe என்ற advanced தொழில் நுட்பத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறார்.

❖ அதில் Sensor and active emulation models for testing என்ற மென் பொருளையும் (Software) உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்திருக்கிறார்.

❖ அவருடைய இந்த அபரிமிதமான முன்னேற்றத்திற்கெல்லாம் காரணம் அவர் இஸ்ரோவில் பெற்ற அடிப்படை பயிற்சிதான் என்றால் அது மிகையாகாது.

❖ திருவனந்தபுரத்திலிருந்த போது Reading Room என்ற Community Library-க்கு சென்று படிப்பதிலும் கவிதைகள், கட்டுரைகள் எழுதுவதிலும் தான் செலவழித்த நேரங்கள் தன் மனதிற்கு மிக ஆறுதலாக இருந்ததை இங்கு குறிப்பிட விரும்புகிறார்.

❖ இளம் விஞ்ஞானியான குமாரி ஸ்வேதா மென்மேலும் சிறந்த ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு உலகம் போற்றும் உன்னத நிலைக்கு வந்து அவர் வீட்டிற்கும் நம் நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று நாம் எல்லோரும் வாழ்த்துவோம். ♦

# நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு 43



## பட்டப்பிளானும் பட்டணசாமி நகரத்தார்களும்



மா.இளங்கோ, குழிபிறை, 9842260955



### 1500-க்குப் பின் ஐரோப்பியர்கள் வருகை:

போர்த்துகீசியர்கள், தென்மார்க் நாட்டினர், ஆங்கிலேயர்கள் போன்ற ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின் நகரத்தார்களின் வாழ்க்கை முறை, தொழில்முறை ஆகியன மாற்றம் பெற்றன. ஆனால் நகரத்தார்கள் அம்மாற்றங்களுக்கு இயைந்து கொடுத்து தமது வளர்ச்சிக்கான பாதையாக அம்மாற்றங்களை எதிர்கொண்டனர். ஐரோப்பிய வணிக அமைப்புகளுடன் இணைந்து வணிகம் மேற்கொண்டனர் நகரத்தார்கள். எனவே, அந்தச் சூழலைப் புரிந்து கொள்ள ஏதுவாக ஐரோப்பிய வணிக நிறுவனங்கள் பற்றிய சிறு குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

### 1522 - சென்னையில் போர்த்துக்கீசியர்கள்:

முதன்முதலாக வாஸ்கோடகாமா போர்ச்சுகல் நாட்டில் இருந்து கேரளக் கரையை 1497-ல் அடைந்தார். இந்தியத் துணைக் கண்டம் செல்வம் கொழிக்கும் நிலமாக அறியப்பட்டதே அதற்கு காரணம். 1497-ல் கேரளாவில் கால் பதித்த போர்த்துகீசியர்கள் 1522-ல் சென்னைப் பகுதிக்கும் வந்தனர். சென்னையில் சாந்தோம் பகுதியில் துறைமுகம் அமைத்தனர். 1522-ம் ஆண்டு தேவாலயங்கள் கட்டி, தமது இருப்பு வலிமையானது என்பதை நிலைநாட்டினர். அவர்களின் ஆட்சிப் பரப்பு நாகப்பட்டினம் வரையிலும் இருந்தது.

### 1618-ல் தமிழகத்தில் டென்மார்க் நாட்டினர் (டேனிசியர்கள்):

போர்த்துகீசியர்களின் நிலை இவ்வாறு இருக்க டென்மார்க்கில் இருந்து டேனிசியர்களும் வந்தனர். நாம் பரவலாக அறிந்தது 'ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி'. இந்த நிறுவனம் இங்கிலாந்து நாட்டில் கி.பி.1600-ல் தோற்றுவிக்கப்பட்டது. ஆங்கிலேயர்களின் கிழக்கிந்தியக் கம்பெனி என்பது போல டேனிசீயர்களின் 'டேனிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி' என்ற நிறுவனம் டென்மார்க்கின் கோபன்ஹேகன் (Copen Hagan) நகரில் கி.பி.1616-ல் நிறுவப் பெற்றது. டென்மார்க்கின் மன்னன் நான்காம் கிருஸ்டியன் - ஆதரவைப் பெற்றது இந்த நிறுவனம். பிறகு இரண்டு ஆண்டுகளில் - கி.பி. 1618-ல் டேனிசியர்களின் முதல் கப்பல் நாகப்பட்டினத்தை அடைந்தது. (தமிழக வரலாற்றில் தரங்கம்பாடி, ஆ.சுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக் அவுஸ் பி. லிட், 2019, பக்.3). அப்பொழுது நாகப்பட்டினம் பகுதிகளில் ஆட்சி செய்து கொண்டிருந்தவர்கள் போர்த்துக்கீசியர்கள். அவர்கள் தமக்குப் போட்டியாக இன்னொரு நாடு வருவதை விரும்பவில்லை. தமது வணிக நடவடிக்கைகள் பாதிக்கப்படும் எனக் கருதினர். எனவே, டென்மார்க் கப்பலை மூழ்கடித்தனர். அதன் பின்னர் டென்மார்க் நாட்டில் இருந்து ஓவஜெட்டே என்ற படைத் தலைவர் தலைமையில் இரண்டு போர்க் கப்பல்கள் மற்றும் மூன்று வணிகக் கப்பல்கள் இலங்கை வந்தன. அதன் பின்னர் 1620-ல் ஓவஜெட்டே தஞ்சாவூர் வந்தார். அப்பொழுது தஞ்சையை ஆண்ட இரகுநாத நாயக்கரைச் சந்தித்து வணிகம் செய்ய அனுமதி பெற்றார். இவ்வாறாக டென்மார்க் நாட்டினர், தமிழகத்தில் கால் பதித்தனர்.

### ஆங்கிலேயர்களின் வருகை:

போர்த்துகீசியர்களும் டேனிசியர்களும் வணிகம் மூலம் பெரும் பொருள் ஈட்ட கடல் பயணம் மேற்கொண்டவர்கள். அவர்களைத் தொடர்ந்தவர்கள் ஆங்கிலேயர்கள். இங்கிலாந்து அரசியார் முதலாம் எலிசபெத் அவர்களின் அனுமதி பெற்று James Lancaster என்ற கடலோடி 1591-ம் ஆண்டு, ஏப்ரல், 10-ம் நாள் மூன்று கப்பல்களுடன் தனது பயணத்தை இந்தியப் பெருங்கடல் நோக்கித் தொடங்கினார். அவர் பயணத்தை முடித்துக் கொண்டு சில ஆண்டுகள் கழித்து இங்கிலாந்து திரும்பினார். அவர் கொண்டு

சென்ற பொருட்களான தங்கம், வெள்ளி, ஆம்பர்கிரீசு, பெஞ்சமின் என்ற நறுமணத்திற்கான மூலப்பொருள், துணிகள், மிளகு, கிராம்பு, ஏலக்காய், சாதிக்காய், சிவப்புச் சாயம் உள்ளிட்ட பல பொருட்கள் இங்கிலாந்தில் பல நூறு மடங்கு விலைக்கு விற்கப்பட்டன. பெரும் பொருள் ஈட்டிய செய்தி மேலும் பல இங்கிலாந்து கடலோடிகளை இந்தியா நோக்கிப் பயணம் செய்யும் ஆவலைத் தூண்டி விட்டது. (விக்கிப்பீடியா) கிழக்கிந்திய நிறுவனத்தின் முதல் கப்பல் கி.பி. 1608-ல் குஜராத்தின் சூரத் நகரில் நங்கூரமிட்டது. இந்த நிறுவனம் 1639-ல் சென்னையில் விற்பனை மையத்தைத் தொடங்கியது.

1500 - 1600-க்கு இடைப்பட்ட காலத்தில் போர்த்துக்கீசியர்களின் வரலாற்றை எழுதிய எஸ்.ஜெயசீல ஸ்டீபன் அவர்களின் மூலம் நகரத்தார்களின் வணிகச் சூழ்நிலைகளையும் நாம் உணர்ந்து கொள்ள முடியும். இந்நூலின் மூலம் தமிழகத்தின் நாகப்பட்டினம், தரங்கம்பாடி, சாந்தோம், பழவேற்காடு பகுதிகளை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. (சோழமண்டலக் கடற்கரையும் அதன் உள்நாடும் - பொருளாதார, சமூக, அரசியல் அமைப்பு கி.பி.1500 - 1600 எஸ்.ஜெயசீல ஸ்டீபன்)

ஐரோப்பியர்களின் வரலாற்றைக் கட்டமைக்க அவர்களின் பதிவுகள் மிகத் துல்லியமாக கிடைக்கின்றன. ஆனால் நகரத்தார்களின் வாழ்விடமான செட்டிநாட்டுப் பகுதியை அறிந்து கொள்ள கல்வெட்டுகள் மட்டுமே இன்று வரையில் சான்றுகளாக விளங்குகின்றன. ஆனால் கல்வெட்டுகளின் எண்ணிக்கை மிகக் குறைவே.

### நாயக்கர்கள் ஆட்சிக் காலத்தில் அரசியல் சூழ்நிலை மற்றும் வடதமிழகத்தில் வணிகச் சூழ்நிலை:

16-ஆம் நூற்றாண்டில் விஜய நகர அரசு அதிகார அளவிலும், ஆட்சிப் பரப்பிலும் தமிழகத்தில் பெரும் அளவில் பரந்து விரிந்து இருந்தது. இதே காலத்தில் ஐரோப்பியர்களின் வருகை நிகழ்கிறது. அவர்கள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கி விடுகின்றனர். எனவே, தமிழகம் இரு வேறுபட்ட அதிகார மையங்களுக்கு இடையே இயங்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகி விடுகிறது. இந்தச் சூழ்நிலை நகரத்தார்களுக்கும் பொருந்தும்.

வடதமிழகத்தில் போர்த்துகீசியர்களின் ஆளுமை வேரூன்றிய அளவுக்கு செட்டிநாட்டுப் பகுதியில் இல்லை. ஆனால் நாயக்கர்களின் ஆளுமை பரந்து விரிந்ததாக இருந்ததை பல்வேறு கல்வெட்டுகளின் மூலம் நாம் புரிந்து கொள்ள முடிகிறது. நிர்வாக வசதிக்காக நாடு பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சிறுபிரிவுகளை நிர்வகிக்க நாயக்கர்கள் அமர்த்தப்பட்டனர். நாயக்கர்களிடம் பொறுப்பாக வரி வசூலிப்பது, நாட்டை நிர்வகிப்பது போன்ற பணிகள் வழங்கப்பட்டிருந்தன. சைவம் வளர்ப்பது, இசுலாமியர்களின் ஆதிக்கத்தைத் தடுப்பது ஆகியன நாயக்கர்களின் நோக்கமாக இருந்தன. வணிகர்கள் குடியேற்றத்தையும் நாயக்கர்கள் ஊக்குவித்தனர். விஜய

உ சிவமயம் ஸ்ரீராமஜெயம்
**செட்டிநாடு வத்தல்கள் கிடைக்கும்**
எங்களிடம் தேன்குழல் வத்தல், கிள்ளு வத்தல், கரண்டி வத்தல், சின்ன வெங்காய வடகம் (கரிவடகம்), பிரண்ட (முறுக்கு வத்தல்), கத்திரி வத்தல், மாவத்தல், அவரை வத்தல், கேப்பை வத்தல், கேரட் வத்தல், பீட்ரூட் வத்தல், தக்காளி வத்தல், கறிவேப்பிலை வத்தல் ஆகிய சுவைமிகு வத்தல்களும், எல்லா வகை பொடி வகைகளும், வேங்கரிசி மாவு, உப்புக்கண்டம், மற்றும் தடுக்கில் பின்னிய நடுவீட்டுக் கோலம் கிடைக்கும்.
தொடர்பிற்கு: லட்சுமி மணிகண்டன், காரைக்குடி
8508392087 / 8778527165 / 8760742590
ADVT

நகர ஆட்சிக் காலத்தில் பல வணிக நகரங்கள், மையங்கள் உருவாகின. பேட்டை என்பது அவற்றுள் ஒன்று. வணிகம் செய்யும் இடத்தின் பெயருக்குப் பின் 'பேட்டை' என்ற சொல் சேர்க்கப்பட்டது. இன்று நாம் காணும் 'பேட்டை' என முடியும் ஊர்கள் அனைத்தும் நாயக்கர்கள் ஆட்சிக் காலத்தில் உருவானவை அல்லது பெயர் மாற்றம் பெற்றவை. 'சந்தைப்பேட்டை' என்பதும் நாயக்கர்கள் காலத்தில் உருவானவையே. பல ஊர் வணிகர்கள் சந்தைப்பேட்டைக்கு வருவது இயல்பானதாகவும் வரவேற்கப்பட்டதாகவும் இருந்தது.

### பழவேற்காட்டில் வணிகக்குடியினரும், நகரத்தார்களும்

போர்த்துக்கீசிய எழுத்தாளர் காஸ்பர் கொரிய டோமா (Gaspar Correa toma 4, ch XXXI) அவர்களை மேற்கோளாகக் காட்டி நூலாசிரியர் எஸ்.ஜெயசீல ஸ்டீபன் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

தங்கத்தை எடையிடும் முறைகள் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தன. அதைப் போல தங்கம் விற்பனை செய்யும் கடைகள் காசுக்கடை என அழைக்கப்பட்டது. இக்காலத்தில் தான் காசுக்கடை, வராகன் போன்ற சொற்கள் புழக்கத்திற்கு வந்தன.


வணிகக் குழுக்களில் செட்டிகளின் ஆதிக்கமே மேலோங்கி இருந்ததாக மேலும் குறிப்பிடுகிறார்.

காளஹஸ்தி பகுதியில் செயல்பட்ட ஒரு வணிகக் குழுவில் கையெழுத்திட்ட ஆறு பேரில் ஐந்து பேர்கள் செட்டியார்கள் என ஜெயசீலன் குறிப்பிடுகிறார். (ARE 235 of 1905 / 1599 - 59 of 1939 S11 Vol 17-32.)

1599-ல் செயல்பட்டவர்களில் மயிலாப்பூரில் பட்டணசுவாமி என்ற பெயரில் செட்டியார் இருந்ததாகக் குறிப்புகள் உள்ளன. (பக். 90-95)

செட்டியார் எனும் பொழுது நகரத்தார் உள்ளிட்ட வணிகச் சமூகங்கள் பலவும் குறிப்பிடப்படுகின்றன என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும். பட்டணசுவாமி என்ற பெயர் குறிப்பிடப்படும் பொழுது, அப்பெயர் நாட்டுக்கோட்டை நகரத்தார்களே என்று எடுத்துக் கொள்ளலாம். இந்தச் சொல்லை வலியுறுத்தும் வகையில் கீழே தரப்பட்டுள்ள கல்வெட்டு சிறந்த சான்றாக அமையும்.

# நூல்கள் வெளியீடு




இராமலிங்கர் இலக்கிய மன்றம் மற்றும் நல்லழகம்மை செல்லப்பன் அறக்கட்டளை சார்பாக சென்னை ஆதம்பாக்கம் DAV பள்ளியில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் புதுவயல் செல்லப்பன் அவர்கள் எழுதிய 'நகரத்தாரின் ஆன்மிகத் தொண்டும் அருந்தமிழ்ப்பணியும்' என்ற நூல் உள்ளிட்ட 4 நூல்களை தேசிய மனித உரிமைகள் ஆணையத் தலைவர் நீதியரசர் டாக்டர் வெ.ராமசுப்பிரமணியன் அவர்கள் வெளியிட முதல் பிரதியை உச்சநீதிமன்ற நீதியரசர் அரங்க மகாதேவன் அவர்கள் பெற்றுக் கொண்டார். உடன் (இடமிருந்து) பேராசிரியர்கள் மு.முத்துவேல், இராம.குருநாதன் மற்றும் புதுவயல் செல்லப்பன் ஆகியோர் உள்ளனர்.

### நாகலாபுரம் கல்வெட்டு – பட்டனசாமி நகரத்தார்கள்

(1521 – S11 Vol – 17 கல். எண் 679/ARE 623 – 1509 பக்.339 /312)

திருவள்ளூர் மாவட்டம் நாகலாபுரத்தில் உள்ள வேதவல்லித்தாயார் வேதநாராயண சுவாமி கோயிலில் உள்ள கிருஷ்ணதேவராயர் காலக் கல்வெட்டு, 1521-ஆம் ஆண்டைச் சேர்ந்தது. 16-ஆம் நூற்றாண்டிலும் நகரத்தார்கள் வெளிநாட்டு வணிகத்தைத் தொடர்ந்து செய்து வந்தார்கள் என்பதற்கு இக்கல்வெட்டு சான்றாக இருக்கிறது. இன்றைய பழவேற்காடு முன்காலத்தில் அனந்தராயன் பட்டினம் என்று அழைக்கப்பட்டது. இங்குள்ள கோயில் கரியமாணிக்கப் பெருமாள் கோயில் என அழைக்கப்பட்டது. பல மண்டலங்களைச் சேர்ந்த நகரத்தார்கள் – பட்டினசாமி பிரிவினர் உட்பட பல ஊர் நகரத்தார்களும் ஒன்று கூடி கப்பலில் ஏற்றுகிற, இறக்குகிற சரக்குகளுக்கு வரி விதிப்பது தொடர்பான கூட்டம் நடத்தி இருக்கின்றனர். அவர்கள் அனைவரையும் (நகரத்தார் அமைப்பைச் சேர்ந்த) பட்டினசாமிகள் ஒருங்கிணைத்தனர் என அச்செய்தி உள்ளது. அக்கல்வெட்டின்படி இளையாற்றங்குடி நகரத்தார்கள் அங்கு அந்தக் கூட்டத்தை நடத்தி இருக்க வேண்டும். பட்டினசாமிகள் என்ற சொல் பொதுச்சொல் அன்று. சிறப்பாக ஒன்றைச் சுட்டிக் காட்டும் சொல். ஆகவே, நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் நடத்திய கூட்டம் தான் பழவேற்காட்டில் நடந்த கூட்டம்.

வரி-12 – ...............பலவூர் சூழ்ந்தனகரத்தார்
பட்டணசுவாமிகள் சிட்டம் செட்டியார் இ
வரி-13- லக்ஷுஇபதி செட்டியார் பெங்காண்டை
செட்டியார் பட்டப்பிள்ளை செட்டியார் பழவெற்கா-
வரி-14- ட்டு பட்டின சுவாமிகள் (உல)கு செட்டியார்
ணாராயண செட்டியார் திருவத்திப்பிள்ளை செட்
வரி-15- டியார் முதலான சந்திறகிரி ராச்சியம் சூழ்ந்து
நகரத்தாரும் படைவீடு சூழ்ந்த நகரத்தாரும் சொ-
வரி-16- ழமண்டலத்திலுள்ள நகரத்தாரும்
பலமண்டலத்தினும் உண்டான நகரத்தாரும் ....

### பட்டப்பிள்ளை செட்டியார்

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஒரு நகரத்தாரின் பெயர் 'பட்டப்பிள்ளை செட்டியார்' எனக் குறிக்கப்படுகிறது. இந்தப் பெயரின் ஒலிக் குறிப்புக்கு இணையான பெயர் குழிபிறை நகரச்சிவன் கோயிலுக்கு முன்பு உள்ள பிள்ளையார் கோயில் கல்வெட்டில் காண முடிகிறது. 1650-ஆம் காலப் பகுதியைச் சேர்ந்த இக்கல்வெட்டில் 'பட்டப்பிளான் வகையறா' என ஒரு குடும்பத்தின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. மாத்தூர் கோயில், மணலூர் பிரிவைச் சேர்ந்தவர்கள். இக்கல்வெட்டு உள்ள பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள ஊருணி 'பட்டப்பிளான் ஊருணி' என அழைக்கப்படுகிறது. பட்டப்பிள்ளையான், பட்டப்பிளான் என உருமாறி இருக்கலாம். இன்று குழிபிறையில் பட்டப்பிளான் வகையறா என்ற பெயரில் யாரும் இல்லை. அப்படி இருந்ததாக எந்தச் செய்திகளையும் அறிய இயலவில்லை. அப்பெயரில் வேறு ஊர்களில் யாரேனும் இருந்தால் அன்பர்கள் தெரிவிக்கலாம்.

(வரலாறு வளரும்)

# காசி கும்பாபிஷேகம் நூல் வெளியீடு




திரு. சுப்பு சுந்தரம் அவர்கள் எழுதிய, ‘காசி கும்பாபிஷேகம்’ என்ற நூல் வெளியிட்டு விழா, சென்னை, மயிலாப்பூரில் 29.01.2025 அன்று நடைபெற்றது. தமிழக ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள் வெளியிட்டார். விழா மேடையில் நூலாசிரியரின் மகன் பாலசுந்தரம், மகள் ஹாசினி, சிவஸ்ரீ டாக்டர் பிச்சை குருக்கள், துக்ளக் ஆசிரியர் குருமூர்த்தி, நூலாசிரியர் சுப்பு சுந்தரம், நூலாசிரியரின் மனைவி அன்னபூரணி ஆகியோர் உள்ளனர். மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏஆர். எல். சுந்தரேசன் மற்றும் சென்னை ஐ.ஐ.டி., இயக்குநர் காமகோடி ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

# செல்வி உமையாள் ராமநாதன் நூல் வெளியீடு






13 வயது செல்வி உமையாள் ராமநாதன் எழுதிய 160 பக்கங்கள் நிறைந்த Against the shadows என்ற ஆங்கில திரில்லர் நாவலை தமிழகப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ்.சிவசங்கர் வெளியிட்டார். செல்வி உமையாள் ராமநாதன் துபாயில் இருப்பதால் அவரது சார்பாக அவரது மாமா மகள் ஸ்ரீகா ஸ்ரீ ராம் நினைவுப் பரிசினை பெற்றார்.

# மனிதனையும் பழக்கலாம்



டாக்டர் சோம வள்ளியப்பன்

சென்னையில் உள்ள டால்ஃபின் சிட்டிக்கு செல்லும் வாய்ப்பு கிடைத்தது. அங்கு தற்போது டால்ஃபின்கள் இல்லை. சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டதாக சொன்னார்கள். ஆனால், ஷி லயன் (Sea Lion) எனப்படும் கடல் சிங்கங்கள் இருக்கின்றன.

அவற்றை நன்கு பழக்கியிருக்கிறார்கள். அவை பிரமாதமாக வாலிபால் விளையாடுகின்றன. பேஸ்கட்பால் விளையாடுகின்றன. கைத்தட்டுகின்றன. சொன்னதைச் செய்கின்றன. 'வாவ்'. எல்லாம் செய்கின்றன. பழக்கம் காரணமாக. அவன் சொன்னபடி கேட்பதற்கு அவற்றை மனிதன் பழக்கி வைத்திருக்கிறான். அவற்றை மட்டுமா சிங்கம், புலி, யானை, கிளி, நாய், குதிரை. குரங்கு என எவற்றையும் விட்டு வைக்கவில்லை. விடயம் அதுவல்ல.

மனிதன் மனிதனையும் பழக்கி வைத்திருக்கிறான். பழக்குகிறோம் என்று சொல்லாமலேயே. பழக்கங்களில் இருந்து மீள்வது சிரமம். ஏன்.. சிலரால் முடியவே முடியாது. ஒரு சிலருக்கு குடிப்பழக்கம். வேறு சிலருக்கு சேமிப்பு, நடைப்பயிற்சி போன்ற நல்ல பழக்கங்கள். எதுவாகவும் இருக்கலாம். ஆனால் தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

இதை நன்கு உணர்ந்து கொண்டவர்கள் மனிதர்களை பழக்குகிறார்கள். ட்ரெய்னிங் என்பது போல. வீட்டில் குழந்தைகளை, பள்ளியில் மாணவர்களை, தொழிலகங்களில் ஊழியர்களை சிலவற்றிற்கு பழக்கப்படுத்துகிறார்கள். பழக்கப்படுத்தப்பட்டவர், அது போலவே செய்ய, பழக்கப்படுத்தியவருக்கு வெற்றி. இவற்றை இன்னும் சரியாகப் புரிந்து கொண்டவர்கள், இந்தப் பழக்கத்தையே தங்கள் சக்திக்கு ஏற்ப பெரிய அளவில் பயன்படுத்திக் கொள்கிறார்கள். சிலர் மதங்களை தோற்றுவிக்கிறார்கள். வேறு சிலர் இயக்கங்களை. இன்னும் சிலர், அரசியல் கட்சிகளைத் தோற்றுவிக்கிறார்கள். தங்கள் எண்ணங்களை அடுத்தவர் மனதில் வெற்றிகரமாக விதைத்து, வளர்த்து, பின் அதன் நிழலில் அமர்ந்து கொள்கிறார்கள், அனுபவிக்கிறார்கள்.

மனிதக் கூட்டத்தை தங்கள் எண்ணப்படிப் பழக்கப்படுத்தி விடுகிறார்கள். பிறகு என்ன? கை சொடுக்கினால் அந்த கூட்டம் ஆடும். ஏன்.. அவர்கள் கண்ணசைத்தால் தற்கொலை கூட செய்து கொள்ளும். இசை, சமுதாய கருத்துகள். அரசியல் கோட்பாடுகள், மத நம்பிக்கைகள், பகுத்தறிவுக் கருத்துகள், மொழி ஆர்வம், இனப்பற்று,



தேசப்பற்று, விடுதலை உணர்வு, கவிதை மோகம், விளையாட்டார்வம். இவற்றில் எதை வேண்டுமானாலும் மற்றவர்கள் மனதில் விதைக்கலாம், வளர்க்கலாம். அது ஒரு முதலீடு போல. சிறுவயதில் அல்லது வேறு வயதிலோ மிகச் சரியாக ஒருவர் மனதிலோ, மூளையிலோ பதிவு செய்து விட்டால் போதும். மீத வாழ்க்கை முழுவதும் அவர்கள் இதையே செய்து கொண்டிருப்பார்கள். ப்ரோக்ராமை செயல்படுத்தும் கம்ப்யூட்டர் போல.

ஒருவர் வேண்டுமென்றே நம்மை அழைத்து, இதை செய்யலாம் அல்லது நாமாகவே கூட விரும்பி அவற்றில் நம்மை ஈடுபடுத்திக் கொண்டு பழகிவிடலாம். ஒரு விளையாட்டில் ஆர்வம் காட்டி முனைந்து பழகி, அதுவே நினைவாகி வாழ்க்கையை, அதற்காக எதையும் தியாகம் செய்யத் தயாராவது போல பெரும்பாலும், மனிதனுக்கு எது சொல்லி கொடுக்கப்படுகிறதோ அதைப் பழகிக் கொண்டு பிறகு விரும்புகிறான்.

மனிதன் எதை விரும்புகிறானோ அதையே நம்புகிறான், எதை நம்புகிறானோ அதை யோசிக்கிறான். ஆக, மனிதர்களை எதையாவது செய்ய வைக்க வேண்டுமென்றால், அவர்களை முதலில் அவற்றை விரும்ப வைக்க வேண்டும். அவர்களை விரும்ப வைக்க, அதற்கு பழக்கப்படுத்த வேண்டும். பழக்கப்படுத்த அவர்களை நம் பால் ஈர்க்க வேண்டும்.

ஒவ்வொருவரும், தினம் தினம் பலராலும் பழக்கப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறோம். நாமும் சிலரையாவது பழக்கிக் கொண்டிருக்கிறோம். இவற்றைப் பற்றி கூடுதல் விழிப்புணர்வு கொண்டால், தேவையற்ற, ஆபத்தான தீய பழக்கங்களிலிருந்து தப்பி விடலாம். ♦

# 4 உங்களுடன் உரையாடுங்கள்



எம். சிதம்பரம்

**உன்னிடம் ஒரு கை இல்லையா? என்றேன்.**
**இல்லை என்னிடம் ஒரு கை இருக்கிறது என்றான்.**

இல்லாதவையை ஏன் பார்க்கிறீர்கள்? பார்க்கவே பார்க்காதீர்கள். மாறாக உங்களிடம் இருப்பதை மட்டும் பாருங்கள். உங்களிடம் இல்லாதவைகளை எண்ணி எண்ணி வருந்தி தன்னம்பிக்கையை இழப்பதை விட உங்களிடம் இருப்பதை வைத்துக் கொண்டு இல்லாததை அடைய நினைப்பதே தன்னம்பிக்கை ஆகும். ஆயிரம் கடவுளை நம்பி தன்னையே நம்பாதவனே மிகப்பெரிய நாத்திகன் என்கிறார் மகாகவி பாரதியார்.



தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும்? வெற்றி பெற வேண்டும். நீங்கள் வெற்றி பெற்றால் உங்கள் தன்னம்பிக்கை தன்னால் வளரும். அப்படி என்றால் தோல்வி அடைந்தால் தன்னம்பிக்கை தன்னால் தகர்ந்து விடுமா? இல்லவேயில்லை. மாறாக தோல்வியே வெற்றியின் பிறப்பிடம்.

தோல்வி அடையாதோர் என இவ்வுலகில் எவருமே கிடையாது. அப்படி தோல்வி கண்டோர் துவண்டு விடுவதும் கிடையாது.

நகரத்தார்கள் தங்கள் வியாபாரத்தில் ஏற்படும் நஷ்டத்தை, நஷ்டமெனக் கொள்வதில்லை புத்தி கொள்முதல் என்பார்கள். அதே போல் தான் நாமும் நாம் சந்திக்கும் தோல்விகளை தோல்விகளாகக் கருதாமல் வெற்றியின் நுழைவாயிலாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அந்த நுழைவாயிலில் அஞ்சி நடுங்கி துவண்டு கொண்டே நுழையாமல் தைரியமாக சவால்களை நேருக்கு நேர் எதிர் கொண்டால் சாதனைகள் உங்களுக்கு சலாம் போடும். அங்கீகாரங்கள் உங்கள் கைகளை குலுக்கும்.

வெற்றியாளர்களின் வாழ்க்கையை வாசியுங்கள். துவக்கத்தில் தோல்விகளே மாறி மாறி வந்து கொண்டே இருந்திருக்கும். பயந்தார்களா, தங்களை வெறுத்தார்களா, வாழ்க்கையை வெறுத்து ஓடினார்களா?

கிடையவே கிடையாது தங்களை நேசித்தார்கள். தங்கள் வாழ்க்கையை அதை விட நேசித்தார்கள். நம்பிக்கை துளிர் விட்டது. வெற்றி மகுடம் சூட்டியது.

தோல்வி என்பது உங்கள் இலட்சிய பயணத்தில், உங்கள் பாதையில் தோன்றும் ஒரு சிறு தடையேயன்றி முற்றுப்புள்ளி அல்ல.

கால் இடறி கீழே விழலாம். பிறர் கீழே விழுந்தால், நாம் சிரிப்போம். அதே போல் பிறர் நாம் எப்பொழுது கீழே விழுவோமென காத்துக் கொண்டிருப்பார்கள். நாம் கீழே விழுந்தவுடன் கை தட்டி சிரிப்பார்கள்.

பிறர் நம்மைப் பார்த்து சிரிப்பதற்கு முன் நாம் நம்மைப் பார்த்து சிரிக்க வேண்டும். அழக் கூடாது.

கீழே விழுந்தால் எப்படி சிரிப்பது எனக் கேட்கிறீர்களா. 'துன்பம் வரும் வேளையிலே சிரியுங்கள்' என வள்ளுவப் பெருந்தகை சொன்னது போல், நாம் தவறி இடறும் போது, கதறி ஓவரா சீன் போடாமல், அப்படியே அழுது புரண்டு கீழேயே கிடக்கக் கூடாது. எழ வேண்டும். துள்ளி எழ வேண்டும். ஏன் விழுந்தோம் என யோசிக்க வேண்டும். அடுத்த முறை ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். விழாமல் நிதானமாக செயல்பட வேண்டும். அன்னை பூமி கீழே விழுந்த ஒருவனிடம் சொன்னதாம். நீ தானே பன்னிரெண்டு முறை விழுந்தாய் என. பன்னிரெண்டு முறை ஒருவன் விழுந்தான் என்றால் பன்னிரெண்டு முறை அவன் எழுந்துள்ளான் என்று தானே அர்த்தம். இதைத்தான் மூன்று சக்கர நாற்காலியில் இருந்த அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சொன்னார், Every time I fall I rise.

ஆம் நண்பர்களே ஒவ்வொரு முறை நாம் கீழே விழும் போதும், நாம் நடுங்காமல் தைரியமாக மீண்டு எழ வேண்டும். சீறிப் பாய வேண்டும். வெற்றி வாகை சூட வேண்டும்.



# குறள் பாட்டு

குழந்தைக் கவிஞர் செல்ல கணபதி

அதிகாரம் – 39 (இறைமாட்சி)

382) அஞ்சாமை ஈகை அறிவூஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு.

பகைமைக்கு அஞ்சாமை பசித்தவர்க்குச் சாப்பாடு
பட்டறிவுத் திறத்தாலே பிரச்சினையைக் களைதல்
மிகவளரும் ஊக்கத்தால் வேதனைகள் வெல்லல்
வேண்டும் இவை குறையாமல் வேர்ந்தர்க்கு இயல்பாய்
அஞ்சாமை ஈகை அறிவூஊக்கம் நாலும்இவை
அரசனிடம் இயல்பாக அமைந்திருந்தால் போதும்
கொஞ்சமுமே குறையில்லை மக்களெல்லாம் மகிழ்வார்
குறையில்லை கோவிந்தா குறையில்லை என்போம்.

383) தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவர்க்கு.

தூங்காமை என்பது அயராத வீரம்
தூயமனம் பெறுவதற்குத் தொலையாத கல்வி
தூங்குகிற மனவலிமை துணிச்சல்எனும் ஆற்றல்
தகுதிஇவை மூன்றும்தான் அரசாள் பவர்க்கு.
தூங்காமை கல்வி துணிவுடைமை மூன்றும்தான்
தொலையாத செல்வமாய் ஆள்வோர்க்கு வேண்டுமாம்
நீங்காமல் வளரும் நிலைத்த ஆட்சியினை
நெடுக இம்மூன்றைக் கொள்பவரே தந்திடுவார்.

385) இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

பொருள்வரும் வழியைப் புரிந்துஅதை அமைத்தலும்
பொருள்வர அதனை வீணாக் காமல்
பொறுப்பாய்ச் சேர்த்துப் பாதுகாப் பதுடன்
பொருளை வகுக்க வல்லதே அரசு
வருவாய் வரும்வழி திட்ட மிடுதலும்
வந்ததைச் சிக்கன மாய்ச்செல வாக்கியே
பொருளா தாரம் பெருக்கி வைத்தலே
பொறுப்பாய்ச் செயல்படும் அரசின் கடமையாம்.

389) செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.

காது புளிக்கச் சான்றோர் கடும்சொல்லை
காட்டிடும் போதிலும் கலங்காமல் அதைக்கேட்டு
யாதும் நன்மைக்கே. எனஎண்ணி மனம்பொறுக்கும்
அரசனின் குடைநிழலில் அகிலமே இளைப்பாறும்.
சான்றோர் கண்டிப்பு தர்மத்தை நிலைநாட்டும்
சான்றோர் கடும்சொல்லை ஏற்கின்ற வேந்தன்எனில்
ஆன்றோர் பாராட்ட அமைதி பெருகிவரும்
அன்பென்னும் உறவினிலே அகிலமே இணைந்திருக்கும்.

# திருமந்திரச் சுவை – 43

## சிவசொரூபம்



பூங்குன்றம் இராமசாமி

சிவசொரூபம் என்பது சிவத்தின் உண்மை நிலை. அது சிவன் 'இப்படியன்' எனச் சுட்டிக் காட்ட இயலாத ஒன்று.

நாம் அறிந்த அளவில் சிவம் ஒரு சிவந்த பேரொளிப் பிளம்பு. அஃதாவது, 'செம்மேனி' உடையது. உரு அற்றது.

அந்நிலை அனைத்தையும் கடந்த நிலை. அதே சமயம், அந்நிலையே அனைத்தையும் உள் அடக்கிய நிலை (கட + உள்). ஆதலால், நாம் அவன் உள் உள்ளோம். அவன் நம் உள் உள்ளான்.

அவன் எங்கும் கலந்து நிறைந்தவன். எனவே, அவன் அனைத்தையும் அறியும் பேரறிவாளன்.

அவனது இயல்பு நிலை 'சிவம்'. நாம் உணர வேண்டி அதனைச் 'சிவன்' என ஆணாயும் அவன் ஆற்றலைச் (Energy) 'சக்தி' எனப் பெண்ணாயும் கொள்கிறோம். ஆயினும், அங்கு 'ஆண், பெண்' என்கிற பேதம் ஏதும் இல்லை. நாம் வழிபட வேண்டியே அவனுக்கும் உருவம் கொடுத்துள்ளோம்.

இவற்றைத் திருமூலர் வாக்காகக் காண்போம்.

பெண்ணல்ல ஆணல்ல பேடல்ல மூடத்துள்
உள்நின்ற சோதி ஒருவர்க்கு அறியொணாந்
கண்ணின்றிக் காணும் செவியின்றிக் கேட்டிடும்
அண்ணல் பெருமையை ஆய்ந்தது மூப்பே (10.1872)

இறைவன் பெண் அல்லன். ஆண் அல்லன். அலியும் அல்லன். அவன் உயிருக்குள் உயிராய் நிற்கின்ற சோதி வடிவினன். அவன் ஒருவராலும் அறிய இயலாதவன். அவன் கண் என்னும் கருவியின்றிக் காண்பவன். செவியின்றிக் கேட்பவன். இவ்வண்ணம் இறைவன் பெருமையை அறிவதே முதிர்ந்த ஞானம். அவ்வாறு உணர்பவர் சிவனடியார்.

மூடம்: அறிவும் மனமும் காரியப்படாது மடங்கிய நிலை. மூப்பு: முதிர்ச்சி.

ஆக, அவனைத் தேடி நாம் எங்கும் அலைய வேண்டியதில்லை. அவனை நம் உள் உணர்ந்து அவனோடு ஒன்றினாலே போதும்! வெளியில் ஓடும் நம் மனத்தை உள்முகமாகத் திருப்பினாலே போதும்! அவனை நம்முள் உணர்ந்து வழிபடலாம். அவன் வழிப்படலாம். நாம் அச் சிவப்பேரின்பத்தை அனுபவிக்கலாம்.

இதனையும் திருமூலர் வாக்காகக் காண்போம்.

பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்
சீவனுக்கு உள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல உணர்ந்தறி வாளர்க்கு
நாவி யணைந்த நடுதறி யாமே (10.1459)

பூவினில் (பூவுக்குள்) மணம் பொருந்தி உள்ளது. அதுபோலச் சீவனுக்குள் (உயிர்) சிவமணம் பூத்துள்ளது. இதனைச் சித்திரம் போல அசைவற்றுத் தியானித்து உணரவல்லார்களுக்கு அவர்களது உயிர் புனுகுப் பூனை சேர்ந்த மூங்கிற்குழாய் (நடுதறி) போலாகும்.

புனுகுப் பூனை அணைந்த மூங்கிற் குழாயும் புனுகுமணம் பெறும் (சோப்பு இருந்த பெட்டி சோப்பின் மணம் பெருகுதல் போல). அதுபோலச் சிவனை அணைந்த சீவனுள்ளும் சிவமணம் கமழ்ந்து விளங்கும்.

நாவி: புனுகுப் பூனை. ✶

# இராம காவியம்

தேவகோட்டை அரு.லெட்சுமணன்
(அலெக்ஸ்)



## ராமர் இலக்குவன் கிஷ்கிந்தா வருதல் - (11)

கடலை ஒத்த பரப்பும் கருநீலமாய்
பம்பை தவழ்ந்து சீராய் ஓடியது
அன்னப்பறவையின் அழகு நடையும்
கண்ணில் கண்ட குவளை ஆம்பல்
எண்ணில் அடங்கா இனிமை சேர்க்க
இதயத்து சீதையை எண்ணியே துவண்டான்
பம்பையில் நீராடி பரமனை வேண்டி
பக்கத்து குடிலில் இருவரும் படுத்தனர்
இரவு கவ்வ வான் உறங்க
வையம் உறங்க பூ உறங்க
புல் உறங்க ஊரே உறங்கியது
இவர்கள் இமைகள் இணைய மறந்தன
கதிரவன் ஒளியில் கண்கள் கூச
எழுந்தனர் நீராடி கடன்களை முடித்தனர்

ருசிய முகம் மலையை தேடி நடந்தனர்
குரங்குகள் கூட்டம் இவர்களைக் கண்டது
சுக்ரீவன் வசம் செய்தியை சொன்னது
வாலியை நினைத்து பயந்து இருப்பவன்
இவர்களை நினைத்தும் பயந்து போனான்
அனுமனை அனுப்பி அறிய சொன்னான்
உண்மையை அறிந்து திரும்பச் சொன்னான்
அனுமன் அவர்களை மறைந்து பார்த்தான்
கடவுளர் இருவராய் அவர்கள் தெரிய
பாதம் பார்த்து பணிந்து வணங்கினான்
ராமனை நாடி அவர் முன் நின்றான்
அன்பு விழிகளால் அனுமனை பார்த்து
என்ன வேண்டும் எங்கு வந்தீர்
நீவிர் யார் விவரம் கேட்டான்


தன் பெயர் சொல்லி தாய் பெயர் சொல்லி
சுக்ரீவன் வானர மக்கள் வளமுடன்
வாழ ஏவல் செய்வோன் பெயர்
அனுமன் என்றே உரைத்து வணங்கினான்
அனுமன் பார்வையும் பழகும் தன்மையும்
அவன் புகழ் சொல்ல அறிந்து கொண்டான்
இவன் எல்லாம் அறிந்த நல்லவன்
இறையருள் முழுதும் பெற்றவன்
என்பதை அறிந்து வந்த நோக்கம்
முழுதும் சொன்னான்
சீதையைப் பிரிந்த கதையும் சொன்னான்
சுக்ரீவன் தன்னை நாடல் நலம் என்று
கந்தர்வன் சொன்ன விவரம் சொன்னான்
நட்பை நாடி உதவியை வேண்டி
வந்த விவரம் முழுதும் சொன்னான்.

## சுக்ரீவனோடு அறுவரானர் - (12)

ராமனைக் கண்டு பக்தி கொண்டவன்
சுக்ரீவன் வசம் எல்லாம் சொன்னான்
தவக்கோலம் பூண்டு வனவாசம் வந்தவன்
தந்தையை இழந்தான் தாரத்தை பிரிந்தான்
தேவியை தேடவே நம்மிடம் வந்தான்
உத்தமன் சத்தியன் தெய்வமாய் தெரிபவன்
நம்மிடம் வந்தது நம் நலம் காக்கவே
என்றவன் அழைத்தான்
இவர்களை காணவே
இருவரின் இழப்பும்
ஒன்றாய் இருக்கவே இணைந்தனர்
ஐவராய் இருந்தவர்
அன்புடன் அறுவராயினர்
மூர்க்கமாய் நடந்த மாயாவி போரில்
அண்ணன் வாலி குகையில் சிறைப்பட
நாட்கள் மாதமாய் கடந்து போனதால்
மக்கள் வாலியை இறந்தனன் என்றனர்
நாட்டைக் காக்கவும் மக்களை பேணவும்
சுக்ரீவன் அரசனாக ஆட்சி நடந்தது
குகையினை விட்டு தப்பிய வாலி உயிருடன்
வந்தனன் உண்மை அறியாது
வஞ்சம் கொண்டனன்
சுக்ரீவனை விரட்டி
மனைவியை கவர்ந்தனன்

ருசிமுக மலைக்கு வாலி வந்தால்
தலை சுக்கலாகி வெடிக்கும்
சாபம் உண்டு
சாபம் காக்க வானரம் அனுமன்
கூடவே இருக்க
அரசனாய் வாழ்ந்தான்
இராமனை சரணடைந்து, மனைவி
வாலி வசமிருக்க, மீட்க கேட்டான்.
மெல்லியன் என்னை
வம்பாய் வதைத்தான்.
வல்லியனவன் வதைக்க வழிஇல்லை.
துணைக்கு நீ இருந்தால்துன்பம் போம்
செய்வினை எல்லாம் சிதறிப் போம்
என் தூயவளை மீட்பேன் என்றான்.
காலில் வீழ்ந்தவனை
கனிவாய் பார்த்த இராமன்.
கடமையாய் செய்வேன்
இதை கவலை விடு.
சீலன் சிவபக்தி யாளன்
ஞானியுமான வாலி
உண்மையை உணராது
மூடனாய் போனான்
தம்பி மனைவியை
தாரமாய் கொள்ளும்

தரம் அற்றுப் போனான்
தன்னிலை இழந்தான்
போரிட புறப்படு என்றான்
இலக்குவன் இணைந்தே வர
வாலியை வதைத்து
நீ இழந்ததை மீட்பேன்
என்றே ராமன் ஆசியும் தந்தான்.
தரம் அற்றுப் போனான்
தன்னிலை இழந்தான். (தொடரும்)



# ஔவை ஆத்திசூடி - உரை செம்மல் வ.சுப.மாணிக்கனார்

1. அறஞ்செய விரும்பு

நல்லன செய்ய ஆசைப்படு.

2. ஆறுவது சினம்

கோபத்தை அடக்கிக் கொள்.

3. இயல்வது கரவேல்

கொடுக்க முடிந்த பொருளை ஒளிக்காமல் கொடு.

4. ஈவது விலக்கேல்

ஒருவர் மற்றொருவருக்குக் கொடுப்பதைத் தடுக்காதே.

5. உடையது விளம்பேல்

உன் உடைமைப் பொருளை வெளிப்படப் பலமுறையும் சொல்லாதே.

6. ஊக்கமது கைவிடேல்

மனவலிமையைக் கைவிடாதே.

7. எண்ணெழுத் திகழேல்

கணக்கையும் இலக்கணத்தையும் இகழாமல் நன்றாக கற்றுக்கொள்.

8. ஏற்பது திகழ்ச்சி

ஒருவரிடம் போய் இரப்பது பெருமைக் குறைவாகும்.

9. ஐய மிட்டுண்

ஏழை எளியவர்கட்குச் சோறு போட்டு நீ உண்.

10. ஒப்புர வொழுகு

உலகத்தோடு ஒத்து நடந்து கொள்.

11. ஓதுவ தொழியேல்

எக்காலத்தும் படித்துக் கொண்டேயிரு.

12. ஔவியம் பேசேல்

யாரிடத்தும் பொறாமையுடன் பேசாதே.

13. அஃகம் சுருக்கேல்

தானியங்களை அளவு குறைத்து விற்காதே.

14. கண்டொன்று சொல்லேல்

கண்டபடி மாற்றிச் சொல்லாதே.

15. ஙப்போல் வளை

'ங' எழுத்துப்போல் நீயும் உன் சுற்றத்தைத் தழுவு.

16. சனி நீராடு

சனிக்கிழமைதோறும் எண்ணெய் முழுகு.

17. ஞயம்பட வுரை

யாரிடமும் இனிமையாகப் பேசு.

18. இடம்பட வீடெடேல்

இடம் பெரியதாக வீட்டைக் கட்டாதே.

19. இணக்கமறிந் திணங்கு

நல்ல குணம் உடையவரோடு நட்புச் செய்.

20. தந்தை தாய்ப்பேண்

தாய் தந்தையரை மதித்துக் காப்பாற்று.

21. நன்றி மறவேல்

பிறர் செய்த நன்மையை மறக்காதே.

22. பருவத்தே பயிர்செய்

எந்தச் செயலையும் உரிய காலத்திலேயே செய்.

23. மன்று பறித்துண்ணேல்

நீதிமன்றத்தில் இலஞ்சம் வாங்கி வாழாதே.

24. இயல்பலா தனசெயேல்

நல்லொழுக்கத்திற்கு மாறாக நடக்காதே.

25. அரவ மாட்டேல்

நச்சுப்பாம்புகளைத் தொடாதே.

26. இலவம் பஞ்சிற்றுயில்

இலவம் பஞ்சுபோல மெல்லத் தூங்கு.

27. வஞ்சகம் பேசேல்

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதே.

28. அழகலாதன செயேல்

சிறப்பில்லாத செயல்களைச் செய்யாதே.

29. இளமை யிற்கல்

இளம் பருவத்திலே கல்வி கற்கத் தொடங்கு.

30. அறனை மறவேல்

அறத்தினை மறவாமற் செய்.

31. அனந்த லாடேல்

காலையில் அதிக நேரம் தூங்காதே.

32. கடிவது மற

கடுமையாகப் பேசுவதை மறந்து விடு.

33. காப்பது விரதம்

நல்ல கொள்கையை விடாமல் காப்பதே விரதமாகும்.

34. கிழமைப் படவாழ்

பிறர்க்குப் பயன்படும்படி வாழ்வாய்.

35. கீழ்மை யகற்று

இழிவான குணத்தையும் செயலையும் நீக்கு.

36. குணமது கைவிடேல்

உயர்குணத்தை எந்தநிலையிலும் கைவிடாதே.

37. கூடிப் பிரியேல்

ஒருவரிடம் கூடிப் பழகிய பிறகு பிரியாதே.

38. கெடுப்ப தொழி

பிறர்க்குத் தீங்கு செய்வதை நீக்கு.

39. கேள்வி முயல்

நல்ல கருத்துக்களை விரும்பிக் கேட்க முயற்சி செய்.

40. கைவினை கரவேல்

உனக்குத் தெரிந்த கைத்தொழிலைப் பிறர்க்கு மறைக்காதே.

41. கொள்ளை விரும்பேல்

பிறர் பொருளைக் கொள்ளையடிக்க ஆசைப்படாதே.

42. கோதாட் டொழி

தீங்கான விளையாட்டுக்களை நீக்கு.

43. சக்கர நெறி நில்

அரசு இடும் சட்டத்திற்கு அடங்கி நட.

44. சான்றோ ரினத்திரு

கல்வி அறிவு ஒழுக்கம் நிறைந்தவர்களுடைய கூட்டத்தில் எப்பொழுதும் இரு.

45. சித்திரம் பேசேல்

பொய்யான சொற்களை மெய்யென்று நம்பும்படி பேசாதே.

46. சீர்மை மறவேல்

நல்ல பண்புகளை மறக்காதே.

47. சுளிக்கச் சொல்லேல்

கேட்போர் வெறுப்பு அடையும்படி பேசாதே.

48. சூது விரும்பேல்

சூதாடுதலை விளையாட்டாகவும் விரும்பாதே.

49. செய்வன திருந்தச் செய்

செய்யும் செயல்களைச் செம்மையாகச் செய்.

50. சேரிட மறிந்துசேர்

நல்ல இடமாகத் தேர்ந்தெடுத்துச் சேர்ந்து கொள்.

51. சையெனத் திரியேல்

'சீ என்று வெறுக்கும்படி அலையாதே.

52. சொற்சோர்வு படேல்

சொல்லில் குற்றம்படப் பேசாதே.

53. சோம்பித் திரியேல்

சோம்பலாகிக் கண்டபடி திரியாதே.

54. தக்கோ னெனத்திரி

சிறந்தவன் எனப் புகழும்படி நடந்துகொள்.

55. தானமது விரும்பு

எளியவர்கட்குத் தானங் கொடுக்க ஆசைப்படு.

56. திருமாலுக் கடிமைசெய்

நாராயணனுக்குத் தொண்டனாக இரு.

57. தீவினை யகற்று

கொடுமையான செயல்களை நீக்கு.

58. துன்பத்திற் கிடங்கொடேல்

துன்பம் வரும்படி நடந்து கொள்ளாதே.

59. தூக்கி வினைசெய்

எந்தச் செயலையும் முறையாக எண்ணிப் பார்த்துப் பிறகு செய்.

60. தெய்வ மிகழேல்

கடவுளை இகழ்ந்து பேசாதே.

61. தேசத்தோ டொத்துவாழ்

நீ வாழும் தேசத்தில் உள்ளவர்களோடு ஒத்து வாழ்.

62. தையல் சொற்கேளேல்

மனைவி சொல்வதையெல்லாம் அப்படியே கேட்டு நடவாதே.

63. தொன்மை மறவேல்

பழம் பெருமையை மறவாதே.

64. தோற்பன தொடரேல்

தோல்வி தரும் செயல்களில் ஈடுபடாதே.

65. நன்மை கடைப்பிடி

நல்ல குணங்களை உறுதியாகப் பற்றிக்கொள்.

66. நாடொப் பனசெய்

நாட்டுக்குப் பொருத்தமான நல்ல செயல்களைச் செய்.

67. நிலையிற் பிரியேல்

உனக்கு உரிய நிலையினின்றும் எக்காரணத்தாலும் தாழ்ந்து விடாதே.

68. நீர்விளை யாடேல்

ஆழமான நீர்நிலைகளில் விளையாடாதே.

69. நுண்மை நுகரேல்

நோய் தரும் தின்பண்டங்களைச் சாப்பிடாதே.

70. நூல்பல கல்

நல்ல நூல்கள் பலவற்றைக் கற்றுக்கொள்.

71. நெற்பயிர் விளைவு செய்

உழவிற் சிறந்த நெல்லை உண்டாக்கு.

72. நேர்பட வொழுகு

நேர்மையாகவும் நாணயமாகவும் நடந்து கொள்.

73. நைவினை நணுகேல்

பிறர் வருந்தும் தீய வினைகளைச் செய்யாதே.

74. நொய்ய வுரையேல்

பயனில்லாத இளக்கமான சொற்களைப் பேசாதே.

75. நோய்க்கிடங் கொடேல்

நோய் வரும்படி நடந்து கொள்ளாதே.

76. பழிப்பன பகரேல்

பழியான இழி சொற்களைப் பேசாதே.

77. பாம்பொடு பழகேல்

பாம்பைப் போன்ற கொடியவரோடு பழகாதே.

78. பிழைபடச் சொல்லேல்

மொழியைப் பிழையாகப் பேசாதே.

79. பீடுபெற நில்

பெருமை தரும் நல்வழியில் நில்.

80. புகழ்ந்தாரைப் போற்றிவாழ்

பெரியவர்களை வணங்கி வாழ்க.

81. பூமி திருத்தியுண்

நிலத்தைச் சீர்திருத்தி விளைவு செய்து உண்பாயாக.

82. பெரியாரைத் துணைக்கொள்.

பெரியவர்களை வாழ்க்கைக்கு வழிகாட்டியாகக் கொள்.

83. பேதைமை யகற்று

மடத்தன்மையை நீக்கிக் கொள்.

84. பையலோ டிணங்கேல்

போக்கிரிச் சிறுபிள்ளைகளோடு கூடாதே.

85. பொருள்தனைப் போற்றிவாழ்

வீண்செலவு செய்யாமல் பொருள்களைக் காத்துப் பெருக்கி வாழ்வாயாக.

86. போர்த்தொழில் புரியேல்

யாருடனும் வீண்சண்டை போடாதே.

87. மனந் தடுமாறேல்

எதற்கும் கலக்கம் அடையாதே.

88. மாற்றானுக் கிடங்கொடேல்

பகைவனுக்கு இடங்கொடுத்துத் துன்பம் அடையாதே.

89. மிகைபடச் சொல்லேல்

தேவையில்லாமல் பேசாதே.

90. மீதூண் விரும்பேல்

அளவுக்குமேல் சாப்பிடுதலை விரும்பாதே.

91. முனைமுகத்து நில்லேல்

கலகஞ் செய்யும் இடத்தில் நிற்காதே.

92. மூர்க்கரோ டிணங்கேல்

பிடிவாதக்காரரோடு கூடிப் பழகாதே.

93. மெல்லினல்லாள் தோள்சேர்

மனைவியை விட்டுப் பிரியாது வாழ்வாயாக.

94. மேன்மக்கள் சொற்கேள்

உயர்ந்தவர் சொற்கேட்டு நட

95. மைவிழியார் மனையகல்

பரத்தையர் வீட்டை நாடாதே.

96. மொழிவ தறமொழி

சொல்வதை ஐயத்திற்கு இடமில்லாமல் தெளிவாகச் சொல்.

97. மோகத் தைமுனி

தேவையில்லாத பொருள்கள் மீது ஆசையை நீக்கு.

98. வல்லமை பேசேல்

உன்னுடைய வல்லமையை நீயே புகழ்ந்து பேசாதே.

99. வாதுமுற் கூறேல்

யாரிடத்தும் வீண் வாதங்கள் செய்யாதே.

100. வித்தை விரும்பு

கல்வியைத் தொடர்ந்து கற்க ஆசைப்படு.

101. வீடு பெறநில்

பேரின்பம் கிடைக்கும்படி நடந்துகொள்.

102. உத்தம னாயிரு

நல்ல பண்புகளில் மேம்பட்டு விளங்கு.

103. ஊருடன் கூடிவாழ்

ஊர் மக்களோடு ஒத்துழைத்து வாழ்க.

104. வெட்டெனப் பேசேல்

கத்தி வெட்டைப்போல் துண்டுபடப் பேசாதே.

105. வேண்டி வினைசெயேல்

வேண்டுமென்றே தீயவற்றைச் செய்யாதே.

106. வைகறைத் துயிலெழு

பொழுது விடிவதற்கு முன்னே விழித்து எழு.

107. ஒன்னாரைத் தேறேல்

பகைவர் சொற்கொண்டு அவரை நம்பாதே.

108. ஓரஞ் சொல்லேல்

எந்த வழக்கிலும் ஒரு பக்கமாகப் பேசாதே.

# பேசாப் பொருள்... பேசுவது ஆதீனகர்த்தர்

அரியக்குடி " ஸ்ரீ" – சபாரத்தினம்
(garudasaba@gmail.com)



தொலைக்காட்சியில் ஒரு விவாதம்... கலந்து கொண்டவர்கள் இரு அணிகளாக சமீபத்தில் திருமணமான இளம் தம்பதியினர். பேசு பொருள் விநோதமானது. நீங்கள் DINKஆ அல்லது DINKYயா... என்ன இது பாலச்சந்தர் படம் போலப் புதிராக இருக்கிறதே எனத் தொடர்ந்தேன்.

DINK என்றால் Dual Income No Kids ஆம். DINKY என்றால் Dual Income No Kids Yet என்கிறார்கள். இது உலகத்தாரின் பிரச்சனை. நமக்கில்லை என்று ஒதுக்கிவிட முடியவில்லை.

ஒரு பட்டகசாலையில்,

உடையாள் உன்தன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாமல்

எனத் திருவாசகம் – கோயில் மூத்த திருப்பதிகம் பாடும் அப்பத்தாவை

எதிர்ப் பட்டகசாலையில்

எந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன்
ஏழ்படிகால் தொடங்கி
வந்து வழி வழி ஆட்செய்கின்றோம்.... –

எனப் பெரியாழ்வார் திருமொழி உரக்கப் பாடும் ஐயாவின் தினசரிப் பிரார்த்தனைகளைக் கேட்ட வண்ணம் இருக்கிறோமே. ஆனால், ஏன் இந்த இளம் தம்பதியர்கள் குழந்தைகள் பெற்றுக் கொள்ளுவதற்கு முன்னுரிமை தர மறுக்கிறார்கள் என்ற கவலை படர்ந்தோடியது.

தொலைக்காட்சியை அணைத்து விட்டு தொடர்ந்தேன் வாட்ஸ்அப். அதில் சென்னைவாழ் வயிரவன்பட்டி நகரத்தார்கள் விழாவில் கோவிலூர் சாமி பேசிக் கொண்டிருந்தார்கள்.

சுமார் 45 நிமிட உரையில், நம்மை உறைய வைக்கும் செய்திகள் அதிகம். நாம் நமக்குள் போர்க்கால அடிப்படையில் சரிசெய்து கொள்ள வேண்டியவைகளை பட்டியிலிட்டிருக்கிறது குரு பீடம்.

ஔவையார் வாழ்ந்த காலத்தில் வேண்டியிருந்தது "அறஞ் செய விரும்பு". ஆத்திச் சூடியின் முதல் வரியாக்கினாள். பாரதி காலத்தில் ஆத்திச் சூடியின் முதலாவது செய்தியாக்கினான் "அச்சம் தவிர்" அது அன்றையத் தேவையென்பதால்.

நடப்பில் என்ன தேவை என்று ஒரு சின்ன அறச் சீற்றமும், கவலையும் கலந்து பொது வெளியில் பேசாப் பொருளை குரு பீடமே பேச விளைவது காலத்தின் கட்டாயம் தானே... பேசியது நகரத்தார் குரு பீடம் என்பதால், பேசு பொருள் இதுவரையில் பொது வெளிகளில் பேசாப் பொருள் என்பதால், காணொலிகளில் "வைரலானது". பேச்சின் சாரம் காற்றில் போய் கரைந்து போய் விடக் கூடாது என்பதால் பதியம் செய்கிற முயற்சியே இந்தக் கட்டுரை.

நகரத்தார்கள் உலகெங்கும் பரந்து விரிந்து இருந்தாலும், சுமார் ஒன்றரை லட்சம் பேர்கள் மட்டுமே. உலகளவில் இருக்கும் மக்கட்தொகையோடு ஒப்பிட்டால் இது உளுந்தளவாகிவிடும். எண்ணிக்கையில் இல்லை நமது இருப்பு. நமது செயல்களினால்தான் சிறந்திருக்கிறது என்பதால் மட்டுமே நம்மைத் தேசம் கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

திருப்பணிகளால் நிறைத்தவர்கள் என்கிற பெருமை நமக்கிருக்கிறது. 120 ஆலயங்களுக்கு அதிகமாக திருப்பணி செய்தவர்கள். காசி விஸ்வநாதர் ஆலயத்தில் 230 ஆண்டுகளுக்கும் மேலாக 3 கால பூஜைகளையும் இயற்கைச் சீற்றங்களையும் தாண்டி தொடர்ந்து நடத்துபவர்கள் என்கிற பெருமையும் நமக்கிருக்கிறது.

அன்ன சத்திரங்கள் ஆயிரமாயிரம் அமைத்தது, பள்ளிகளை, கல்லூரிகளை, ஏன் பல்கலைக் கழகத்தையே நிறுவியது, வங்கிகள் தேசீயமயமாக்கப் பெற்ற போது மொத்தம் 14 வங்கிகளில் நகரத்தார் தோற்றுவித்த வங்கிகள் 2 போன்ற நமது பெருமைகளின் பட்டியல் நீளுகிறதுதான்.

இதெல்லாம் உங்கள் முன்னோர்கள் செய்தவற்றின் நீட்சி. நிகழ்காலத்தில் உங்கள் குலப் பெருமையைப் போற்ற, தொடர நீங்கள் என்னவெல்லாம் செய்திருக்கிறீர்கள். இல்லை செய்வதற்கான திட்டங்கள் என்னதான் வைத்திருக்கிறீர்கள் என்ற கேள்விகளை முன் வைத்தார்கள்...

நமக்குள் ஏன் இத்தனை சங்கங்கள்? நம் சங்கங்களை நிர்வாகம் செய்ய ஏன் தேர்தல் நடைமுறைகள்? தொடரும் வாக்குறுதிகள். இதன் விளைவால் நமக்குள் ஏற்படும் பிளவுகள். சற்று சிந்தித்துப் பாருங்கள்.

இனி எந்த நிர்வாகத்திற்கும் தேர்தல் வழியில் நிர்வாகிகளை தேர்வு செய்வதில்லை என எல்லோருமாகச் சேர்ந்து ஒரு முடிவு செய்வோம். அதற்குப் பதில் உதாரணத்திற்கு காசிக்கு நிர்வாகக் குழு அடுத்த பருவத்திற்கு நிர்வாகிகள் தேர்வு செய்ய வேண்டுமா. நமக்குள் யார் யார் தகுதியானவர்களோ அவர்கள் அனைவரும் விண்ணப்பிப்பது. விண்ணப்பங்களைக்

காசி விஸ்வநாதர் சந்நிதியில் முன்வைத்து, திருவுளச் சீட்டாக எடுத்து, நிர்வாகிகளைத் தீர்மானிப்பது என்று நடைமுறைப்படுத்துவோம். விஸ்வநாதர் திருவுளப்படி அடுத்த நிர்வாகக் குழு அமையட்டும். கால விரையம், பொருட்கள் விரையம், வீணாக நமக்குள் ஏற்படும் தேர்தலையொட்டிய கருத்து வேற்றுமைகள் எல்லாவற்றிற்கும் புதிய நடைமுறை தீர்வளிக்கும், என்று முதல் திரியில் தீபம் ஏற்றியது குரு பீடம்.

நகரத்தார்கள் அற வழியில் வாழ்பவர்கள். தாங்கள் வலது கையால் செய்யும் உதவிகளை, இடது கைக்குத் தெரிந்தால் கூட அது தர்மமில்லை என நினைப்பவர்கள் நாம். எனவே நகரத்தார்களுக்குச் செய்யும் பொருள் உதவிகளை பலர் முன்னிலையில், உதவி பெறுபவரை மேடையேற்றி விழாக்களில் வழங்குவதையும் உடனடியாக நிறுத்துங்கள். உதவி பெற்றுக் கொள்பவரின் நிலையில் நாம் நின்று பார்த்தால், அந்த வலி பேசுவது நமக்குக் கேட்கும். இது விளக்கின் இரண்டாவது முகத்தில் குருபீடம் ஏற்றிய தீபம்.

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.

என்கிறது வள்ளுவம். நகரத்தார் பிள்ளைகளுக்குத் திருமணங்களே காலங்கடந்து நடைபெறுகிறது. திருமணம் நடைபெற வேண்டிய ஆண் பிள்ளைகளின் வரிசை அதிநீளமாக இருக்கிறது. இது ஒரு புறம். மணமுறிவு பின் மறுமணம் என்று ஒரு பாதையில் பயணம் செய்பவர்களுமாக அதிக அளவில் இருக்கிறார்கள். அனைத்தையும் தாண்டி, பிள்ளை வரம் பெற வேண்டிய தம்பதியர்கள் தாங்கவொண்ணா எண்ணிக்கையில் இருக்கிறார்கள். இதே அளவில் நமது நிலை நீடித்தால் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளின் படி 25-லிருந்து 30 ஆண்டுகளில் நகரத்தார்கள் எனும் இனம் இல்லாமலேயே போவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்கிற செய்தியைச் சொல்ல மனம் கனக்கிறது. எனவே, ஒரு புள்ளிக்கு குறைந்தது இரண்டு குழந்தைகளாவது வேண்டும். இந்தச் செய்தியை இளந்தம்பதியரிடம் உடனே எடுத்துச் செல்ல வேண்டும். நகரத்தார்கள் சந்திக்கும் நிகழ்வுகளில் இதைப் பேசு பொருளாக்கி வென்றெடுக்க வேண்டும் என மூன்றாவது முகத்தில் ஒளியேற்றியது சாமி.

இஸ்லாமாவர்கள் அவர்களுக்குள் உள்ள பிரச்சனைகளுக்காக நீதிமன்றங்களுக்கு நீதி கேட்டு வந்து பார்த்திருக்கிறோமா. அவர்களுக்குள் அவர்களே ஏற்படுத்திக் கொண்ட தீர்ப்பாயமாக உள்ளூர் ஜமாத்துக்கள் இருக்கின்றன என்பதைப் பெரும்பாலனவர்கள் அறிவோம்.

இது போல நம் நகரத்தார்களுக்குள், இனி வரும் காலங்களில் ஏற்படும் வழக்கு வியாஜ்ஜியங்களுக்கு கோர்ட்டுக்குப் போகாமல் Alternate Dispute Resolution Mechanism எனும் மேனாள் நீதியரசர் அரு.லெட்சுமணன் அவர்கள் சட்ட ஆணையத்தின் தலைவராக இருந்த பொழுது முன்மொழிந்த யோசனையை நடைமுறைப்படுத்த நாம் முயற்சிக்கலாம். நம்மிடையே நிறையப் படித்த வழக்கறிஞர்கள், நீதியரசர்கள் இருக்கிறார்கள். அவர்களின் சேவையைப் பெற்று, கால விரையத்தை, பொருள்கள் இருவருக்கும் இல்லாமல் பொதுவில் வீணாவதைத் தடுக்க இதைப் பரிசீலிக்கலாம். பெரும்பாலான வழக்குகள் வழக்குத் தொடுத்தவர்கள் மற்றும் வழக்கை மறுப்பவர்கள் வாழ்நாட்களில் தீர்வுகளை எட்டுவதில்லை. வழக்கின் பயனை பேரனோ பேர்த்தியோ அவர்கள் வழக்குப் பற்றிய தெளிவான புரிதல் இருந்தால் மட்டுமே பெற முடியும். இதை நம்மில் சட்ட வல்லுநர்களாக இருப்பவர்களோடு கலந்தாலோசித்து, நமக்குள் வழக்குகளைத் தீர்த்துக் கொள்ள ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். நடைமுறைச் சிக்கல்கள் நிறைய உள்ள பகுதி இது. எனவே, தீர்க்க இதுபற்றி ஆலோசிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் எனச் சொல்லி திருவிளக்கின் நான்காவது முகத்தின் திரியைச் சற்று தூண்டி விட்டு ஏற்றியது குருபீடம்.

Ernst & Young LLP, the EY World Entrepreneur Of The Year-ல் 2024 எனும் விருதைப் பெறுகிற தகுதியாளர் டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆப் இந்தியா நிறுவனத்தின் செயல் துணைத் தலைவரும், சோழ மண்டலம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் மற்றும் பைனான்ஸ் கம்பெனி நிறுவனத்தின் தலைவருமான நமது பள்ளத்தூரைச் சார்ந்த தொழிலதிபர் வெள்ளையன் சுப்பையா அவர்கள் என அறிவித்திருக்கிறது. இது இந்தியாவிற்கு உலகளவில் கிடைத்த நான்காவது அங்கீகாரம். நமது நகரத்தாருக்கு முதன் முதலில் கிடைத்த மிகப் பெரிய அங்கீகாரம். இந்த உலகளாவிய வெற்றியை நம் இளம் தலைமுறையினர் தெரிந்து கொள்ளச் செய்ய வேண்டும். நம் பிள்ளைகள் எதிர்காலத்தில் வேலைக்குப் போவதை வழக்கமாகக் கொள்ளாமல், தொழிலதிபர்களாக முயற்சிக்க வேண்டும். இதற்கு திரு.வெள்ளையன் சுப்பையா அவர்களின் நேர்காணலை, ஊடகப் பதிவுகளை வளரும் இளம் தலைமுறையினர் பார்த்து தங்கள் வாழ்வமைப்புகளை வடிவமைத்துக் கொள்ள வேண்டும்.

நகரத்தார் பாரம்பரியங்களை, தர்மங்களை கைங்கரியங்களைக் கட்டிக் காக்க கண்டிப்பாக நிறைய இளைஞர்கள் தொழிலதிபர்களாக முயற்சிக்க வேண்டும். அதற்கான முன்னெடுப்புக்களை வளர்ந்த நிறுவனங்கள் நம் பிள்ளைகளுக்குச் சொல்லித் தர முன் வரவேண்டும் என்கிற செய்தியைச் சொல்லி, நம் குரு பீடம் விளக்கின் 5-ஆவது முகத்தில் தீபம் ஏற்றி வைத்தது.

ஐந்து சிந்தனைகளை ஒரு தேரில் ஏற்றி, பஞ்சமூர்த்தி புறப்பாடு போல வலம் வர வடம் பிடித்திருக்கிறது கோவிலூர் மடாலயம். பாரதி சொல்லுவது போல இனி வேண்டியவை

நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்,
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்,
அதுவு மற்றவர் வாய்ச்சொல் தாரீர்,
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்...

“உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்” எனச் சிந்திப்போம். மாற்றங்களை ஏற்றுக் கொள்ளுகிற மனப்பக்குவங்களைப் பெறுவோம். ♦

நமது
செட்டிநாடு

# நகரத்தார் 111 சிகரத்தார்



காரைக்குடி நாராயணன்

சிகப்பி ஆச்சி ஒரு மாத காலமாக கோயில் கோயிலாகச் செல்ல வேண்டும் என்று முடிவு செய்தார். காரணம் அயல்நாட்டிலிருந்து மகள்கள், மகன்கள், பேரன், பேத்திகள் எல்லோரும் ஒட்டுமொத்தமாக வருவதாலும், அந்தப் பேரன் பேத்திகளுக்கு ஒரே மணநாளில் அவர்களுக்குத் திருமணம் முடிக்க ஏற்பாடுகள் செய்வதாலும் ஏற்பட்ட அளவற்ற மகிழ்ச்சி.

திருவண்ணாமலைக்கு ஆச்சியும், செட்டியாரும், ராஜ்மோகனுடன் கிரிவலம் வந்தார்கள். நகரத்தார்களின் ஓயா மடத்திற்கு ராஜ்மோகனை அழைத்துக் கொண்டு மதிய சாப்பாட்டிற்குக் காத்திருந்தார்கள். ராஜ்மோகனும் அவர்களுடன் சிறிது நேரம் காத்திருந்து விட்டுக் கேட்டார்.

ஆச்சி உங்களுக்கு இருக்குற வசதிக்கு பெரிய ஹோட்டல்ல போய்ச் சாப்பிடலாமே. இப்படிக் காத்திருக்கணுமா?

ஆச்சி சிரித்துக் கொண்டே பதில் சொன்னார்.

தம்பி. எங்க நகரத்தார்கள் காசியிலேருந்து ராமேஸ்வரம் வரைக்கும் இந்த மாதிரி விடுதிகள் கட்டி வச்சிருக்கோம். பங்காளிகள் எல்லாரும் ஒன்னாக் கூடிக் குலதெய்வம் கோயிலுக்குப் போற மாதிரி இங்கே வர்றதும் ஒரு கூட்டுப் பிரார்த்தனை. இந்த ஓயா மடத்தில அடுப்புல நெருப்பு அணையுறதே இல்லை.

ராஜ்மோகனுக்கு மேலும் புரிய வைக்க நினைத்துச் செட்டியார் விவரம் சொன்னார்.

டைரக்டர் சார். வள்ளலாரைப் பத்தி ஏதாவது தெரியுமா?

வள்ளலாரைப் பத்திக் கேள்விப்பட்டிருக்கேன்.

தம்பி, அவர் 1876-ஆம் ஆண்டு தோற்றுவித்த சத்திய தர்ம சாலை அன்னையிலேருந்து இன்னைக்கு வரைக்கும் அவர் 158 ஆண்டுகளுக்கு முன்னாலே மூட்டிய அடுப்பு அணையாம ஏழைகளோட பசியைப் போக்க தினமும் மூனு வேளை அன்னதானம் நடக்குது. பசியால் வாடியவர்களுக்கு உதவி செய்ன்னாரு. அருட்பெருஞ்சோதி தனிப்பெரும் கருணையா இருந்து, வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்னாரு. அதுமாதிரித் தான் திருவண்ணாமலை ஓயா மடமும்.

செட்டியார் சொல்லி முடித்து, சாப்பிட்டு விட்டுக் கிளம்பிய போது திருவண்ணாமலையின் வடக்குக் கோபுரத்தைக் கும்பிட்டார். ஆச்சியும் கும்பிட்டார்.

ராஜ்மோகன் கோயில் உண்டியலில் பணம் போடப் பர்சை எடுத்தார். ஆச்சி ராஜ்மோகனைக் கூப்பிட்டார்.

தம்பி. உண்டியல்ல கோயிலை விட்டுப் போற போது போடலாம். கோபுர தரிசனம் கோடிப் புண்ணியம்.

ராஜ்மோகன் கோபுரத்தைக் கும்பிட்டார்.

ஆச்சி சொன்னார்.




தம்பி. இது 171 அடி உயர ராஜகோபுரம். இதைத் தனியாளா ஒரு பெண்மணி கட்டி முடித்தார்ன்னு சொன்னா நம்ப முடியுமா?

ராஜ்மோகன் ஆச்சர்யத்துடன் தலையாட்டினார்.

அம்மணியம்மான்னு ஒரு பெண் சித்தர். எத்தனையோ மன்னர்களால முடியாததை அவர் தனி ஆளா இருந்து ஒரு தவமா நெனைச்சு முடிச்சாரு. பல அரசர்கள்ட்ட நிதி திரட்டுனாரு. கடைசியில பணம் பத்தலே. அண்ணாமலையானே கருணை காட்டுன்னு கண் கலங்கி அழுதாரு. அவர் கனவுல சிவபெருமான் தோன்றி நீ வேலையை ஆரம்பி. பணம் தானா வரும்னு சொல்லிக் கொஞ்சம் விபூதியைத் தந்து இதைக் கோபுர வேலை பாக்குறவங்களுக்கு கூலியாக் கொடுன்னாரு. சிவபெருமான் கனவுல வந்து சொன்ன மாதிரியே அம்மணி அம்மாவும் கூலிக்குப் பதிலா வேலை பாத்தவங்களுக்கு விபூதியைக் கொடுத்தாரு. அவரு விபூதியாக் கொடுத்த கூலி எல்லாம் பணமா மாறியிருந்தது.

ராஜ்மோகன், ஆச்சி சொன்னதைக் கேட்டு ஆச்சர்யப்பட்டார்.

ராஜ்மோகன் உண்டியலில் காசைப் போட்டுட்டு வர்ரேன் என்றார்.

தம்பி. உண்டியல்ல போட்டா அதுக்குப் பேரு காசு இல்லை. காணிக்கை. அர்ச்சகர் தட்டுல போட்டா தட்சணை. ஏழைகளுக்குக் கொடுத்தா தர்மம். கை நீட்டி வாங்குன கடனை மிரட்டி வாங்கினா தண்டல். யாசித்தால் பிச்சை. கல்விக்குக் கட்டணம். கல்யாணத்துக்கு வரதட்சணை. விவாகரத்துக்கு ஜீவனாம்சம். விபத்தில நஷ்ட ஈடு, தினம் கேட்டா தினக்கூலி, மாதத்துக்கு ஒரு தடவை மாதச் சம்பளம். ஹோட்டல்ல டிப்ஸ். அரசுக்கு வரி, நீதிமன்றத்தில

அபராதம், மாதந்தோறும் வட்டி, தொழில்ன்னா முதலீடு, அதுல வர்ரது லாப நஷ்டம், இப்படி இந்தப் பணத்துக்கு எத்தனை பேரு. இந்தப் பணத்தைத் தாய் தகப்பனா நெனைச்சா நிம்மதி. அதை விட்டுட்டுப் பேய், பிசாசா நெனைச்சா உறவு, பாசம், நட்பு, பெருந்தன்மை எல்லாம் தொலைஞ்சு போயிடும்.

ராஜ்மோகன் கோயில் என்று கூடப் பார்க்காமல் கை தட்டிப் பாராட்டி விட்டு உண்டியலில் அவர் காணிக்கையைச் செலுத்தினார்.

அனைவரும் கார் ஏறிய போது சென்னையில் நடக்கும் நகரத்தார் பொருட்காட்சிக்குப் போகலாம் என்ற முடிவில் அங்கு போனார்கள். அங்கே பல மாதிரியான செட்டிநாட்டுப் பலகாரங்கள் முதல் சீர் வரிசைச் சாமான்கள் வரை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தன. அங்கே செட்டியார் ருத்ராட்ச மாலை ஒன்றை வாங்க விலை விசாரித்த போது அந்த ருத்ராட்ச மாலையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததை ஆச்சி எண்ணிப் பார்த்தார். ராஜ்மோகன் அதற்கு விளக்கம் கேட்பதற்கு முன் ஆச்சியே விவரித்தார்.

தம்பி, அது ருத்ராட்ச மாலை, பாக மணிமாலை, நவரத்ன மாலை. எதுவா இருந்தாலும் 108 இருக்கணும்.

அப்படியா?

ஆமா தம்பி. சீக்கிய கலாச்சாரம், ஜெயின் கலாச்சாரம் எல்லாமே இப்படித்தான் இருக்கும். ஏன், ஜப்பான்ல உள்ள ஜென் கோயில்கள்ல கூட மணியை 108 தடவை ஒலிக்கச் செய்யுறாங்க. இது இந்தப் பிரபஞ்சத்தோட ஆற்றலுக்கும், அறிவுக்கும் ஆதாரம். கோவில்கள்லகூட 108 தடவைகள்தான் மந்திரங்கள் சொல்றாங்க.

அப்படி என்ன ஆச்சி. அந்த 108-ல தனித்தன்மை இருக்கு.

தம்பி. 108 எண்ணைக் கூட்டுங்க 9 வரும். அதோட எந்த எண்ணைப் பெருக்கினாலும் கூட்டுத் தொகை 9 தான் வரும். 9 கிரகங்கள், 27 நட்சத்திரங்கள், 4 பாதம் வீதம் நட்சத்திரங்களுக்கு 108 பாதங்கள் சூரியனின் விட்டம் பூமியின் விட்டத்தைப் போல் 108 மடங்கு பெரியது.

செட்டியார் நகரத்தார் பொருட்காட்சியில், அவருக்கு வேண்டியதை வாங்கிக் கொண்டு, காரில் புறப்பட்டு, அடுத்த நாள் பொழுது விடியவும் வீட்டிற்கு வந்து எல்லாவற்றையும் பூஜை அறையில் வைப்பதற்கும், நாச்சியாபுரத்திலிருந்து பாட்டி ஆயா வீட்டிலிருந்து அலமி ஆச்சி அரைகுறையாக அவர்களுக்குத் தெரிந்த தமிழில் ஒரு கடிதம் எழுதியிருந்ததைக் குட்டி கொண்டு வந்து தந்தாள். அலமி ஆச்சிக்கு 90 வயதாகி விட்டது. அவர்கள் ஏட்டுப் பள்ளிக்கூடம் கூடப் படிக்காததால் அந்த வீட்டிலுள்ள நாகம்மை ஆச்சியை எழுதச் சொல்லி அவர்கள் எழுதிய கடிதத்தை எப்படியோ சிகப்பி ஆச்சி பத்துத் தடவை திருப்பித் திருப்பிப் படித்துப் புரிந்து கொண்டார். செட்டியார் கடிதத்தைப் பற்றி விசாரித்தார். ஆச்சி சொன்னார்.

நம்ம பேரன், பேத்திகள் நாலு வருஷத்துக்கு ஒரு தடவை தான் வந்து போகுதுங்க. அவங்க கல்யாணத்தைப் பத்தி மகளோ மகனோ கவலைப்படலே. சம்பாதிச்சுச் செலவழிச்சாப் போதும்னு இருக்காங்க. நான்தான் இந்தத் தடவை வர்ர போது பேரன், பேத்திகளுக்கு ஒரே நாள்ல கல்யாணத்தை முடிச்சிடணும்னு தீர்மானம் பண்ணுனேன். அதுக்குத் தோதா நாச்சியார்புரத்தில பொண்ணுக்கு மாப்பிள்ளையும், மாப்பிள்ளைக்குப் பொண்ணும் இருக்குறதா எழுதியிருக்காங்க. இங்கே வந்து பாணி பாபா கோயிலைக் கும்பிட்டுக் கல்யாணத்தை முடிவு செஞ்சு தேதி வச்சுக்கச் சொல்லி எழுதி இருக்காங்க.

செட்டியார், உடனே பிள்ளைகள் அயல்நாட்டிலிருந்து வந்ததும் கல்யாணங்களை முடிவு செய்ய வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டினார். அப்போது ஆச்சி நாச்சியார்புரத்திலுள்ள பாணி பாபா கோயில் பற்றிப் பேச ஆரம்பித்தார்.

நம்ம நாலஞ்சு தடவை ஷீரடிக்குப் போய் சாயிபாபாவைக் கும்பிட்டிருக்குறோம். இப்போ நாச்சியாபுரம் போற போது அங்கே போயி எல்லாம் நல்லா முடியணும்னு அன்னதானத்துக்குக் கொடுத்திட்டுப் பிரார்த்தனை செஞ்சிட்டு வருவோம்.

ராஜ்மோகன் உடனே யூட்யூப்பில் அந்தப் பாணி பாபா கோயிலைப் பற்றியும், அதை நாச்சியார்புரத்திலுள்ள தன் இடத்தில், சென்னையில் விருகம்பாக்கம் நடேசன் நகரில் பிரபலமாக இருக்கும் டாக்டர் முத்தையா, அவர் மனைவி டாக்டர் விசாலமும் சேர்ந்து கட்டிய விவரத்தைப் பற்றிச் சொன்னார்.

ஆச்சி. இவங்க பிரபல சினிமா டைரக்டர் எஸ்பி. முத்துராமன் சாரோட மகளும், மாப்பிள்ளையும். எத்தனையோ செல்வந்தர் செட்டிநாட்டுல இருக்குற போது, பாபாவுக்குக் கோயில் கட்டுற பாக்கியம் இவர்களுக்கு கிடைச்சிருக்கு. அஞ்சு வருஷம் முடிஞ்சு ஆறாவது வருஷம் வருஷாப்திகம் வரப்போகுது. இங்கே வந்து பிரார்த்தனை செஞ்சிட்டுப் போறவங்க எல்லாருக்கும் அவங்க வேண்டுதல் நிறைவேறுறதாச் சொல்றாங்க. இங்கே அமர்ந்த கோலம், நின்ற கோலம், சயன கோலத்தில பாபா அருள்புரியுறாரு. அஞ்சு வருஷமா காலைப் பலகாரம், மதிய உணவு பசியாறக் கொடுக்குறாங்க. பாபாவுக்கு அபிஷேகம் செய்ய நம்ம வீட்டுல பூஜை பண்ணித் தண்ணீரை அங்கே எடுத்துக்கிட்டுப் போகலாம். இல்லேன்னாலும் அந்தப் பாபா கோயில் கிணத்துல வர்ர தண்ணீரைச் செம்புல விட வசதி செஞ்சி இருக்காங்க. இங்கே கடல் பைரவர்ன்னு சொல்லப்படுற ஆமையோட உருவம் இருக்கு. ஐயப்பன் கோயில் சிலையிலேயும், மாங்காடு அம்மன் சிலையிலேயும் ஆமை இருக்குறதைப் போலன்னு பாத்தவங்க சொல்றாங்க. "மனிதனை நினை கடவுள் துணை" என்பது போன்ற மனதைச் சுத்தப்படுத்துகிற வசனங்கள் கோயில் சுவற்றில் எழுதப்பட்டிருக்கு.

செட்டியாரும் அவருக்குத் தெரிந்ததைச் சொன்னார்.

டைரக்டர் சார். இங்கே பாபாவைப் பிரதிஷ்டை பண்ணுனபோது பாலைவனத்தில் காத்தடிச்சா எப்படி மணலை வாரி இரைக்குமோ அது மாதிரி மணல் புயல் சுத்தி அடிச்சு அவங்களையும், அதைச் சுத்தி இருக்குற கிராமத்து மக்களையும் ஆசிர்வாதம் பண்ணியிருக்காரு. அங்கே இருக்குற தேக்கு மர ஊஞ்சலில் பாபா தூங்குற கோலத்தில இருக்குற மாதிரி இருந்து, தூங்காம அங்கே வர்ர பக்தர்களை எல்லாம் பாதுகாத்து ஆசிர்வதிக்குறாராம்.

ஆச்சி கண்களை மூடிக் கொண்டு பாபாவை வணங்கினார். அவரை எங்கிருந்தோ ஒரு கோயில் மணி ஓசை ஆசீர்வதித்தது. (தொடரும்)

# கைப்பிடியில் கம்ப்யூட்டர்

சிறுகூடல்பட்டி முத்துக்கருப்பன்





**1940-ல் கம்ப்யூட்டரின் உருவம்:**

எடை 27 டன். உயரம் 10 அடி. 1800 சதுர அடி இடத்தை அடைத்துக் கொண்டு நின்றது.

உள்ளே நினைவகங்களாக (Memory) 17468 குழாய்கள் (Vacuum Tubes), மின் காந்தத்தால் இயங்கும் 1500 ரிலே ஸ்விட்சுகள் இருந்தன. மின்சாரத்தின் ஓட்டத்தைக் கையாளும் 50000 ரெசிஸ்டார்களும் (Resistors), 10000 கெப்பாசிட்டர்களும் (Capacitors) பின்னிக் கிடந்தன. கிட்டத்தட்ட 50 லட்சம் இடங்களில் கையால் ஈயப் பற்று (Soldering) வைக்கப்பட்ட இணைப்புகள்.

இதுதான் 1940-களில் ஒரு கம்ப்யூட்டரின் தோற்றம். இப்படி, ஒரு யானை படுத்திருந்ததைப் போல் தோற்றம் அளித்த கம்ப்யூட்டர் இன்று ஒரு மடித்த கைக்குட்டை அளவுக்குச் சுருங்கிப் போய் விட்டது. இந்த மாயம் எப்படி நடந்தது என்பதைத் தொட்டுக் காட்டும் கதைதான் இந்தக் கட்டுரை.

**கம்ப்யூட்டரின் உபயோகம்:**

அந்த நாளில், மனிதனின் மூளையை விட அதிவேகமாகக் கம்ப்யூட்டர் கணக்குப் போட்டதை உலகம் வியப்போடு பார்த்தது. பெரிய தொழில் நிறுவனங்களில் சம்பளக் கணக்குப் பார்க்கவும், கையில் உள்ள சரக்குகளின் இருப்புக் கணக்கை வைத்துக் கொள்ளவும், கல்லாவில் பில் போடவும் கம்ப்யூட்டரைப் பயன்படுத்திக் கொண்டார்கள். அதற்கு மேல், கம்ப்யூட்டரை எப்படி வேலை வாங்குவது என்று தெரியாமல் பல ஆராய்ச்சியாளர்கள் முடியைப் பிய்த்துக் கொண்டிருந்த நேரம் அது.

**வல்லரசுகளின் பனிப்போர்:**

அப்போது, வட அமெரிக்கா, சோவியத் யூனியன் என்ற இரண்டு வல்லரசுகளுக்கிடையே ஒரு 'பனிப் போர்' (Cold War) மூண்டு, கனன்று கொண்டிருந்தது. இரண்டாம் உலகப் போரின் இறுதியில் ஜப்பான் நாட்டின் மீது அமெரிக்கா போட்ட அணுகுண்டுகள் செய்த நாசம், சோவியத் யூனியனை அதிர்ச்சி அடைய வைத்தது. அதனால் அந்த நாடும் அணு ஆயுத சோதனைகளில் ஈடுபடத் தொடங்கியது.

**நீயா நானா:**

இரண்டாம் உலகப் போரில் (1944 - 1948) ஓரணியில் நின்ற இந்த இரு நாடுகளும் ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை இழந்து, அணு ஆயுதங்களைப் போட்டி போட்டுக் கொண்டு தயாரிக்க ஆரம்பித்தன.

போதாக் குறைக்கு அக்டோபர் 4, 1957 அன்று ரஷ்யா சத்தம் போடாமல் உலகின் முதல் செயற்கைக் கோளான ஸ்புட்னிக் 1-ஐ விண்ணில் ஏவி 98 நிமிடங்களில் இந்த உலக உருண்டையை வலம் வரச் செய்தது. அமெரிக்கா இதைத் தனக்கு ஏற்பட்ட பெரிய தலைகுனிவாகக் கருதியது. இதற்குத் தக்க பதிலடி கொடுத்தேயாக வேண்டும் என்ற வெறி தலைக்கேறியது அமெரிக்காவுக்கு.

**சவாலுக்கு சவால்:**

இதன் விளைவாகத் தோன்றியதுதான் National Aeronautics and Space Administration (NASA) நாசாவும், அமெரிக்க பாதுகாப்புத் துறையின் Advanced Research Projects Agency (ARPA) அர்பாவும்.

இதெல்லாம் அரசியல் களத்தில் ஒரு புயல் வருவதன் அறிகுறிகளாகப் பார்க்கப்பட்டன. இன்னொரு உலகப் போர் மூளுமோ என்ற அச்சம் உலக நாடுகளில் பரவியது. எந்த நேரத்திலும் ரஷ்யா தன்மீது அணு ஆயுதத் தாக்குதல் நடத்தக் கூடும் என்று அமெரிக்காவும் அஞ்சியது.

**அர்ப்பாவின் அதிரடி வேலைகள்:**

அமெரிக்காவின் எல்லைப் புறங்களில் நிலை கொண்டிருந்த தன் ராணுவத்திற்கும், அரசாங்கத்தின் பாதுகாப்புத் துறைக்கும், பல்கலைக் கழகங்களில் இருந்த அணு ஆராய்ச்சியாளர்களுக்கும் இடையறாத ரகசிய செய்தித் தொடர்பு வேண்டும் என்று அமெரிக்கா திட்டமிட்டது. இதற்காக, ARPA தீவிரமாகக் களம் இறங்கியது.

நெட்வொர்க் (Network) உதயம்:

1966-ல் ARPA-வில் இயக்குநராகப் பொறுப்பேற்ற பாப் டைலர் (Bob Taylor) என்பவர் ஒரு கம்ப்யூட்டரையும், தொலைவில் உள்ள இன்னொரு கம்ப்யூட்டரையும் இணைத்து அதை ரகசியமாகச் செய்திகள் அனுப்பும் சாதனமாக வடிவமைத்தால் எப்படி இருக்கும் என்று சிந்தித்தார்.

இதன் விளைவாக, ARPA net என்ற கம்ப்யூட்டர்களின் இணைப்பு (Computer Network) 1969-ல் உதயமாயிற்று. கம்ப்யூட்டரும் கம்ப்யூட்டரும் பேசிக் கொள்ள நிரல் (Program) எழுத ராபெர்ட் என்பவரை நியமித்தார்கள்.

அமெரிக்காவின் நேச நாடுகளாக இருந்த இங்கிலாந்து, ஃபிரான்ஸ் நாடுகளில் இந்த நெட்வொர்க் பற்றிய ஆராய்ச்சிகள் வேகமெடுத்தன. அமெரிக்காவிலும் தீவிர ஆராய்ச்சிகள் துவங்கின.

அமெரிக்க ராணுவம் ARPA net-டுக்காக, பணத்தைத் தங்கு தடை இல்லாமல் தண்ணீர் போல் செலவழித்தது.

நெட்வொர்க் தொழில்நுட்பம்:

அப்போது அலெக்சாண்டர் க்ரஹாம்பெல் கண்டுபிடித்த டெலெஃபோன் கருவி பிரபலமடைந்திருந்தது. எங்கு பார்த்தாலும் டெலெஃபோன் கம்பிகள், எல்லா இடத்திலும் டெலிஃபோன் கருவிகள் நிறைந்திருந்தன. கம்ப்யூட்டரும் கம்ப்யூட்டரும் பேசிக் கொள்ளவும் "டெலிஃபோன் அம்பிகையே சரணம்!" என்று தஞ்சமடைந்தார்கள்.




தொடர்ந்து, ஒரு கம்ப்யூட்டரையும், இன்னொரு கம்ப்யூட்டரையும் மோடம் (MODEM - Modulator and Demodulator) வழியாக இணைத்தார்கள். செய்தியை வாங்கிக் கொள்ளும் கம்ப்யூட்டருக்கான டெலிஃபோன் எண்ணைச் சுழற்றினால், ஒருவர் அனுப்பும் செய்தி டெலிஃபோன் கம்பி வழியே அடுத்த முனையில் இருந்த அந்தக் கம்ப்யூட்டருக்குச் சென்றடையும்படி அமைத்தார்கள்.

Packet - Switching:

வழக்கமாக, டெலிஃபோன் இணைப்பு வழியே நாம் பேசும் போது நம் குரல் (பேச்சு) ஒரே பாதையில் சென்று, கேட்பவரைச் சென்றடையும். ஆனால், கம்ப்யூட்டர் நெட்வொர்க்கில் (Network) செய்திகள் அனுப்ப, Packet-Switching என்ற முறையைக் கண்டுபிடித்தார்கள். இதில், அனுப்பும் செய்தியைப் பகுதி பகுதியாகப் பிரித்து, சின்னச் சின்னப் பொட்டலங்களாக்கி (Packets)அனுப்புவார்கள். ஒரே நேரத்தில் பல செய்திகளின் பொட்டலங்கள் டெலிஃபோன் கம்பிகள் வழியே வேகமாகப் பயணப்படும்.

இதனால் வழியில் எதிரிகள் செய்திகளைத் திருடினாலும், அவர்கள் முழுச் செய்தி என்னவென்று புரியாமல் குழம்பிப் போவார்கள். பொட்டலங்கள் சேர வேண்டிய கம்ப்யூட்டர் நெட்வொர்க்கைச் சென்றடைந்த பிறகு பொட்டலங்கள் பிரிக்கப்பட்டு, சின்னச் சின்னப் பகுதிகள் பழைய மாதிரி கோர்க்கப்பட்டு மீண்டும் முழுச் செய்தியாக்கப்படும்.

க்ளீன்ராக் என்ற MIT மாணவரும், அவருடைய MIT நண்பர்கள் லிக்லைடெரும், ராபெர்ட்டும் packet switching-ஐக் கண்டுபிடித்தவர்கள். இது மட்டும் அல்ல. ARPAnet என்ற நெட்வொர்க் எப்படி இயங்க வேண்டும் என்று மொத்தத்தையும் வடிவமைத்துக் கொடுத்தவர்களும் அவர்களே.

நெட்வொர்க்கின் விரிவாக்கம்:

முதலில் அமெரிக்க ராணுவத்தின் பயன்பாட்டிற்காகத் தொடங்கப்பட்ட இந்தப் பிணையம் (Network), அடுத்து விஞ்ஞானிகள் தங்களுக்குள் செய்தி அனுப்பும் பிணையமாக வளர்ந்தது, காலப்போக்கில் அரசு அலுவலகங்கள், கல்லூரிகள், பள்ளிகள், தனி மனிதர்கள் பயன்பாடு வரை விரிவடைந்தது.

பிணையத்தின் (Network) வகைகள்:

குறும்பரப்பு வலையமைப்பு (LAN- Local Area Network):

ஓர் அலுவலகத்திலோ, பள்ளி அல்லது கல்லூரியிலோ ஒரே தளத்தில் உள்ள பயனர்களின் (Users) கம்ப்யூட்டர்களை இணைப்பதற்கு LAN என்ற நெட்வொர்க் வடிவத்தை அமைத்தார்கள். ஈதெர்னெட் கம்பிகளையும், கண்ணாடி இழை / ப்ளாஸ்டிக் இழை (Optical Fibres)-களையும் இணைப்புக்குப் பயன்படுத்தினார்கள். LAN-ல் கம்ப்யூட்டர்கள், மடிக்கணினி இன்னும் பல மின்னணு (Electronic Devices) சாதனங்களையும் ரௌட்டெர்/ஸ்விட்ச் போன்ற துணைக் கருவிகளையும் இணைத்துக் கொள்ளலாம்.

LANனுக்கான தொழில்நுட்பம்:


LAN 1970-களில் ஜெராக்ஸ் கம்பெனி உருவாக்கிய ஈதெர்னெட் தொழில்நுட்பத்தில் இயங்கியது. 1985-ல் அது சீர் செய்யப்பட்டு எல்லாரும் ஒப்புக் கொள்ளும் நெறிமுறைகள் (Protocols) தோன்றின.

ஆனால், ஈதெர்னெட் கம்பி, ஆப்டிகல் ஃபைபெர் என்பதெல்லாம் ஒரு தளம், ஒரு கட்டிடம் வரைதான் செல்லுபடியாகும். தூரம் தொலைவு, ஊர் விட்டு ஊர், நாடு விட்டு நாடு இங்கெல்லாம் அலுவலகங்களில் உள்ள LAN நெட்வொர்க்குகளை இணைப்பதற்கு டெலிஃபோன் கம்பிகள் உதவவில்லை.

ரேடியோ அலைகள்:

நாம் ஒரு காலத்தில் ஆனந்தமாக ட்ரான்சிஸ்டர்களில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தோமே, அந்த ரேடியோ அலைகளைப் (Radio Waves) பயன்படுத்தினார்கள்.

எப்படி என்றால், LAN அமைப்பில் ஆப்டிகல் இழைகளில் உள்ள ட்ரான்ஸீவர் என்ற உறுப்பு, அனுப்பப்படும் செய்திகளில் உள்ள தரவுகளை ஒளியியல் துடிப்புகளாக (pulses of light)




LAN Network Diagram

அல்லது மின்சாரத் துடிப்புகளாக (Pulses of electricity) மாற்றி, வான் வெளியில் நிறைந்துள்ள ரேடியோ அலைகள் வழியாக அனுப்பி விடுகின்றது. செய்தி சென்று சேர வேண்டிய இடத்தில் உள்ள ட்ரான்ஸீவர்கள் ரேடியோ அலைகளில் உள்ள ஒளியியல் / மின்சார துடிப்புகளை வாங்கி மறுபடியும் தரவு(Data)-களாக மாற்றி அங்குள்ள LAN இணைப்பில் உள்ள கம்ப்யூட்டர்களுக்கு அனுப்பி விடும்.

### “பெரும்பரப்பு வலையமைப்பு” (Wide Area Network - WAN):

இப்படிப் பல இடங்களில் தொலை தூரத்தில் இருக்கின்ற LAN-களை இணைத்து ரேடியோ அலைகள் மூலம் செய்திகளைப் பரிமாறிக் கொள்வதற்கு “பெரும்பரப்பு வலையமைப்பு” (Wide Area Network - WAN) என்று பெயர். LAN-ஐயும் WAN-ஐயும் இணைப்பது ROUTER.

### இன்டெர்நெட் உதயம்:

ஒரு நல்ல சிலை செய்தாயிற்று. அதன் கண் திறக்க வேண்டும். அந்தச் சிலைக்கு உயிர் கொடுத்தாக வேண்டும். அதாவது நெட்வொர்க்கை இயங்கச் செய்ய வேண்டும், அதற்குப் பொருத்தமான ஒரு தொழில் நுட்பத்தை (Technology) கண்டறிய வேண்டும்.

தேவையைப் புரிந்து கொண்ட மறுகணமே பல பல்கலைக் கழகங்களின் ஆராய்ச்சியாளர்கள் செயலில் இறங்கி விட்டார்கள். கண்டுபிடிக்கப் போகும் தொழில் நுட்பத்திற்கு INTERNET (இன்டெர்நெட்) என்று பெயரும் சூட்டி விட்டார்கள். ஆனால் பலர் பல நிரல்களை (Programs) எழுதியும் ஒன்று கூடச் சரியாகச் செயல்படவில்லை.

இறுதியாக, 1973-ல் கலிஃபோர்னியாவில் ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக் கழகத்தில் இருந்த வின்டன் செர்ஃப் மற்றும் பாப்கான் ஆகியோர் தயாரித்த TCP/IP (Transmission Control Protocol/Internet Protocol) என்ற நெறிமுறைகளின் தொகுப்பு பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக வெற்றி பெற்றது. TCP என்பது அனுப்பப்படும் பாக்கெட்டுகளை வாங்கிக் கொள்வதற்கும், இலக்கை அடைந்தபின், பாக்கெட்டுகளைப் பிரித்து மீண்டும் பகுதிகளை ஒன்றாய்ச் சேர்த்து முழுச் செய்தியாக மாற்றுவதற்கும் வேண்டிய வழிமுறைகளை (Protocols) கொண்டது. IP என்பது செய்திகள் சரியான இலக்கை அடைய வழி செய்வது.

(தொடரும்)

## நமது செட்டிநாடு சந்தா படிவம்

திரு/திருமதி.......................................................................................................

முகவரி.......................................................................................................

.......................................................................................................

கோவில்.......................................பிரிவு..............................சொந்த ஊர்..............................

கைபேசி........................ தொலைபேசி........................... ▸▸ இமெயில் ..............................................

▸▸ புதிய சந்தா ☐ / சந்தா புதுப்பித்தல் ☐ / Ref No.......................................................

செலுத்திய சந்தா ரூபாய் ஓராண்டு 300/- இரண்டு ஆண்டு 500/- ஐந்து ஆண்டு 1250/-

☐ மணியார்டர் ☐ காசோலை ☐ RTGS ☐ GOOGLE PAY மூலம் செலுத்தி விவரம் தெரிவிக்கவும்.

வங்கி................................................................/ எண்.................................../ நாள்.........................

அனுப்ப வேண்டிய முகவரி: “நமது செட்டிநாடு” (மாத இதழ்), ராணி சீதை அரங்கம், 3வது தளம், 603, அண்ணா சாலை, சென்னை 600 006. தொ.பே.எண்: 04442951888

வெளிநாடு சந்தா விவரம்: சிங்கப்பூர், மலேசியா ஆண்டிற்கு SG $ 40/ பிற நாடுகள் ஆண்டிற்கு US $50/

**Cheque to be drawn in favour of**

Chettinad Print Media P Ltd,
A/C No: 6412480441
Indian Bank, Thousand Lights Branch,
Chennai - 600 006. IFSC : IDIB000T020,

Or

Chettinad Print Media P Ltd.
A/C No:57500000199320
HDFC Bank, R.K.Salai Branch,
Chennai - 600 004, IFSC : HDFC0001097



# பாரபட்சம் வேண்டாம்

- சாந்தா மோகன்,
- சொக்கலிங்கம் புதூர்

சீர்மிகு செட்டிநாட்டில் வசித்த, வசிக்கும் செட்டியார்கள், ஆச்சிமார்கள் வீட்டில் நடக்கும் சின்னச் சின்ன குறைகள்.

செட்டியார்கள் என்றாலே சிக்கனமானவர்கள். அதிலும் ஆச்சிமார்களின் கைகள் இருக்கிறதே அவை கருணைக்கிழங்கு, ஆனால், அவர்கள் பெண் பிள்ளைகளுக்குச் செய்யும் போது தாரளமாக இருக்கும். கைகள் விரியும். பையன்களுக்குச் செய்யும் போது கைகள் மடங்கிப் போகும். ஒரு பெற்றோர்க்கு இரண்டு பிள்ளைகள். பெண் பிள்ளை ஒன்று, பையன் ஒன்று. என்று வைத்துக் கொள்வோம். இரண்டு பிள்ளைகளும் அவர்களுக்கு இரு கண்கள். மாதிரிதானே, அப்படியிருக்க ஏன் பெண் பிள்ளைகளுக்கு மட்டும் தாரளமாகச் செய்கிறார்கள். பையன்களை படிக்க வைத்து கல்யாணம் செய்தால் போதும் என்று விட்டுவிடுகிறார்கள். பெண் பிள்ளைக்கு கடைசி வரை கட்டிக் காத்து கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். இரண்டு பிள்ளைகளும் அவர்கள் பெற்றதுதானே. பின் ஏன் இந்த பாரபட்சம். எது செய்தாலும் இரண்டு பிள்ளைகளுக்கும் செய்யுங்கள். எது வாங்கினாலும் இரண்டு வாங்கி மகனுக்கு, மகளுக்கு என்று கொடுங்கள்.

எனக்குத் தெரிந்து ஒரு வீட்டில் மகன் பிள்ளைகளைப் படிக்க வைக்கக்கூட கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கையில், அந்தப் பெற்றோர்கள் மகளுக்கு ஏற்கெனவே வைர நகை செய்து கொடுத்து கல்யாணம் செய்த பெண்ணுக்கு 2–ஆவது நகை செய்து கொடுத்தார்கள். கஷ்டப்படும் மகனுக்கு செய்ய மனம் வரவில்லை. மகள் நன்றாக இருக்கும் போது மேலும், மேலும் செய்ய மனம் வருகிறது. அது தவறு. மகனையும், மகளையும் ஒரே மாதிரி நடத்த வேண்டும். கஷ்டத்தில் உதவினால் அதை யாராக இருந்தாலும் மறக்க மாட்டார்கள். சில வீடுகளில் பெற்றோர்கள், அவர்கள் கொடுப்பது போக, மகனையும், நீயும் தங்கச்சிக்குக் கொடு. ஒரு தங்கச்சி தானே என்று கூறிக் கொடுக்கச் சொல்லி கட்டாயப்படுத்துவார்கள். கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் அவரவர்க்கு வரவேண்டும். கட்டாயப்படுத்தக் கூடாது. அதனால் மனக்கசப்பு ஏற்படும். மனம் கஷ்டப்பட்டு செய்யும் எந்தச் செயலும் சந்தோஷத்தைத் தராது.

எனவே, பாசமிகு பெற்றோர்களே, ஆண், பெண் என்று பாராமல் இரண்டு பிள்ளைகளுக்கும், பாசத்தையும் அன்பையும் ஒரே மாதிரி கொடுங்கள். முறை செய்வதையும் ஒரே மாதிரி செய்யுங்கள். பிள்ளைகள் வீட்டில் விசேஷம் நடந்தாலும் அதற்கும் ஒன்று போல செய்யுங்கள். பிரித்துப் பார்க்க வேண்டாம்.

அதுபோல பேசுவதில் கூட பாரபட்சம். மகள் வேலை பார்த்தால் அவள் கஷ்டப்பட்டு வேலை பாக்குறா என்று கூறுவது. மருமகளை அவ என்ன வேலை பாக்குறா என்று குறை கூறுவது. இப்படிப் பேசாமல், மகளையும், மருமகளையும் ஒன்று போல பேச வேண்டும். நமக்கு மகளும் ஒன்னுதான், அடுத்த வீட்டிலிருந்து வந்த மருமகளும் ஒன்னுதான்.

பெற்றோர்களே தராசு போல செயல்படுங்கள். நலமாக இருக்கலாம். நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் அவர் பார்க்கவில்லை. இவர் பார்க்கவில்லை என்று நினைத்து தவறு செய்யக் கூடாது. நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் யாரும் பார்க்கா விட்டாலும், தெய்வங்களும், இந்தப் பிரபஞ்சமும், ஐம்பூதங்களும் பார்த்துக் கொண்டிருப்பதை மனதில் கொள்ள வேண்டும். மகிழ்ச்சியோடு வாழுங்கள். வாழ்க்கை வாழ்வதற்குத் தான் என்பதை யோசித்து நன்னடத்தையோடு செயல்படுங்கள். நல்லதே நடக்கும். மனச்சாட்சி என்று ஒன்று உள்ளது என்பதை மறந்து விடக்கூடாது. ♦


## Form IV (See rule 8)

REGISTRATION OF NEWS PAPERS (CENTRAL) ACT - 1956

**Namadhu Chettinad magazine**

| | |
|---|---|
| 1.Place of Publication | : Chennai - 600006 |
| 2.Periodicity | : Tamil - Monthly |
| 3.Printer's Name | : N.Avadaiappan, |
| Whether Citizen of india | : Yes |
| Address | : 14/9, Parthasarathy Nagar, 8th street extn, Adambakkam, Chennai - 600 088. |
| 4.Publisher's Name | : N.Avadaiappan, M/S Chettinad Print media (p) Ltd, 3rd floor, Rani Seethai Hall Building No.603, Anna Salai, Chennai 600 006. |
| 5.Editor's Name | : N.Avadaiappan, |
| Whether Citizen of india | : Yes |
| Address | : 14/9, Parthasarathy Nagar, 8th street extn., Adambakkam, Chennai - 600088. |
| 6. Name and address of individual who own the news paper and Partners or Share holders holding more than one percent of total capital | : Chettinad print media (p) Ltd., Rani Seethai Hall, 603, Anna salai, Chennai 600 006. |


I, N.Avadaiappan hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd) N.Avadaiappan
PUBLISHER
On behalf of Chettinad print media (p) Ltd.

Date: 10.02.2025




Namadhu Chettinad Published and Printed by N.Avadaiappan on behalf of M/S Chettinad Print Media (P) Ltd., Printed at DOT LINE DATA, New No.3, Old No.2, 21st Avenue, Ashok Nagar, Chennai - 600 083 and Published from Chettinad Print Media (P) Ltd., Rani Seethai Hall Building, 603, Anna Salai, Chennai - 600 006. Editor : N.Avadaiappan


Chettinad
Sarvalokaa Education
International School
Activities that nurture
children
holistically
• Archery
• Theatre
• Dance
• Instrumental Music
• Taekwondo
• Chess
• Soccer
ADMISSIONS OPEN
ENQUIRE FOR DETAILS
044 47429900
73 5872 1784
www.sarvalokaa.org
Cambridge Assessment
International Education

Namadhu Chettinad Tamil Monthly Regd. as Newspaper with RNI No.TNTAM / 2015 / 63956 Postal Registration No.TN/CH(C)583/2025-2027
Licensed to post without prepayment under WPP No.TN/PMG(CCR)/WPP-542/2025-2027 and published on first week of every month.
Posted at Egmore. RMS PATRIKA Channel Posted on 15-21 February - 2025

